# ஆனந்தங் கொள்!

—✻—

மாதுளம் பூப்போல் சிவந்த கொண்டையை
குலுக்கிச் சேவல் குளிர்ச்சியாய் அழைக்க
மார்கழி இருட்டை மிதித்துத், தையின்
முதல் வெளிச்சத்தில் முளைத்த பொங்கலே!
வருக, வருக!! வற்றிய நெஞ்சைப்
புதிய மகிழ்வால் பூக்க வைத்து
தமிழரின் எழுச்சியைத் தடுக்க எண்ணும்
குறுமதி யாளரைக் குனியச் செய்வாய்!
பசித்த சிங்கத்தின் பாத நகங்களில்
சிக்கும் ஆட்டின் சிரமத்தைப்போல—
"அவர்கள்" கொட்டம் அடங்கித் துடிக்கும்
வேளை நெருங்கிவிட்டது என்று
அடையாளமிட்டு ஆனந்தங் கொள்!

இந்நாள்—

ஏரின் தொடுப்பால் கர்ப்ப மான
பூமிப் பெண்ணின் தானியப் பிரசவம்,
அழுத்திய வறுமையால் புழுங்கிய மக்களின்
குடும்பத்தில் மகிழ்ச்சியைக் குந்த வைக்கும்
ஒற்றைத் திருநாள்! உழைப்பின் உற்சவம்!

உன்னால்,

எங்கும் இன்று இன்ப விளைச்சல்
கரும்பின் சாற்றையும் கசக்க வைக்கும்
நல்ல தமிழால் வாழ்த்தி,
கொண்டாடி உன்னைக் கும்பிடுகிறோம்!

'புஷ்லி'

# பொங்கலோ பொங்கல்!

## 1

உலகம் வியக்க நிலவிய புகழும்,
கழகம் வளர்த்த பழந்தமிழ் மொழியும்,
அறநெறி பரப்புங் குறள்முறை தழுவிப்
பிறரைப் பணியாத திறனும் படைத்த
தந்நேர் இல்லாத் தமிழக உழவர்
பொன்னேர் பூட்டிச் செந்நெல் விளைத்தே
ஆண்டின் பயனை அடைந்திடும் பெருநாள்;
தாண்டிடும் உவகையில் துள்ளிடுந்திருநாள்!
ஆயினும், அன்னார் நாயினுங் கீழாய்
நலிந்துள்ளம் நொந்து, மெலிந்துடல் வாடி,
வறண்ட பாலையில், இருண்ட வேளையில்,
திரண்டெழுஞ் சூறையிற் சிக்கியோர்போலத்
திகைத்து மீளவோ வகைத் தெரியாது,
சுதந்திரம் என்ற இதந்தரும் பெயரால்
கொடுங்கோல் ஆட்சிக் கிடங்கொடுத் துயர்த்தித்,
தாய்மொழி மறந்து, தனியர சிழந்து,
வாய்மை தவறி, வாழ்வினில் தாழ்ந்து,
உழைப்பதற் கேற்ற ஊதியம், உயிருடன்
தழைப்பதற்கான சாதனம் இன்றி,
மடியா வறுமைக் கடியவராகி,
முன்னேறும்வழி எந்நாள் வருமெனக்
கண்ணீர் பொங்கிக் காத்திருக் கின்றார்!
பாட்டாளி, மக்கள் படுந்துயர் தொலைத்து
நாட்டிலே இன்ப நலமெலாம் பொங்க
மூட்டுவோம் உணர்வோடு முயற்சித்தீயே!

"கருணா."

## 2

பொங்கும் அலைகடலில் பொன்பொங்கத் தீ வளர்த்துத்
தங்கப் பரிதி தலைநிமிர்ந்தான்; இல்லமெலாம்
பொங்குதடா இன்பம்! புதுப்பானைப் பச்சரிசிப்
பொங்கலோ பொங்கல்! பெரும்பொங்கல் வாழியவே!

ஓடை இசைக்க உயர்ந்து நகை காட்டித்
தோடவிழ்க்குந் தாமரையின் தோள்தழுவும்
செங்கதிரை!
மாடுழுத நன்செய் வளம் பெருக்கும் பொற்கதிரை!
நாடி இடும் நற்பொங்கல் நன்றாளும் வாழியவே!

குட்டை குளஞ்செடிகள் கன்னல் குலைவாழை
மட்டை விர்தென்னை மாப்பரிதி செங்கதிரை
இட்டுமெரு கிட்டின்பம் இட்டுவரக் கன்னியர்கள்
பட்டுடுத்திப் பால்சொரியும் தைப்பொங்கல் வாழியவே!

ஒடுக்கும் குளிர்பனியை ஊர்நிலவும் மையிருட்டை
ஒடுக்கினான் ஒள்பரிதி! வாழ்வும் உயர்ந்ததுவே!
நடுவில்லா நங்கையர்கள் நற்றமிழாம் தேனூற
இடும்பொங்கல்! இன்பத் தமிழ்ப்பொங்கல் வாழியவே!

அரும்பு மிளமீசை ஆளன் அகங்குளிர
அரும்பு நகைகாட்டிப் பொங்கல் அமுதூட்டிக்
கரும்பு கரும்பொடித்தே கண்ணீரைச் சிந்துமிளங்
கரும்பிற்கு அளிக்கும் பெரும் பொங்கல் வாழியவே!

"வாணிதாசன்."

மலர் 9. **திராவிடநாடு** இதழ் 30-31

14—1—51

# ★ இருளில் ஒளி ★

வயலிலே செந்நெல்!
வேலியிலே செங்கரும்பு!
வாளை துள்ளும் ஆறுகள்!
வாவியெலாம் தாமரை!
கழனிகளிலே கருங்குவளை!
சோலையெலாம் கீதமொழி!
மலரிடை வண்டினங்கள்!
செங்கால் நாரை! பைங்கால் கொக்கு!
செல்வமணிகள் இல்லந்தோறும்!
செந்தமிழ் முழக்கம், மன்றமெல்லாம்!

இது தமிழகம்!—இன்றைய தமிழகமல்ல—ஏரும் அதனால் சீரும் சிறந்து இருந்தபோது, கவிஞரின் கண்களுக்குக் காட்சியாக விளங்கிய தமிழகம்.

கதிர் ஒரு முழம் காணும்! கமுகென நீளும்—என்று வியந்து கூறுவார், ஒரு கவிஞர்.

பங்கப் பழனத்து உழும் உழவர், பலவின் கனியைப் பறித்ததென்று சங்கு எடுத்து எறிகின்றனராம், மந்திமீது......மந்தியோ, பலாவிலிருந்து தென்னைக்குத் தாவிச் சென்று, உச்சியில் ஏறி, செவ்விளந் தேங்காயைப் பறித்து உழவர்மீது வீசுகிறதாம்!—இவ்வண்ணம் தீட்டி மகிழ்கிறார், வேறோர் கவிஞர்.

பொதுவாகவே, கவிஞரும் பிறரும், தமிழகத்தின் சீரும் சிறப்பும் மிகுந்து இருந்ததையும், வீரமும் அறமும் செழித்திருந்ததையும், உணர்ச்சி ததும்பக் கூறியுள்ளனர்—தமிழகத்தின் முன்னாள் காட்சி அவ்விதம் இருந்தது.

முன்னாள் பொலிவுக்கும் இந்நாளில் நாம் காணும் நலிவுக்கும் இடையே உள்ள சம்பவச் சுழல்கள் பலப் பல.

"பாத்தியிலே நாத்தை நட்டு பாய்ச்சிடுவோம் தண்ணி ஏத்தத்திலே"—என்ற பண் பாடிடும் உழவர்கள், "கொத்தமல்லி கொட முளகா கொத்தவரை மூளைக் கீரைத் தண்டு" பயிரிட்டு, "பூத்ததையும் காச்சதையும் பொன்னாக்கி" வாழ்வில் வளம் பெற்று, "அத்தை மக வைச்சிடவே அழகான மல்லிப் பூவுமுண்டு" என்று காதல்மொழி பேசி, வாழ்ந்துவந்தனர் ஓர்நாள்!



நாவினை நகரவிடாது தடுக்கும் பசை குழம்பிடும் 'பிரேசில்' அரிசிதானா எமக்கு என்ற ஏக்கம் கந்தைச் சோறு அளவுக்கு வளர்ந்துள்ள இந்நாளிலே செந்நெல், செங்கரும்பு, செந்தமிழ் என்று பேசுவது கூட, கேலிக் கூத்தாகத் தோன்றக்கூடும்! உண்மைதான்! நலிவுற்ற நிலையில் பழைய பொலிவைப் பாடிக் காட்டுவது மனதுக்கு வாட்டம் தருவதாகத்தான் இருக்கும். எனினும், பொங்கற் புதுநாள் எனும் பொன்னான விழாநாளன்று, தமிழரின் திருநாளன்று, நாம் வாழ்ந்த காலமும் உண்டு, நமது நாடு திருநாடாக விளங்கிய நாட்களும் இருந்தன என்று நினைவிலே கொண்டு வருவது, தேவையானது — நைந்திருக்கும் உள்ளத்துக்குப் புதிய நம்பிக்கையூட்டும் மாமருந்தாக அமையக்கூடியதுமாகும். கரிய மேகங்கள் மேலேயும், உடலைச் சிதைக்கும் நச்சுநிறைக் காற்று சுற்றியும் உள்ள நேரத்திலே, நீல நிற வானம், அதில் நீந்தி விளையாடும் நிலவு, மின்னிடும் விண்மீன்கள், மென்காற்று, இவை இருந்த நேரத்தை எண்ணிக்கொள்வது-துவக்கத்தில் ஏக்கம் தருவதாக இருப்பினும், மீண்டும் ஒளியும் களிப்பும் கிடைக்கும், பெறலாம் முயன்றால், என்ற நம்பிக்கையைத் தரவல்லது. எனவேதான், களத்திலே போரும், ஊரிலே சீரும் இல்லாமல், வானத்திலே காரும், ஆறு வாவிகளிலே நீரும் இல்லாமல், அகத்திலே திருப்தியும் முகத்திலே மலர்ச்சியும் இல்லாமல், இல்லங்களிலே இன்பமும் அங்காடிகளிலே அறமும் இல்லாமல், வளம் கெட்டு வாழ்க்கை கெட்டு, வகை குன்றியுள்ளபோது வந்துற்ற இப்பொங்கல் நன்னாளின்போது, முன்னாளில் வாழ்ந்திருந்த நமக்குத்தான் இந்நாளில் இடர்பல வந்துளது என்பதை நினைவூட்டுகிறோம், இந்நாள் இடர்களைக் களைந்தெறியும் உறுதியும் முன்னாள் பொலிவை மீண்டும் பெறவேண்டும் என்ற நம்பிக்கையும் பெறவேண்டும், என்ற நல்லெண்ணத்துடன்.

உடைந்துபோன கண்ணாடியின் ஒரு துண்டு கொண்டு பார்ப்பினும் உருவம் தெரிவதுபோல, தேய்ந்துள்ள தமிழகத்தின், நலிந்துள்ள நிலையிலும், இப் பொங்கற் புதுநாள் என்று, ஒருவகை இன்பம் தெரியத்தான் செய்கிறது. மனைதோறும் மனைதோறும், மக்கள் மகிழ்ச்சியை வேட்டையாடியேனும் பிடித்துக் கொண்டுவந்து வைத்து விளையாடிக் கொண்டு இருக்கக் காண்கிறோம்

பொங்கற் புது நாளன்று திங்கள் முகத் தையலரும் ஏறுநடை ஆடவரும், குழலையும் யாழையும் வெல்லும் கொஞ்சு மொழிச் சிறாரும், மகிழ்வெய்திட வேண்டும் என்ற நம் செங்கரும்புக் கருத்தை இல்லந் தோறும் தருகிறோம். இது போதாது—நிறை இன்பம் பெறவேண்டும் — பெறத்தான் போகிறோம் — இனி வரும் பொங்கற் புதுநாட்களிலே, என்ற நம்பிக்கையை அனைவரும் பெறவேண்டுகிறோம். உள்ளம் உடைந்து போகாதிருக்க இந்த ஊன்றுகோல் மிக மிகத் தேவை!

ஏடெலாம், நாட்டிலே காணப்படும் சீர்கேடுகளைக் காட்டுகின்றன. மாரி பொய்த்துவிட்டது — வளம் புகைந்து போய்விட்டது — வலிவிழந்து, எவ்வகைச் சிறு பிணி தாக்கினாலும் தீய்ந்து போகக்கூடிய நிலையில் உள்ளனர் மக்கள். உழவுத் தொழில் உருக்குலைந்து போய்க் கிடக்கிறது! நெசவு நசித்துக் கொண்டிருக்கிறது! இப்பெருந் தொழில் இரண்டையுமன்றோ நம் நாட்டின் பெரும் பான்மையினர் நம்பி வாழ்கின்றனர்—எனவே இவ்விரு முனைகளிலும் ஏற்பட்ட இடர், நாட்டைச் சீர்குலைத்துவிட்டது. கேட்டினைக் களைய வாரீர்—என்ற வேண்டுகோள் விம்மலாகி, பிறகு பரணியுமாகி விட்டது-பயனைத்தான் பெறக் காணோம்! வயல்கள் வெடித்துக் கிடக்கின்றன—நரிக் குழிகள் கண்ணீரால் நிரப்பப்பட்டு வருகின்றன.

'பொன் பூத்த பூமி' என்று புகழப்படும் நாட்டிலே, நாள்தோறும் ஊர்தோறும் பட்டினி ஊர்வலங்கள்! பட்டினி ஊர்வலம் நடைபெறும் நாட்களில், பாற் பொங்கலிட்டு, தேன் மொழிபேசி, கருப்பஞ்சாறு போன்ற கருத்தினைப் பெற்று மகிழ்ந்திட எங்ஙனம் இயலும்! பெரியதோர் புயலடித்த பிறகு பூந்தோட்டம் புகுந்து பார்த்தால் என்ன நிலை இருக்குமோ, அது இதுபோது, நாட்டு நிலை!

சோறு கொடு!—மக்கள் கேட்கின்றனர், ஆளவந்தார்களைப் பார்த்து.

"நெல் கொடு"—மக்களைக் கேட்கின்றனர் ஆளவந்தார்கள்!

"உணவுக்குத் திண்டாட்டமாகிவிட்டது, ஊராள்வோரே! இடுக்கண் களைய முன் வாருங்கள்" என்று அழைக்கின்றனர் மக்கள்—ஆட்சியாளர்களை!

"மரம் நடு விழாவுக்கு வாருங்கள்—மரம் வளர மாரி வளரும், மணி நெல் குவியும், பசிநோய் போகும்"—என்று விளக்கம் பேசுகிறார்கள், நாடாள்வோர்.

"இருட்டிய பிறகு வா—இரண்டே கால் ரூபாய்!"—என்று உருட்டுவிழிக்காரன் கூறுகிறான்—"அந்தத் திருட்டு உணவும் கிடைக்காவிட்டால் தில்லை சென்ற நந்தன்தான் நாமும்!" என்று கூறிச் செல்கிறார்கள், மக்கள்—கள்ள மார்க்கட்டைத் தேடி!

ஒன்றல்ல ஓராயிரம், நாட்டிலே உள்ள தொல்லைகள்.

உலகமோ உன்மத்தர்களின் உறைவிடமாகிவிடுமோ என்று அஞ்ச வேண்டிய நிலைமையை அணைத்துக் கொண்டிருக்கிறது. சமாதானத்தை நிலைநாட்ட ராணுவத் தலைவர்கள் பெரும்பணி புரிந்தவண்ணம் உள்ளனர்! ஐக்ய நாடுகள் சபைக்கு, அமெரிக்க ஆயுதக் கிடங்கு அதிபர்களின் 'வாழ்த்து' வழங்கப்பட்டவண்ணம் இருக்கிறது. நெற்களத்திலேதான் போர் காணோம், உலக அரங்கிலே—களத்திலே கடும்போர் நடந்தவண்ணம் இருக்கிறது, மன்றங்களிலேயோ அதைவிடக் கடுமையான சொற் போரும் நடைபெற்றபடி இருக்கிறது! கரும்புதான் கிடைக்கவில்லை மக்களுக்கு, வாழ்வில் சுவைதர—மக்களுக்குச் சாவு தரும் இரும்போ ஏராளம் — ஏராளம் — வெட்டி எடுக்கும் இரும்பைவிட, வஞ்சக நெஞ்சுகளிலே விளையும் இருப்பு அதிகம்.

இந்நிலையில் பொங்கற் புதுநாள்!—இருளிடை சிறு ஒளி என்போம் இதனை—ஒளிசிறிது எனினும் இருளிடை மின்னிடுவதால் அதன் 'தரம்' பெரிது; இந்த "ஒளி" வளர்ந்து வளர்ந்து, இனிவரும் பொங்கற் புது நாளைக்குள் நமது வாழ்வின் திருவிளக்காக அமையட்டும் என்ற நல்லெண்ணத்தைச் சமைத்து உண்போம், இன்று.

பொங்கற் புதுநாளெனும் தமிழர் திருநாள்—பொய்யுரையின்மீது கட்டப்பட்ட பூஜாரிவிழாக்களிலே ஒன்றல்ல—தனித் தமிழ்த் திருநாள்!—சருத்தளிக்கும் பெருநாள்!

தமிழன் உழைப்போரை உயர்த்திடும் பண்பையும், உழைப்பின் பயனை ஊருடன் கூடி உண்டு இன்பம் பெறும் பண்பையும் வளர்த்துக் கொள்ள வந்தது பொங்கற் புதுநாள்!

அறுவடைவிழா!—விதைக்காது விளைந்த கழனியிலிருந்து வந்த செந்நெல்லைக் குத்தாது அரிசியாக்கி வேகாது வடித்தெடுத்து உண்ணாது காக்கைக்கு வீசிடும் உலுத்தர் விழாவல்ல—உழைத்தோம் பலன் கண்டோம் — கண்டபலனை மற்றவருடன் கலந்து உண்டு மகிழ்வோம், என்ற உயரிய நோக்குடைய விழா!

கோல வளைகுலுங்க, குறுநடைச் சிறுவன் முந்தானையைப் பற்றி இழுக்க "கூப்பிடடி உன் அப்பாவை, இந்தக் குறும்பனை எடுத்துப் போகச் சொல்லு" என்று மூத்த மகனை, முற்றத்திலே துத்திப்பூப்போன்ற துகிலைப் பார்த்து மகிழ்ந்திருக்கும் ஆணழகனிடம் தூது அனுப்பும், தோகை மயிலாள் தீட்டிடும் வண்ணக் கோலம் இல்ல முகப்பில் வரவேற்புக் கூறி நிற்கும்—உள்ளே சென்றால், அன்பு வழியும் விழியும் அகங்குழையும் மொழியும், இன்புறச் செய்யும்-பிறகே பாகுகலந்த பாற் பொங்கல்—பற்பல கனிவகைகள்!—இது போல் இருந்திடும் இயல்பினைப் பெற்றது பொங்கற் புதுநாள்! இந்நாளில், சோளமோ வரகோ, ராகியோ எதுவோ —கிடைக்காதா என்ற ஏக்கத்தைத்தான் பொங்கலைத்துக் காண்கிறார்கள் மிகப் பெரும்பாலான மக்கள். வேறு எந்த நாடாக இருப்பினும் இத்தனை

இடரிடை தள்ளப்பட்ட மக்கள், நாட்டைக் காடாக்கி விட்டிருப்பர் — நந்தமிழ் நாட்டினரோ, நலிவு நீக்கப் படக்கூடியது, பொலிவு திரும்பப் பெறக் கூடியது, என்ற எண்ணத்தைத் தோணியாக்கி வாழ்க்கைக் கடலிலே வரையற்ற ஆட்சி எனும் புயலையும் சமாளித்துக் கொண்டு சென்று கொண்டுள்ளனர். அவர்தம் பெரு நோக்கும் அற உணர்ச்சியும்தான், அரசைக் காப்பாற்றி வருகிறது, படையும் தடையும் அல்ல!

இந்தப் பண்பை நாம் பாராட்டுகிறோம் — இது போன்ற பண்பு பயன் தரும் என்றும் உறுதியாக நம்புகிறோம்.

நாட்டிலே நல்லறிவு பரப்பும் பணி இடையறாது நடைபெற்ற வண்ணமிருக்கிறது—மணியின்மீது பூசப் பட்டுக் கிடக்கும் மாசு துடைக்கப்பட்டே தீரும். நாட்டுப் பற்று, இனப் பற்று, மொழிப் பற்று, வளமாகிக்கொண்டு வருகிறது. வல்லூறுகள் சில அங்கு மிங்கும் வட்டமிட்ட போதிலும், சிங்காரச் சிட்டுகள் செயலாற்றி வருகின்றன! அறிவு பரவிக்கொண்டிருக்கிறது — ஆதிக்கக்காரர்கள் அச்சத்தால் தாக்கப்பட்டுள்ளனர்—அவர்கள் நச்சு நினைப்பு ஒழியவில்லை என்றபோதிலும், நாசக் காரத்துக்கு முன்னைய வலிவு இல்லை. கனிமொழி பயின்று இன்னும் சில காலம் இரைதேடி வாழ்வோமா என்ற நச்சு நினைப்புடன் கழுகுகள் சிறகடித்து கிடக்கின்றன —அறிவுக் கண்கொண்டு காணலாம் இக்காட்சியை. கொள்கைக்கும் திட்டத்துக்கும் இதுபோது எதிர்ப்பு முறிந்துபோய்விட்டது-உரைப்பவரின் உருவம் பருவம், உறவு குறைவு, இவை பற்றிய அந்தாதி பாடிடும் நிலைக்கு வந்துள்ளனர்—கடைசி கட்டத்துக்கு—மாற்றுக் கருத்தினர்—மன்னிக்க வேண்டும்!—மாற்றுக் கருத்தினரல்ல, மாற்றுக் கட்சியினர்!!

திராவிட முன்னேற்றக் கழக முன்னணி வீரர்கள்,-கழகத்தின் முக்கிய பதவிப் புகளில் பங்கு கொண்டு ஓயாது உழைத்து வரும் செயற்குழு உறுப்பினர்கள், திராவிடமெங்கும், கழக இலட்சியங்களை பரப்பிடப் பாடுபடும் தோழர்கள்-நம் கழகக் கோட்பாடுகளை, அறியும் ஆவலுடன், நம்முடன் நெருங்கி வந்து, நேர்மையாக செவி கொடுத்து, தீர்ப்பளிக்கும் பொதுமக்கள் எல்லோருக்கும் இப் பொங்கல் நன்னாளில் என் உளங்கனிந்த வாழ்த்துகள்!

**அண்ணாதுரை**

ஏ மணியினரின் அகமகிழும் விதமான "திருத்தும் தொண்டு" நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மொழியிலே புது எழில் பூத்துக் காணப்படுகிறது.

'ராஜ்யம்' மறைந்து அரசு வந்துவிட்டது! சபை போய்விட்டது, மன்றம் தெரிகிறது, பேரிகை இல்லை, முரசு முழங்குகிறது, மாஜி மந்திரி இல்லை, முன்னாள் அமைச்சர் தெரிகிறார், சத்யாக்ரஹம் மாறி அறப்போர் பேசப்படுகிறது, சேனாதிபதியைக் காணோம் தளபதி கரியப்பா வருகிறார், மஹாநாடு நடைபெறுவதில்லை மாநாடு நடைபெறுகிறது, ஜில்லா, மாவட்டமாகி, மாகாணம் மாநிலம் ஆகிவிட்டது-தமிழ் வெல்கிறது, தமிழின் மாற்றார்களோ என்று யாரரைப் பற்றி அஞ்சுவோமோ அவர்களின் அருந்தொண்டும் தமிழுக்குக் கிடைக்கிறது!

கலையிலே புதுக் கருத்துகள் மலர்ந்து பழய பிணிகளைப் போக்கும் மணம் பரவிக்கொண்டிருக்கிறது.

முதலில் கிழக்கு தெரியப் படுகிறது — ஒளி வெளி வருகிறது. இருட்டில் இலாபம் கண்ட இயல்பினருக்கு 'ஒளி'யின் முதல் தாக்குதல் அதிர்ச்சியைத் தருகிறது —எனவேதான் அலறல் கேட்கப்படுகிறது, அங்கும் இங்கும்.

மொத்தத்தில் பார்க்கும் போது, புது வாழ்வுக்கான முயற்சி—விடுதலைக்கான அறப்போர்-பயனளிக்கத் தொடங்கி விட்டது. இவ்வளவு இடுக்கண்களுக்கிடையே நின்றே இந்த அளவுக்கு வெற்றிகாண முடிகிறது என்றால், சிறிதளவு வசதியும் கிடைத்தால், எத்தனை விரைவில் முழு வெற்றி காண இயலும் என்ற எண்ணம் தோன்றுகிறது—அந்த எண்ணத்தின்முன்பு, தூற்றல் பாணங்கள் தூள்—தூள்!!

நாடு சீர்குலைந்திருக்கிறது—மறுப்பார் இல்லை—"நீ யார் சொல்ல?"—என்று கேட்பவர் சிலர் உளர்!

"நாட்டின் சீர்கேடு போக்கியாக வேண்டும்"—ஆம், என்கின்றனர் அனைவரும்—"அதனைச் செய்தல் எமது கடமை—கூறிடும் உன்னை விட்டிடோம் கண்டாய்!" —என்று சீற்றச் சிந்து பாடிடுவோர் சிலர் உளர்!

ஆலயங்களிலே சீர்திருத்த முறைகள்! மடாலயங்களிலே சீர்திருத்த முறைகள்! மணவினை முறைகளிலே புதுமைகள்!—ஒன்றல்ல, பல—பல துறைகளிலும், அறிவுப்

திருநாட்டின் எழிலையும் எல்லையையும் மக்கள் கேட்கத் தலைப்பட்டு விட்டார்கள். கேளாக் காதினரல்ல நாங்கள் என்கின்றனர் கேரளத்தார்-அறிய விழைகிறோம் என்கின்றனர் ஆந்திரர்-கருத்தறிய விழைகிறோம் என்கின்றனர் கன்னடர் — எங்கும் 'அறிந்து கொள்ள வேண்டும்'—என்ற ஆர்வம் அரும்புகிறது-எனவே திராவிடத்தின் பகைவர்களின் அச்சமும் ஆர்ப்பரிப்பாகத் தலைகாட்டுகிறது.

ஒரு நாட்டின் விடுதலைக்கும் ஒருநாட்டு மக்களின் புதுவாழ்வுக்கும் தேவையான சூழ்நிலை அழகாக அமைந்திருக்கிறது. இவ்வாண்டு பொங்கற் புதுநாளன்று இந்த எண்ணம் பாலும் பருப்பும் பாகும்

கலந்த மூல்லை நிறச் சோற்றினைப் பெருமயிருந்த போதிலும், நமக்கு இன்பந் தருவதாக அமைந்திருக்கிறது.

திராவிடத்தின் உரிமைக் கிளர்ச்சிக்காக உள்ளன்புடன் பாடுபட்டு, கருத்துக்கு மதிப்பளிக்கும் கண்ணியத்தை மறந்த ஆளவந்தார்களின் தடியடிக்கு ஆளாகித் தழும்புகளைப் பெற்றுள்ளனர் — பல தோழர்கள். இந்தத் தழும்புகளைத் தடவிப் பார்த்துக்கொள்ளும்போது, இதனை மற்றவர்காணும்போது ஏற்படும் இன்ப உணர்ச்சி இவ்வாண்டு பொங்கற் புதுநாள் விழாவிலே பல பல இல்லங்களுக்குக் கிடைத்திருக்கிறது. அந்த இல்லங்களில் திராவிடத்தைக் கப்பிக் கொண்டுள்ள இருளை விரட்டும் வீர விளக்குகள் ஒளி விட்டுக் கொண்டுள்ளன. வளர்க அந்த ஒளி!

பல தோழர்கள், திராவிடத்தின் உரிமைக்காக உழைத்ததற்காக சிறையிலே தள்ளப்பட்டுள்ளனர் 'அன்பாட்சி நடத்துபவர்களால். நாம் வெளியே உலவி, இல்லங்களிலே பொங்கற் புதுநாள் விழா கொண்டாடும் இவ்வேளையில, அவர்கள், பூட்டிய அறைகளுக்குள்ளே, கம்பிகளைத் தடவியபடி உள்ளனர். மனக்கண் முன் அந்தக் காட்சி தெரியத்தான் செய்கிறது. அவர்களை நாம் 'வாடவைத்து' இங்கு விழா கொண்டாடுவதா— என்ற எண்ணம்கூடக் குடைகிறது மனதில் ஒரு கணம்-மறு கணமோ, கவலை அல்ல நாம் பெறவேண்டிய உணர்ச்சி, கடமைக்காக கஷ்ட நஷ்டம் ஏற்கும் காளைகள் திராவிடத்திலே உள்ளனர், என்ற பெருமை தேடித்தரும் திருத்தொண்டு செய்துவரும் தோழர்கள் அவர்கள்; அவர்களின் வீரத்தை எண்ணி புத்துணர்ச்சியும் புது நம்பிக்கையும் பெறுபவர்கள் நாம். சிறையில் உள்ள தோழர்களுக்கு நமது நன்றியறிதலைப் பொங்கற் புதுநாளன்று தெரிவித்துக் கொள்கிறோம்— அவர்களைச் சிறையில இருக்கவிட்டு ஏக்கமடைந்துள்ள இல்லங்களுக்கு, "ஏக்கம் விடுக! உமது வீரப் புதல்வர்கள் விடுதலைப்போரிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களின் அறிவாற்றலால விளையும் இன்பத்தை அறுவடை செய்து திராவிடம் சிறப்புறப் போகிறது-எனவே மகிழ்ச்சி பெறுங்கள், நாட்டை மீட்கும் நற்றொண்டு புரிபவர் நமது மக்கள் என்ற எண்ணம் கொள்ளுங்கள்" என்று கூறுகிறோம்.

பொங்கற் புதுநாளன்று மகிழ்வு பெற்று, மனதில் புத்துணர்ச்சி பெற்று, நாட்டுக்குப் பணியாற்றும் நல்லெண்ணம் பெற்று, அனைவரும் வாழ விழைகிறோம் வணக்கம்.

—அண்ணாதுரை.

## தோழர்களுக்கு

பொங்கல் விழாவை யொட்டி, 'திராவிட நாடு' அலுவலகத் தோழர்களுக்கு ஒரு வார ஓய்வு தரப்பட்டுள்ளது.

ஆகவே 21-1-51 இதழ் வெளிவராது. 28-1-51 இதழ் வழக்கம்போல் வெளிவரும்.

நிர்வாகி

# பக்தூனிஸ்தான்

★

பக்தூனிஸ்தான்—பாகிஸ்தான் அல்ல, பாகிஸ்தானில் ஒரு பகுதி-தனி உரிமை கேட்கிறது. பக்தூனிஸ்தான் என்ற தனியரசு அமைத்துக் கொள்ள முயற்சி நடைபெறுகிறது.

பாகிஸ்தான், கேட்கப்பட்டபோது அது தனி நாடாக வாழ முடியாது, திறமும் வளமும் கிடையாது, ஒரு சிறு துண்டு எப்படி சிறப்பாகத் தனியாக வாழ முடியும் என்று பேசப்பட்டு வந்தது-பேசினவர்கள், கேட்டவர்கள் இரு சாராருக்கும் நினைவிருக்கும். பக்தூனிஸ்தான், தனியாகச் சிறப்பாக வாழக் கூடிய தகுதியும் திறமையும் பெற்றதல்ல என்று எந்த பாகிஸ்தானைப் பற்றிப் பேசப்பட்டு வந்ததோ அதிலே ஒரு பகுதி-மிகச் சிறு துண்டு.

எனினும் பக்தூனிஸ்தான் கிளர்ச்சிக்குக், கண்டனமும் கேலியுமல்ல, ஆதரவும் பிரசாரமும் உருவாகிக் கொண்டிருக்கிறது. 'தேசிய'த் தோழர்களால் தாக்கப்படும் "திராவிட நாடு"—பக்தூனிஸ்தானைப் போல எவ்வளவு மடங்கு பெரியது என்பதைப் பூகோளம் காட்டும்—கண்ணுள்ளோர், வேறு வேலைகள் முடிந்த பிறகாவது, காணவேண்டுகிறோம்.

பக்தூனிஸ்தான், பைத்தியக்காரன்தான் என்று, பேசக் காணோம், இங்கு.

திராவிட நாடு—என்ற உடன் தீப்பொறி பறக்கிறது

பக்தூனிஸ்தான்—இங்கு உள்ள மக்கள் முஸ்லிம்கள் தான். பாகிஸ்தானில் உள்ளது போலவே.

எனினும், பட்டாணியர்கள் தனி இனம், தனிப் பண்பு கொண்டவர்கள், எனவே அவர்கள் தனி அரசு அமைத்துக் கொள்ளவேண்டும், ஆகவே பக்தூனிஸ்தான் தரப்படவேண்டும் என்று கேட்கப்படுகிறது. பக்தூனிஸ்தான் கேட்பவர்கள் அவ்விதம் தானே பேசுவார்கள் இதிலென்ன ஆச்சரியம், என்பீர்கள். பக்தூனிஸ்தான் வேண்டுமென்று பட்டாணியர் கேட்பது அல்ல, ஆச்சரியமான விஷயம்—அதை அல்ல நான் சுட்டிக் காட்டுவது; இந்த பக்தூனிஸ்தான் அளிக்கத்தான் வேண்டும் என்று, 'கல்கி' ஆதரித்து எழுதுகிறது.

ஆமாம்-திராவிட நாடு கேட்பது பைத்யக்காரத்தனம் என்று கூறும், 'கல்கி'யேதான்! ஏன்? என்று கேட்கிறீர்களா? நான் உங்களைக் கேட்கிறேனய்யா உங்களைக் கேட்கிறேன், பக்தூனிஸ்தானை ஆதரிக்கும் கல்கி, திராவிட நாடு திட்டத்தை எதிர்த்து ஏளனம் செய்யக் காரணம் என்னவென்று!

★

# ★ கல் சொல்லும் கதை! ★

★

ஒரு கல் கதை சொல்கிறது உலகுக்கு.

உறங்கிக் கொண்டிருக்கும் உலகை எழுப்பிக் கதை கூறுகிறது ஒரு கல்!

'திராவிடநாடு' வேண்டுமென்று கேட்கும் நம்மைக் கல்கொண்டு தாக்கும் நண்பர்கள் கூடக் கேட்கவேண்டுகிறேன், கல் சொல்லும் கதையை.

சாதாரணக் கல்தான்—ஆனால், சரித்திரத்திலே இடம் பெற்ற கல் அது.

இங்கிலாந்து — ஸ்காத்லாந்து இரண்டு வேறு நாடுகள்—எனினும் இரண்டுக்கும் ஒரே அரசு.

பிரிட்டிஷ். மன்னரேதான் ஸ்காத்லாந்தையும் ஆளுகிறார், இப்போது.

எனினும், ஸ்காத்லாந்து தனி நாடாக வாழ்ந்து வந்த காலமும் உண்டு,

இரு தனித் தனி அரசுகள் இருந்தபோது-கொள்வினை கொடுப்பினையும் உண்டு, கொலையும் போரும் உண்டு இரு அரசுகளுக்கிடையே

முதலாம் ஜேம்ஸ்—என்ற மன்னன்தான், முதலாவதாக ஸ்காத்லாந்து இங்கிலாந்து இரண்டு நாடுகளுக்கும் 'ஒரே அரசு' செலுத்தத் தொடங்கியவர்,

இப்போது ஸ்காத்லாந்துக்குத் தனி அரசு கிடையாது.

பிரிட்டிஷ் பார்லிமெண்டிலே ஸ்காத்லாந்து நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருக்கிறார்கள்.

இருநாடுகளும் ஒரே அரசின்கீழ், இவ்வளவு காலமாக இருந்தும்கூட, ஸ்காத்லாந்து நாட்டிலே, தனி நாட்டவர் என்ற உணர்ச்சி அடியோடு உருத் தெறியாமல் போய்விடவில்லை.

இங்கிலீஷ்காரரும், ஸ்காத்லாந்துக்காரரும், கிருஸ்தவ மதம்தான். எனினும், தாங்கள் தனி நாட்டவர், என்ற எண்ணம், பட்டுப்போனதாகக் கருதப்பட்ட எண்ணம் துளிர்விட்டு தழைத்துவருகிறது. அதற்கு 'உரம்' போட, ஒருகல், பயன்பட்டிருக்கிறது. இந்தக் கல்—ஒரு பீடம்—அரச பீடம்! மன்னராக முடிதரித்துக் கொள்கிறவர் இந்தக் கல்லின்மீது அமருவாராம் முதலில்.

எனவே இந்தக் 'கல்' ஸ்காத்லாந்துக்குச் சொந்தமானதாம்—அங்கிருந்து இதனை எடுத்துக்கொண்டு சென்றனராம் இங்கிலாந்து நாட்டுக்கு அந்த வெஸ்ட் மினிஸ்டர் எனும் இடத்தில் இந்தக் 'கல்' வைக்கப்பட்டது. இரு நாடுகளும் ஒரு அரசாட்சியின் கீழ் வந்த பிறகும், இந்தக் 'கல்' மீது உட்காருவாராம மன்னராக வேண்டியவர், முடி தரித்துக்கொள்ளும் போது. அந்தக் 'கல்' களவாடப்பட்டிருக்கிறது!

சில காலமாகவே, ஸ்காத்லாந்து மீண்டும் 'தனி அரசு' ஆகவேண்டும் என்ற கிளர்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தக் கிளர்ச்சியின் எதிரொலி பிரிட்டிஷ் பார்லிமெண்டிலேயும் கேட்கப்பட்டது.

ஸ்காத்லாந்தின் தனி அரசை முன்னாட்களில் காப்பாற்றுவதற்காகக் கடும் போரிட்ட வரலாறு, மீண்டும் பேசப்படுகிறதாம், ஸ்காத்லாந்தில். ஸ்காத்லாந்தின் வீரப் புதல்வர்கள், வாலஸ், போன்றவர்களைப் பற்றிய கதை பேசப்பட்டு கவிதைகள் பாடப்பட்டு வருகின்றனவாம், அங்கு.

ஏன் நாங்கள் தனியாட்சி நடத்தக்கூடாது-என்று கேட்கின்றனராம், ஸ்காத்லாந்தில் பல தலைவர்கள்.

இந்தக் கிளர்ச்சிக்காக ஒன்றல்ல பல இயக்கங்கள் உருவாகி உள்ளனவாம்.

'கல்' திருடு போவதற்கு முன்பே, பிரிட்டிஷ் சர்க்காருக்கு, 'தகவல்' அனுப்பினனும், ஸ்காத்லாந்து நாட்டவன் யாரோ ஒருவன். "கண்ணியமாக எங்கள் நாட்டுக் கல்லை எங்கள் நாட்டுக்கே திருப்பிக் கொடுத்துவிடு, இல்லையானல்......!" என்று, "இல்லையானல...!"—என்பது யாரோ ஒரு பித்தன் பிதற்றல் என்று பிரிட்டிஷ் சர்க்கார் எண்ணிக்கொண்டிருந்தனர். இப்போது "கல்" காணப்படவில்லை!

காணமற்போன கல் — மறைக்கப்பட்டிருக்கும் ஒரு கிளர்ச்சியை உலகுக்கு எடுத்துக்கூறப் பயன்பட்டுவிட்டது.

ஸ்காத்லாந்து, தனி நாடாக, தனி அரசாக, அமைய வேண்டும் என்று விரும்புகிறது என்ற கதையைக் கல் கூறுகிறது.

ஸ்காத்லாந்தின் அளவு! 30406 சதுரமைல். அதாவது நாம் கோரும் திராவிடநாட்டைவிட ஐந்து மடங்கு சிறியது.

ஸ்காத்லாந்தின் மக்கள் தொகை: சுமார் 50 லட்சம்தான்.

ஸ்காத்லாந்தும் இங்கிலாந்தும் ஒரே அரசின் கீழ் கொண்டுவரப்பட்டது 1603-ம் ஆண்டில். எனினும் இப்போது ஸ்காத்லாந்து தனி நாடாக வேண்டும் என்று கேட்கிறது.

247 ஆண்டுகள் ஆகிவிட்டன! ஸ்காத்லாந்து இணைக்கப்பட்டு; ஆயினும், ஸ்காத்லாந்து மக்களின் உரிமை ஆசை மங்கிவிடவில்லை. 'கிரேட்—பிரிட்டன்' என்று பெருமிதமாகக் கூறிக்கொள்ளும் பிரிட்டிஷ் பார்லிமெண்டிலிருந்து விலகி, தனிநாடாக. வாழவேண்டும் என்று கிளர்ச்சியைத் துவக்கிவிட்டனர்.

திராவிடநாடு தனி நாடாக வேண்டும் என்று கேட்கும் நம்மீது கல் வீசும் நண்பர்கள், இந்த 'கல்' சொல்லும் கதையைக் கருத்திலிருத்த வேண்டுகிறோம். கல்லும் சொல்லாதோ கதை!—என்று எப்போதோ படித்ததாக நினைவு, இதோ ஒரு கல் கதை சொல்கிறது—கருத்துக்குத் தெளிவளிக்கும் கதை.

—x—

# தியாகவல்லி

[அண்ணல்]

பருவ மலர்! கூறத் தோன்றும், அழகு விளையாடும் இத்திரு உருவத்தைக் கண்டதும்.

இளமை கொழிக்கும் இந்த முகப் - ஒரு இன்ப நிலவு; அழகைச் சொல்லும் அந்த இலேசான புன்னகை— ஒரு மின் வெட்டு; வாழ்க்கைப் பாதையை எட்டிப் பார்க்கும் அந்த இரு விழிகளும்—மொழியின் தூதுவர்கள் — என்றெல்லாம் வர்ணிக்கத் தூண்டும்.

வசிகரம் துள்ளி விளையாடும், அம்முகத்தை, இப்போது ஒருமுறை பாருங்கள்.

வருவது வரட்டும்!–என்ற, அலட்சியத்தைக் காட்டுகிறதா, அந்தப் புன்னகை?

துடுக்குக்கண்கள் 'என்னால், எல்லாம் முடியும்' என்று சொல்கின்றனவா?

'ஆச்சரியப்படுவீர்கள்! ஆமாம், நான் அழகிமட்டுமல்ல; ஆகாது—முடியாது என்று கூறியதையெல்லாம் செய்து காட்டியவள். ஆயிரமாயிரம் வீரர்களோடு போரிட்டு—வீழ்த்தியவள்' என்று சிரித்துக் கூறுவது தென்படுகிறதா?

ஆயிரமாயிரம் என்ன? இச்சித்திரப்பாவையின் சிறுபார்வை பட்டால் போதுமே—பம்பரமாகிவிடுவரே, பார்வையில் பட்டோர்! காரிகைகளின் கண் வீச்சு இலேசா, 'கந்தமூலாதி' தின்று உலவிய தபோதனர்களிருந்த, மாளிகைகளையும், மன்னாதி மன்னர்களையும் காலடியில் வீழ்த்தியதாயிற்றே! இந்த அழகு வடிவத்திடம், சிக்கிச்சிதைந்தனர் பலர் என்றால், இதிலென்ன ஆச்சரியமாம்! என்றுகூட கேட்க நினைப்பர், நமது 'கம்பர் தம்பிகள்!'

ஆனால் இந்த அழகு வடிவம் — தனது கண் வீச்சால் அல்ல; கைவீச்சால் பல்லாயிரக்கணக்கானோரை பிணமலையாக்கிய, இலட்சியச் சிற்பம்.

"காதல்! காதல்!!' என்று கன்னத்தில் வர்ணப்பூச்சும், கருத்தில் அலைமோதும் காதல் வீச்சும் கொண்டு 'வாலிபம் பொல்லாது! வாழ்விது நில்லாது!' என்று பாடக்கூடிய வயதுடைய இப்பருவ மலர், இளமங்கை—ரஷ்ய சமுதாயத்தின் புகழ்ச்சிச் சின்னம். 'வர்ணச் சேலை, வசிகரச்சேலை, வாய்க்குமெப்போது நமக்கு நல்

லை!' என்று கண் ஒரு பக்கமும், ருத்து வேறு திசையிலும், கூத்தாட்டம் போடக்கூடிய, வாலிப வயதில, தன் வாழ்வைத் தூள் தூளாக்கிக் கொண்ட தியாகவல்லி — சிந்தனைச் சோலையாம் ரஷ்ய நாட்டிலே மலர்ந்த நல் ரோஜா!

வாடாத ரோஜா! — ஆம், இந்தப் பெயரைத்தான், பலர், அவளுக்குச் சூட்டினர் — பாராட்டினர். ஆனால், அவளை நினைத்தாலே கண்ணீர் வடிக்கும் அவள் தாய், இட்டு, அழைத்து, மகிழ்ந்த பெயர் நடல்யா.

நடல்யா, 'ரஷ்ய மாதா'வின் புகழை அலங்கரிக்கும் நல்முத்து. வீரசமுதாயம், என்று உலகுக்கு ரஷ்ய பூமியை அறிமுகப்படுத்தும் நல் ஓவியம். நாசத்தை எதிர்த்துப்போராடி, நல்லது என்று நினைத்ததைக்காக் கத்தன்னையே மாய்த்துக்கொண்ட மணிச்சுடர்! மங்காத மாணிக்கம்!!

பெண் என்றால், 'பிடில் வாத்தியார் வந்தாரா?' 'பின்னல் போட்டாய்விட்டதா?', 'பாக்கு கலர் பாவாடையா? மூக்குத்தூள் கலர் முந்தாணி வைத்ததா?' என்று கேட்டு, அவைகளைத் தந்து சீராட்டி, பாராட்டி வளர்க்க வேண்டும் என்று இங்குள்ள 'அம்மாக்கள்' கருதுகிறார்களல்லவா!

இதோ, நடல்யாவின் அம்மா அரலோவெட்ஸ்—கோவ்ஷோவா, தன் செல்வச் சிற்பத்தைப்பற்றிப் பேசுகிறார்—கேளுங்கள்:

"அரலோ—எப்படியம்மா, உன் மகள் இவ்வளவு பெரியவள் ஆனாள்?" என்று அக்கம்பக்கத்திலுள்ளோர் என்னிடம் வந்து, என் நடல்யாவைப்பற்றிப் பேசும் போதெல்லாம் — பூரித்துப் போவேன். மருண்ட பார்வை, திரண்ட அழகு, 'அம்மா! அம்மா!!' என்று ஆவலோடு என்னை அணைத்துக்கொண்டு 'கதையொன்று சொல்லேன்' என்று சிறு வயதிலே அவள் செய்த, சிங்கார நினைவுகள் எல்லாம் என் இதயத்தில் மின்னி மறையும்! 'சாதுவான குழந்தை' என்பார்கள் வருவோர் போவோர். 'சமர்த்தாக இருப்பாயோ?' என்று கேட்பார், என் கணவர். 'பெரியவள் ஆனதும் என்ன செய்வாய்—நடல்யா?'—என்று நான் கேட்

பேன். அவளோ, வீட்டுக்கூடத்திலே மாட்டியிருக்கும் பற்பல வீரர்களைக் காட்டி 'அதுபோல - துப்பாக்கி பிடித்துக்கொண்டு சண்டைக்குப் போவேன்' என்று, சொல்லியவண்ணம், கையைத் தோளிலே துப்பாக்கி போல வைத்துக்கொண்டு நடப்பாள்.

எல்லோருக்கும், அவளது நடை—சிரிப்பையூட்டும்.

எனக்கோ, அவள் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற ஆசை, வளரும். நடல்யாவின் சிறு பருவ நிகழ்ச்சிகள் அத்தனையும், சுவையுள்ள திராட்சைக் கொத்துகள்.

நடல்யா—எங்கள் குலவிளக்கு. எங்கள் குடும்பத்திற்கு ஓரே நிலவு!

ஓரே குழந்தை—அதுவும் பெண் குழந்தை!—இதை எண்ணும்போது சில வேளைகளில் நான் சஞ்சலப்பட்டதுண்டு. ஆணாக இருந்தால் நம் அந்திய காலத்தில் நம்மைக் காப்பாற்றுமே—பெண்ணால் என்ன பிரயோஜனம், என்ற கவலையால் அல்ல!

அந்தக் கவலை எனக்குக் கிடையாது — எங்கள் பூமியில் மலர்ந்த புரட்சி ஆட்சி, அந்த நிலையில் எங்களை வைக்கவுமில்லை.

ஆனால், 'இவ்வளவு சாதுவாக இருக்கிறாளே! இவளால் நாட்டுக்கு ஏதாவது செய்யமுடியுமோ?' என்றுதான் கவலைப்படுவேன்.

காரணம்—எங்கள் குடும்பம், ஏழை ஆசிரியக் குடும்பம். ஜார் ஆட்சியிலே அல்லல் புயலில் அலமந்து, திண்டாடி சித்திரவதைப்பட்டவர்கள் நாங்கள். என் கூடப் பிறந்த ஐவர், ஜாரின் கொடுங்கோன்மைக்குப் பலியாயினர் புரட்சிப் போரிலே ஈடுபட்டதற்காக—அவர்கள் வாழ்வு பொசுக்கப்பட்டது! அவர்கள் பலியானபோதெல்லாம் பதைப்பேன் — அழுவேன்— துடிப்பேன்! ஆனால், என் அப்பாவோ, ஒரு பெருமூச்சை விட்டுவிட்டு பேசாது இருப்பார். சாந்தத்தோடு என்னிடம் சொல்வார், "அம்மா! அவர்களுக்காக அழாதே. பிறந்த மண்ணுக்காகப் போராடி தங்களை அர்ப்பணித்துவிட்ட அவர்களின் தங்கை என்பதிலே பெருமைகொள். அவர்களைப்போல நாமும், நம் நாட்டிற்காக நம் கடமையைச் செய்யவேண்டும் என்று உறுதிபெறு" என்று அவரது திடமனதும், தீர உள்ளமும், தீவிரபோக்கும் என்னையும் இலட்சியபுரி நோக்கிப் புறப்படச் செய்தது. எனக்கு அப்போது வயது 15 இருக்கும். பருவப்படிகளிலே என் அழகு நர்த்தனமாடிக்கொண்டிருந்தது!

என்கூடப் பிறந்த ஐவரையும்-மூன்று அண்ணன்மார்; இரண்டு தமக்கைகள்-பட்டப்பகலிலே, வெட்டிக் கொன்றது ஜாராட்சி! பணி புரிந்து — மாண்ட, அவர்களது பெருமையைப்பற்றி பெருமிதங்கொண்டிருந்த என் தந்தையையும் ஜாரின் வெறி, விடவில்லை! ஒருநாள் காலை, வெளியிலே சென்றார். மாலை அவர் வரவில்லை; மரணச் செய்திதான் வந்தது.

செய்திகேட்ட நான் திகைத்தேன், 'அப்பாவைக் கொன்றுவிட்டார்களாமே — அம்மா!' என்று அலறினேன். ஆனால் என் தாயோ கண்களிலிருந்து வழிந்த நீரைத் துடைத்துக்கொண்டு, 'இது—எதிர் பார்த்ததுதான்.' என்று அமைதியோடு பதில் சொன்னார்.

கொடுங்கோலாட்சி, எங்களையும் விடவில்லை. என் தாய் 'மாபாதகம்' செய்ததாகச் சொல்லினர். தனது நாடு, வீணர்களால், வீழ்ந்து ஒழிவதைத் தடுக்கும் வீரர்களைப் பெற்றதுதான், என் தாய் செய்த மாபாதகம்!

கைக்குழந்தையோடு, வெளியிலே நின்றுகொண்டிருந்த என் தாய்மீது பாய்ந்தனர். வெறிநாய்களுக்கிடையே சிக்கிய வெள்ளாடுபோல அலறினார்—என் அம்மா! அவர்கள் விடவில்லை—சிறு குழந்தையோடு இழுத்துச் சென்றனர். நானே அழுதேன். என்னைக் கட்டிப் போடாமலிருந்திருந்தால் அக்கயவர்களில் ஓரிருவரையாவது உயிரோடு விட்டிரேன்! ஆனால், என் செய்வது—கண் முன்னர் என்னை வளர்த்து சீராட்டி தாலாட்டிய தாயைச் சித்திரவதை செய்தனர். அது மட்டுமா? சிறையிலே கொண்டுபோய் தள்ளினர்! பெண்ணுக்குச் சிறைத் தண்டனை — கைக்குழந்தையோடு காராக்கிரகவாசம்!

தாயிழந்த நான் தவித்தேன்—சிறைச்சாலை பக்கம் போய் அழுதேன் — கதறினேன். ஏழையின் குரல் எப்படி எட்டும் அந்த எத்தர்களின் கூடாரத்துக்கு!

சில மணி நேரத்துக்கெல்லாம், சிறைக் கதவு திறந்தது. ஆவலோடு ஓடினேன். என் அம்மா 'கண்ணே, மணியே' என்று கொஞ்சிய என் தம்பி—சிறு குழந்தை—யின் உடலை வெளியே வீசியெறிந்தனர், அதிகாரிகள்.

சில நாட்களுக்கெல்லாம், அதே நிலையில் கதவு திறந்தது. ஆசையோடு என்னை அணைத்து மகிழ்வித்த என் அன்னையின் அருமை உடல், 'பிரேதம்' என்று கூவப்பட்டு, பிரேதவண்டியில் இழுத்துப் போடப்பட்டது.

"கொடுமை! கொடுமை!!" என்று கூக்குரலிடவில்லை. "மாதாவே—உன் மகள் இந்த மாபாவிகளை ஒழிக்கும்வரை ஓயமாட்டாள்" என்று என் துடித்த இதயம், சபதம் எடுத்துக்கொண்டது.

புரட்சிப் புயல், வெகுவேகமாக வீசிக்கொண்டிருந்த நேரம் அது. அந்த விடுதலை வீரர்களுக்கான ஒத்தாசைகளையெல்லாம் செய்யும் பெருமை பெற்றேன். இரகசியக் கடிதங்கள், நம்பிக்கையுள்ள தகவல்கள்—என்னால் தாங்கிச் செல்லப்பட்டன. அப்போது நான் பட்ட கஷ்டங்களும் தொல்லைகளும் கொஞ்சமல்ல; சொல்லித் தீருவதுமல்ல.

கொலை! குண்டு! தடியடி! துப்பாக்கி! கயவர்களின் கலாட்டா! பித்தலாட்டப் பேச்சு! — இவைகளுக்கிடையே, எதையும் தாங்கும் இதயங் கொண்டவளாக, செல்வேன்.

வெறியால் எத்தனை நாளைக்குத்தான் மக்களை ஒடுக்கிட முடியும்? மக்கள் என்ன மரமா, கல்லா—அடிக்க அடிக்கத் துடிக்கும் உடலும், கொதிக்கும் இரத்தமும் உள்ளவர்களாயிற்றே!

கொடுங்கோன்மை ஒழிந்தது — வீணர் ஆட்சி மறைந்தது. புது ரஷ்யா மலர்ந்தது! ஏழை மக்களது ஆசை, நனவாயிற்று!

1917—புது வாழ்வு பெற்ற ரஷ்ய சமுதாயத்தில் பூரிப்பு உதயமாயிற்று. என் வாழ்விலும், எனக்கோர் 'துணை' கிட்டிற்று. சோவியத் அரசாங்கம், பிறந்து தவழலாயிற்று!

கூண்டுக் கிளிகளாக இருந்த மக்கள் சுதந்திரப் பறவைகளாகப் பறக்கத் துவங்கினர். உரிமை பெற்றோம் என்ற மகிழ்ச்சி மக்கள் இதயங்களில் நிரம்பி வழிந்தோடத் துவங்கியது.

வெண்ணப் புறாவைக் காணும் வல்லூறு சும்மாயிருக்குமா? மக்களின் புது வாழ்வு பூரிப்பைக் கண்ட, கொடுங்கோலாட்சியின் வீழ்ச்சியின்போது தப்பிய சில 'நரி'களின் ஊளை, 'கழுகு'களின் பார்வை, சில 'வரை'களின் சிறுமதி, ஆகியவைகள் நாட்டின் நாலு பகுதிகளிலும் எதிரொலிக்கத் துவங்கின.

நாங்கள் கண்ட புதுவாழ்வு கோட்டையின்மீது பூசப்பட்ட வர்ணமாற்றம் அல்ல; பழைய முறையில் எல்லாம் நடைபெற, 'அதிகாரம்' மட்டும் கிடைத்தால் போதும் என்ற வகைப்பட்டதுமல்ல. புதுக்கோட்டை! அதுவும் புதிய முறையில், பழமைப் பாசி, சிறிதுமில்லாது கட்டமுயலும் கோட்டை!

எனவே, பழைய கோட்டை அதிபர்கள் எங்களைச் சந்தேகத்தோடு பார்த்தனர். பழையகோட்டை எஜமானர்களான பணதிபதிகள், எங்களது புதுக்கோட்டையைக்கண்டு — பொறாமையும், பொல்லாங்கு நினைப்பும் கொண்டனர். எங்கள் கோட்டை சமதர்மக்கோட்டை! அது எப்படிப் பிடிக்கும் சுயதர்மவாசிகளுக்கு?

ஆகவே, முதலாளித்துவ நாடுகளின் பாய்ச்சலை நாங்கள் எதிர்பார்க்கவேண்டியவர்களானோம்.

வெளியிலே வாளேந்திகள்-உள்நாட்டிலோ விஷம் தாங்கிகள்! எனவே, எந்த நேரத்திலும் புது ஆட்சிமீது போர்ப்பாணம் வீசப்படலாம் என்ற எச்சரிக்கை, எங்களிடையே வளர்ந்தது.

தாயை வெட்டியபோதும் தயங்காது, தங்கையைக் குத்திக்கொன்றபோதும் அஞ்சாது, சகோதரர்களின் குருதியைக் குடம் குடமாகக்கொண்டுவந்து காட்டியபோதும் கலங்காது, 'சாவு! சாவு!' என்ற முழக்கமிட்ட பீரங்கிக்குண்டுகளையும் தாங்கி-நாங்கள் கண்ட இன்ப வாழ்வு, எத்தர்களிடம் சிக்கிவிட்டால் என்ன ஆவது!

ஆகவேதான், என் மகளின், சாதுமதியைக் காணும் போதெல்லாம் சஞ்சலம் கொள்வேன். என் போன்றோரெல்லாம் தங்களது தனயர்களைப் போர்ப்படைக்கு அனுப்புவதில கவனமும் கவலையும் கொண்டிருந்த நேரம் அது. 'மகனாயிருந்தால் போர்க்களம் செல்லும் வீரன் ஆவானே! மற்ற தாய்மார்களைப்போல என் மகன் இந்த இடத்தில் நாட்டுக்காகச் சேவை செய்கிறான்!' என்று கூறமுடியுமே, அங்கலாய்ப்பேன் — வெளியில் தெரியும்படியாக அல்ல; எனக்குள்ளாகவே.

என்போன்றோரின் இரத்தத்தால் பெற்ற அந்த இன்பவாழ்வு — என்றும் நீடிக்கவேண்டுமே! இதைப் பெற எவ்வளவு பாடுபட்டோம்! எத்தனை நாட்கள் காத்திருந்தோம்! சிந்திய இரத்தம்! குவித்த பிணமலை! ஒடிந்த கால்கள்! அறுந்த நரம்புகள்! சிதைந்த உறுப்புகள்! எத்தனை எத்தனை ஆயிரம்? என்று நான் எண்ணும்போதெல்லாம், இவ்வளவு அரும்பாடுபட்டு கண்ட 'புதுவாழ்வு'—கருகிவிடக்கூடாது என்பதிலே மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டோம்-என் போன்றோர். ஆகவேதான், எதிர்காலத்தை மலர்விக்கும் எங்கள் குழந்தைகள், 'புதுக்கோட்டையை பொலிவுள்ளதாக்கும் பொறுப்புள்ளவர்களாக விளங்கவேண்டும்'-என்று சிரத்தை கொண்டிருந்தோம்!

ஆகவே, என் குழந்தையைச் சிறுவயது முதலே வீராங்கனையாக்கவேண்டுமென ஆசை கொண்டேன்.

என் கனவு, வீணாகவில்லை!

எனக்கு ஒரே குழந்தைதான்—அதற்காக நாட்டின் பாதுகாப்புப் படைக்கு என் பங்கை நான் செலுத்தாமலா இருப்பது?

நடல்யா வளர்ந்தாள்—ஏழு வயதிருக்கும். அப்போது, என் கணவர், திடீரென இறந்துவிட்டார். பிரிவு—தாங்கமுடியவில்லை. தனிமை எனக்குசக்களத்தியாயிற்று! எனினும், குழந்தையின் மழலை மொழி கேட்டு, காலத்தை ஓட்டினேன்!

"அம்மா! நான் படையிலே சேர்ந்ததும் எப்படியிருப்பேன் தெரியுமோ?"

"ஏம்மா! துப்பாக்கி தூக்கி ஆண்கள் மட்டுமேதான் போகவேண்டுமா?"

வயது வளர வளர, நடல்யாவின் கேள்விகளும், இதுபோல வளர ஆரம்பித்தன.

பதினைந்து, வயதாயிற்று. நடல்யாவை ராணுவப் பயிற்சி பெற அனுப்பினேன். இராணுவ சம்பந்தமான எல்லா நுணுக்கங்களையும், கற்றுக்கொண்டாள். சென்றவிடமெல்லாம் அவளது திறமையைப் பற்றிப் புகழ்ந்தனர்! ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு படைத் தேர்விலும் முதல் வரிசைதான் அவளுக்கு. ஒரு சமயம், கொஞ்சம் கோபத்தோடு என்னிடம் வந்தாள்.

"அம்மா! ஏன், செஞ்சேனையில் பெண்களை எடுத்துக்கொள்வதில்லை. நாம் என்ன அருகதையற்றவர்களா—அல்லது 'அழகி' என்று பிறர் சொலவதைக் கேட்டு திருப்தியுறுவதுதான் நமது வாழ்க்கையா?" என்று காரத்தோடு இருந்தது, அவளது கேள்வி.

கேள்வி எழுப்பிய வேகம், ராணுவத்தில் அவளுக்கிருந்த மோகத்தைக் காட்டிற்று. நான் மகிழ்ந்தேன்!

"கோபங் கொள்ளாதே கண்ணே! சுடுவது, குதிரைச் சவாரி, முதல் உதவி, விமானப் பாதுகாப்பு—என்றுள்ள பகுதிகளிலெல்லாம் 'பதக்கம்' வாங்கு பிறகு நிச்சயம் நீ செஞ்சேனையில் சேரமுடியும்" என்று சொன்னேன். சில மாதங்களுக்குள்ளேயே எல்லாப் பகுதிகளிலும், பதக்கம் பெற்று வந்து நின்றாள்.

எனக்கு ஒரே பூரிப்பு.

இந்நிலையோடு நின்றுவிடவில்லை. விமான ஓட்டியாக வேண்டும், விமானப் படையில் சேரவும் அனுமதி பெறவேண்டும் என்ற ஆவலோடு, தானாகவே சென்று, பயிற்சி பெறத் துவங்கினாள்.

இங்கிலேயில், நாஜிகள் எமது நாட்டின்மீது பாய்ந்தனர்.

போர் மூண்டது.

நடல்யாவுக்கு செஞ்சேனையில் சேர அனுமதி கிடைத்தது.

இராணுவ உடைகளோடு, அவளை நான் கண்ட போது புளகாங்கிதம் அடைந்தேன்.

1941 அக்டோபர் 21ந்தேதி செஞ்சேனையில் சேர்ந்ததும், அவள் எழுதினாள்.

"அருமை அம்மா!

இன்று செஞ்சேனையில் நான் சேர்ந்துவிட்டேன். தங்கள் மகளாகிய எனக்கு செஞ்சேனையிலே பதவி! சாதாரண பெண்ணாகிய எனக்கு இராணுவ உடை! இந்த நாள் என் வாழ்விலோர் திருநாள். நமது குடும்பப் பெயரை நான் நிலைநாட்டப் புறப்பட்டுவிட்டேன். என் வாழ்வை, நம் பூமிக்கு அர்ப்பணித்துக் கிளம்பிவிட்டேன்."

இந்தக் கடிதம் என்னைப் பரவசத்திலாழ்த்தியது. போர் முனையில், குண்டுகள் மத்தியில், கோரக் கூக்குரலுக்கிடையில் உலவிய போதும் என் செல்வம், எனக்குக் கடிதம் எழுதத் தவறியதில்லை.

"அம்மா! அம்மா!! என்று, என் கையிலே துப்பாக்கியைத் தூக்கும்போதெல்லாம் ஒருமுறை சொல்லிக்கொள்ளுகிறேன். தங்களைப் பற்றி நினைத்தாலே—எனக்கு ஒரு புத்துணர்ச்சி எழும்புகிறது. உங்களது, முந்திய கடிதத்தை நேற்றுதான் கண்டேன். காட்டின் மத்தியில், எங்கள் தரைப் படையின் துப்பாக்கிகள் ஒருபுறம் அலற, விமானங்களின் போர்ச் சங்கு மற்றோர் புறம் கேட்க; அதன் மத்தியில் தங்கள் கடிதத்தைக் கண்டபோது என் நெஞ்சம் மலர்ந்தது. 'என் அம்மா'வைக் கண்டேன் — அக்கடிதத்தில். 'அம்மா!' என்று, நேரே அழைக்க, விரைவில் வெற்றியோடு வருகிறேன்!"

✶

வெற்றியோடு வரும் கண்மணியை எதிர்பார்த்துக் கிடந்தார், வீராங்கனையின் தாய்! எதிர்பார்த்தது போல வெற்றி வந்தது—ஆனால் நடல்யா வரவில்லை!

போர்க்களத்திலே எதிரிகளைச் சின்னாபின்னப் படுத்தி, இரத்த வெள்ளத்தைத் தேக்கிய நடல்யா—கடிதத்தில் எழுதியதுபோல 'அம்மா!' என்று, பிறகு அழைக்கவே இல்லை!

1942 ஆகஸ்டு 14-ந்தேதி, நடல்யா, போர்க்களத்திலே மாண்டாள்.

வீரமரணம் அவளை தனக்குரிமையாக்கிக்கொண்டது.

அந்தச்செய்தி, அரலோவுக்குக் கிடைத்தபோது, ரஷ்யமண்மீது கண்ணீரைச் சிந்தினாளாம்! 'உனக்காக-உன்மீது தவழ்ந்த-உன்குழந்தை-உன்னிடம் சேர்ந்துவிட்டது' என்று அமைதியோடு, சொன்னாளாம்! ஓரே குழந்தை-அதுவும் பெண். அவளையுமிழந்த, அந்த அம்மணி, கலங்கவில்லை, 'கண்மணி கடமையைச் செய்துவிட்டாள்' என்று, தன் உறவினருக்கு தெரிவித்தாராம்.

மலையும் கலங்கிவிடும்-ஆனால் அவள் கலங்கவில்லை, 21 வயது நிரம்பாத, தனது இளமகள், இறந்தாள் என்ற செய்தி கேட்டு!

நடல்யா-பருவமலர். மணவறையிலே அமரவேண்டிய வயதுடைய வனிதை. அதுவும் பிணக்காட்டில் வீழ்ந்தாளே தவிர, தன் அழகால் சாதிக்கும் ஆடம்பர வாழ்வை மதிக்கவில்லை!

மணாளனுக்கு மாலையிட்டு மகிழவேண்டிய வயது! மரணத்துக்கு முத்தமிட்டு வீழ்ந்தாள்!

அவளது சாவு—சாதாரணமானதல்ல. சாக்காட்டிலும் அந்தியாகவல்லி தன் திறத்தைக் காட்டத் தவறவில்லை!

போர்க்களத்திலே நெருக்கடியானகட்டம். மூன்று முனைகளிலும் எதிரிகள் சூழ்ந்துவிட்டார்கள். தப்பி ஓடினால் உயிர் பிழைத்துக்கொள்ளலாம்—ஒரு பாதையில்! ஆனால், அப்படிச் செய்தால் அங்கேயிருக்கும் ஆயுதங்களும் போர்த்தளவாடங்களும் எதிரிகள்—ஜெர்மனியர்—வசமாகிவிடும்.

'அவை எதிரிகள் வசமாகிவிட்டால்' இதன் விளைவுகள், பயங்கரமாகத் தோன்றின. யாருக்கு. தன் நாட்டு ஆயுதம் அவர்கள் கையில் சிக்கினால்!

நடல்யாவுக்கு ஆத்திரம் கரை புரண்டது. "முடியாது' முடியாது!!" என்று, காடு அதிரக் கதறினாள். எதிரிகள் கையிலே, சிக்குவதைவிட என் கையாலேயே இவைகளை அழித்துவிடுகிறேன் என்று ஓடினாள்.

எதிரிகள் நெருங்கிக்கொண்டேயிருந்தனர். அவளது இருப்பிடத்திற்கருகே வந்துவிட்டனர்.

'திடீர்' என்று பயங்கர சப்தம் கேட்டது.

வெடிமருந்துகள், யாவும், ஒரே நேரத்தில் வெடித்தன.

பருவமலரின் அழகு உருவம் சின்னபின்னமாகிக் கிடந்தது.

அதன் பக்கத்தில் பல, எதிரிகள், செத்துக் கிடந்தனர்.

எதிரிகள் கையிலே சிக்காமல், அவர்கள் பலரை வீழ்த்திவிட்டு செத்தாள்! சாவுக்கு அஞ்சாது தன்னை அர்ப்பணித்தாள்! நடல்யா—ஒரு பெண். ஆனால் அவர் அவர் சாதித்த செயல்கள், கொண்டபணி, மகத்தானது.

அதுபோன்ற தியாகவல்லிகள்—பலர் வேண்டும் திராவிடத்தில்.

வீண்கதை பேசியும், விளையாட்டுப் பேச்சுகளில் காலங்கழித்தும், 'வீட்டுக்குள் கிடப்பதே-பெருமை' என்று கிடக்கும், நம் நாட்டில், நடல்யாக்கள் கிளம்பும் நாளே நல்லநாள்.

நம் வாழ்வில் பூரிப்பைப் பொங்கச் செய்யும் திருநாள்.

அந்நாள் வருமா?

# கேரள கீதம்

"அப்பப்ப! அந்த தினத்தை நினைத்துக்கொண்டாலே, ஒரே திகிலாய் இருக்கிறது. எனது வீடு வெறி பிடித்த முரடர்களால் சூறையாடப்பட்ட அந்தக் கோரக் காட்சி—உடம்பே சில்லிட்டுவிடுகிறது, இப்போதுகூட. நான் மட்டும் அவர்கள் கரங்களிலே சிக்கியிருந்தால்"

"இயற்கை தந்த எழில் மலர் ஒன்று நாசமாகி இருக்கும். மந்தியிடம் கிடைத்த மலராகியிருப்பீர்கள், அம்மணி!"

"வீணாக உள்ளத்தை அலட்டிக்கொள்ளாதீர்கள், நிம்மதியாக இருங்கள்"

"நீங்கள் தந்த அடைக்கலம்தான், இந்தத் துர்ப்பாக்கியவதியை உயிருடன் உலவவைத்திருக்கிறது, உங்களது அன்பிற்கும் பரிவிற்கும் பரிதாபத்துக்குரிய நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்"

"இது என்னம்மா பெரிய உதவி? மனித உள்ளம் படைத்த எந்த ஆண் மகனும் செய்யக்கூடிய சாதாரண செயல் தானே! அபலையான ஓர் பெண், அனாதரவாக நிற்கும்போது — அதுவும் அடைக்கலம் கேட்கும்போது 'முடியாது' என்று மிருக உள்ளம் படைத்த மூர்க்கன் கூட கூறமாட்டானே!"

"என் இதயம் நன்றியறிதலால் மலர்கிறது"

"ஏன் அம்மா, இவ்வளவு பாராட்டுதல்கள்?"

"அம்மா, அம்மா என்று அழைக்கிறீர்களே, நான் உங்கள் தாயா? உடன் பிறந்திருந்தால்கூட அருமைத் தங்கையே என்று பெயர் சொல்லி அழைத்திருப்பீர்கள்"

"பிற பெண்களை தாயாக பாவிப்பதுதானே அம்மணி, முறை! அது சரி, தங்கள் பால் வதனத்திலே ஏன் எப்போதும் துயரக் கோடுகள் நிழலிடுகின்றன? எனது உபசரணையில் ஏதாவது குறை......"

"குறை என்றுகூடச் சொல்லலாம்—எனது சலங்கிய முகம், எனது வேதனையைத்தான் விளம்பரப்படுத்திக்கொண்டிருக்கிறது. ஒரே ஒரு வேண்டுகோள். அதனை நிறைவேற்றமுடியுமா?"

"முடியுமானால் நிறைவேற்றுகிறேன், கூறுங்கள் அம்மா"

"முடியாமலென்ன! உங்கள் வீட்டிலே உலவுகிறேன் இப்போது ஆனால், தங்கள் இதய வீட்டிலே உலவும் உரிமை வேண்டும் எனக்கு, அதுதான் எனது ஆவல் நிறைந்த வேண்டுகோள்"

"புரியவில்லையே, அம்மா"

"புரியாததுபோல் தெரியவில்லையே! தங்கள் மனைவியாக என்னை......"

**கே. ஏ. மதியழகன்**

"தாங்களோ நம்பூதிரி பிராமண குலம். நான்..."

"தீண்டாத ஜாதி—செருமர் வகுப்பு, தாழ்த்தப்பட்டகுலம். இவை அத்தனையும் தெரிந்துதான் சொன்னேன். தாங்கள் தீண்டாத ஜாதி என்பதற்காக என் உள்ளம் உங்களைத் தீண்டாமல் இல்லையே!"

"பாவ காரியமல்லவா அம்மணி! நீயோ பார்ப்பன குலப் பாவை. நானோ பழங்குடி மகன். நாலு ஜாதி நாதன் படைப்பல்லவா! அதை அவமதித்தால் நரகமல்லவா சம்பவிக்கும். நம்பூதிரிப் பார்ப்பனப் பெண்ணுக்கும் பறையனுக்கும் திருமணம்! இது சாத்தியமா?"

"ஏன் சாத்தியமில்லை, அன்பரே?"

"சாஸ்திர விரோதமல்லவா, அது. ஆகமங்களிலே அதற்கு ஆதாரமேது? தீராத பழியல்லவா சூழும்?"

"ஒரு பெண்ணை வஞ்சித்தீர்கள் என்ற பழிமட்டும்?"

"இது எப்படி பழியாகும்? சாஸ்திர விரோதமான காரியத்திலிருந்து அஞ்சி விலகினேன் என்றுதான் பொருளாகும்"

"உமது மொழிகள்தான் ஏதேதோ கூறுகிறதே தவிர உமது விழிகள்"

"மனிதப்பாவிதான்; நானென்னவேதாந்தியா? ஐம்புலனை அடக்கி, அத்தனையையும் துறந்து, தவம்செய்து கிடக்க? அழகுக் குவியல்—தந்த விக்ரகம் என் எதிரில் இருக்கும்போது, நான் மட்டும் என்ன மரக்கட்டையா? மனிதன்தானே! எனது விலாப்புறத்தைக் கொத்தும் வேல் விழிகள், வேத வேதாந்தியையும் கலக்கிவிடுமே! மனதிற்குள்ளே நேசிக்கிறேன்; நான் மகேஸ்வரன் படைப்பை மீறக்கூடாதே என்று மருள்கிறேன். சர்வேஸ்வரன் ஏற்பாட்டை இந்த சண்டாளன் மீறினான் என்ற அபகீர்த்திக்குப் பயப்படுகிறேன்"

"சர்வேஸ்வரன், நாதன் எல்லாம் என்னைப் பொறுத்தவரையில் நீங்கள்தான். தாங்கள் என்னை அபாயத்திலிருந்து காப்பாற்றி அடைக்கலம் தந்தபோது, எங்கே போயிருந்தார் அச்சர்வேஸ்வரன்? ஏன் தடுக்கவில்லை?"

"நீ கூறுவது சரியாகத்தானிருக்கிறது"

"கேளுங்கள் அன்பரே, ஆண்டவன் படைப்பிலே பேதம் இருக்கமுடியாது. யாரோ சுயநலக்காரர்கள் தாங்கள் சொகுசாக வாழ சிருஷ்டித்த சூது நிறைந்த இயந்திரம் இந்த ஜாதி ஏற்பாடு. சாஸ்திரம், ஆகமம் எல்லாம் அவற்றிற்கு அரண். காடு களைந்து, வாய்க்கால் வெட்டி, வரப்பு எடுத்து, கழனி அமைத்து, நெல் விளைவிக்கும் கூட்டம் தாழ்ந்த ஜாதியாம். உல்லாசமாய், உழைக்காது ஒய்யாரமாய் வாழும் கும்பல் உயர்ந்த ஜாதியாம். இதுவெல்லாம் எத்தர்கள் ஏமாளிகளை வஞ்சிப்பதற்கு வெட்டிய சதிக் கிடங்கு. கேரள மக்கள் எல்லோரும் ஒரே ஜாதிதான். பேதம் பாராட்டுவது பேதமை!"

"அப்படியானால் ஜாதி யென்னாவது?"

"சவக் குழிக்குப் போவது"

"நம்மால் மட்டும் முடியுமா?"

"ஏன் முடியாது! நமது திருமணத்தின் மூலம் புதியதோர் புரட்சி பூக்கச் செய்வோம். வர்ணாஸ்ரம எதிர்ப்பின் வழிகாட்டிகள் ஆவோம். சமரச போதனையின் தூதுவர்கள் நாம். உங்களுக்கு என்மீது ஆசை இருக்கிறது. ஆனால் சம்பிரதாயத்தை உடைப்பதா என்ற அச்சமும் இருக்கிறது. ஆசைக்கும் அச்சத்திற்கும் இடையே போராடுகிறார் எனது காதலர். நானே அவரைக் காப்பாற்றுகிறேன். உயர் ஜாதி என்ற கௌரவத்தைக் களைந்து என்னைக் காணிக்கையாக்குகிறேன், ஏற்றுக்கொள்ளுங்கள்."

"தியாகவல்லி நீ! தீரனாக்கிவிட்டாயே என்னை"

"தியாகவல்லியல்ல நான். கோழையாய் இருந்த எனது காதலரை வீரராக்கிய தீரவல்லி."

"கேலிதான் உனக்கு சம்பிரதாயத்தை சுக்குநூறாக்கிப் புதிய சமத்துவ கேரளம் உருவாவதற்கு பாதையல்லவா அமைத்துவிட்டாய். உன்னை என்ன சொன்னாலும் தகும். நவகேரளத்தின் புரட்சி கீதம் நீ"

"கீதத்திற்கு பொருள் இருந்தால்தானே பொலிவு"

"நமது திருமணந்தான் பொருள் நிறைந்த கீதமாகி விட்டதே!"

"கண்ணாளா! கவலை தீர்ந்தது. நெடிய இரவு முடிந்தது. உவகை உதயமாகிவிட்டது, எனது வாழ்வில்."

*   *   *

1921-ஆம், ஆண்டு மலையாள மண்டலமே அல்லோல கல்லோலப்பட்டது. மாப்பிள்ளைக் கலகத்தின் விளைவாக நாசம் எங்கும் நர்த்தனம் புரிந்தது. குடும்பங்களிலே மாதர்கள் கோவெனக் கதறினர். ஓர் நம்பூதிரிப் பார்ப்பனரின் வீடு கொள்ளையிடப்பட்டது. வீட்டிலேயிருந்த கோமளவல்லி ஒருத்தி தப்பித்து, தாழ்த்தப்பட்ட ஜாதியான செருமர் குல வாலிபனிடம் சரண் புகுந்தாள். அவனது வாஞ்சை, அவளது உள்ளத்தில் காதலைத் தூவியது; அவனுடைய உள்ளத்திலும்தான்! ஆனால் வைதீகத்திற்காக பயந்தான், பாவகாரியமென்று எண்ணி! எனினும் அந்த வனிதாரத்தினமே வைதீக விலங்குகளை, உடைத்து இழி ஜாதி மகனை இன்பக் கணவனாக ஏற்று மணம் செய்து கொண்டாள்.

எங்கே, எப்போது நடந்தது என்று கேட்கத் தோன்றும். நடக்காதது மட்டுமல்ல—நாடகத்திலேகூட அல்ல! ஜாதி ஏற்பாடு ஒழியவேண்டும். அது சமுதாயத்தை செல்லரிக்கிறது. சமத்துவம் ஓங்கவேண்டும் என்ற கோட்பாடுகளை மக்களுக்குப் புகுத்துவதற்காக மேலேயுள்ள கருத்தடங்கிய கவிதையை 'துரவஸ்தா' (Duravastha) என்ற தலைப்பிலே பிரசுரித்தார் ஓர் மலையாளக் கவிஞர், சுமார் முப்பதாண்டுகளுக்கு முன்பு. அவரின் பெயர் குமரன் ஆசான் என்பது. இந்தக் கவிதை, ஜாதி வெறியர்களிடமிருந்து கோபக் கனலைச் சம்பாதித்துத் தந்தது. குமரன் ஆசான் மீது வெறிநாய்கள்போல் வைதீகம் சீறியது. பார்ப்பன மங்கைக்கும்—பறையர் ஜாதி மகனுக்கும் விவாகம் என்று கற்பனையில் எழுதுவதுகூட பொறுக்கமுடியாது என்று உறுமினர். ஆனாலும் கவிஞர் தனது பணியை தொடர்ந்து செய்தார். தனது ஒப்பற்ற கவிதா சேவை மூலம் உன்னத இடத்தைப் பிடித்தார், மலையாள இலக்கிய வானிலே. சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் மகாகவி என்ற மங்காப் பெயரை உலகிலே விட்டு விட்டு மறைந்தவர், குமரன் ஆசான்.

கேரளத்தின் மறுமலர்ச்சி இயக்கம், மலையாள மொழிக்கு இருபெரும் கவிஞர்களை வழங்கியது. ஒருவர் குமரன் ஆசான், மற்றவர் வையக அமைதி மாநாட்டிற்கு சமீபத்தில் வார்சா யாத்திரை சென்று வந்துள்ள மகா கவி வள்ளத்தோல் (Vallathol). குமரன் ஆசான் சமுதாயக் கொடுமைக்கு பலியாகி தாழ்ந்த சமுதாயமாக, நசுக்கப்பட்டு, அடக்கப்பட்டு, கொடுமைப் படுத்தப்பட்டிருக்கும் ஈழவகுலத்தைச் சார்ந்தவர். எனவே தாழ்ந்த ஜாதியாருக்கு இழைக்கப்படும் அக்ரமங்களுக்கு எதிராக போராடும் சமுதாயப் புரட்சிக்கவிஞர் ஆனார். வள்ளத்தோல், உயர்ந்த நிலையில் இருந்தவர் கூட்டத்தில் உதித்தவர். எனவே, அரசியல் துறையிலே இருந்த அன்னிய ஏகாதிபத்யத்தை எதிர்த்து அவரது கவிதைக் கொத்து தயாராகியது. ஒருவர் அரசியல் கிளர்ச்சியின் பிரதிநிதியானார். மற்றவர் சமுதாயப் புரட்சியின் தூதுவரானார்

சின்னஞ் சிறு வயதிலே குமரன் ஆசானுக்கு அறிவு வேட்கை இருந்தது. இவரது இளமைக்கால நிகழ்ச்சிகள், இவரது ஆற்றலைப் புலப்படுத்தியது. தமிழ், மலையாளம், சமஸ்கிருதம் முதலிய மொழிகளிலே அவருக்கு நிறைய பாண்டித்யம் இருந்தது S N D. P. என்று சொல்லப்படுகிற ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன யோகத்தின் தலைவர் ஸ்ரீ நாராயணகுருவின் தொடர்பு இவருக்கு கிட்டியது. சமுதாயப் புரட்சிக்கு வேண்டிய நல்ல கருத்துக்களை அவர் மூலம் பெற்றார். இயற்கை எழிலை அழகின் அம்சம் என்று ஆராதனை புரியும் கூட்டத்தைச் சேர்ந்தவர் இவர். வாலிபப் பருவத்திலே மா, பலா; கமுகு, வாழை மரங்களெல்லாம் மரகதப் பந்தல் வேய்ந்ததோ என சந்தேகிக்கும் மனோகரத் தோற்றத்தைத் தோற்றுவிக்கும் மலையாள வயல வெளிகளிலே, கோலக் குன்றுகளிலே, நீலம் கலகலவென சிந்துபாடும் சிற்றோடை அருகே, அலை ஓசை ஒலிக்கும் கடலோரத்திலே மற்ற மற்ற இடங்களிலெல்லாம் இயற்கை எழிலிலே மயங்கி சுற்றித் திரிந்தார். இவையெல்லாம் அவரது கற்பனை உள்ளத்திற்கு நிறைய கவிதா சக்தியைத் தந்தது. பெங்களூர், சென்னை, கல்கத்தா போன்ற இடங்களில் பல நாள் வசித்தார். வங்க நாட்டிலே கொழுந்துவிட்டெரிந்த சமுதாயப் புரட்சி இயக்கம் அவரது உள்ளத்திலே தனது தாயகத்திலும் அத்தகைய பணிகளைச் செய்யவேண்டும் என்ற எண்ணத்தைத் தூவியது. தனது மக்களின் இழி நிலையை எண்ணினார். அவர்கள் உயர்த்தும் முயற்சிதான் தனது குறிக்கோள் என்று முடிவு செய்தார். ஸ்ரீ நாராயண குருவின் துணையுடன் 42 ஆண்டுகளுக்கு முன் S. N D P. என்ற ஸ்ரீ நாராயணதர்ம பரிபாலன யோகத்தை நிறுவினர். இந்தக் கழகம்தான் இன்று கேரளத்திலே பிரம்மாண்டமான அளவிலே வளர்ந்துள்ளது. நாராயண குருவின்

போதனையின் அடிப்படையிலே 'மக்களெல்லாம் ஒரு ஜாதி, ஒரே மதம், ஒரே கடவுள்" என்ற கொள்கையை வற்புறுத்தப்பட்டது. செயல் திட்டமாக "யாரும் தங்கள் ஜாதிப் பெயரை சொல்லக்கூடாது. பிறரையும் ஜாதியை விசாரிக்கக் கூடாது. மனதிலும் நினைக்கக் கூடாது" என்றவைகளை மக்களுக்கு நினைவூட்டியது. இந்த இயக்கத்தை நம்முடைய சுயமரியாதை இயக்கத்திற்கு ஒப்பிடலாம். இந்த இயக்கம் வளர ஆரம்பித்தவுடன் இலக்கிய உலகுக்கே குடியேறி விட்டார் குமரன் ஆசான்

மலையாள இலக்கிய உலகம் மேல்ஜாதிக்காரரின் 'ஏகபோக வாரிசாக' இருந்தது. அந்த நாட்கள், கவிஞர் குமரனை அவர்கள் பட்டியலிலேயே சேர்த்துக் கொள்ளவில்லை. இன்னும் விசித்திரம், தீண்டாத ஜாதியைச் சேர்ந்த இவர், சமஸ்கிருதம் படிப்பது, சமஸ்கிருதத்திற்கு தீட்டு என்று கருதினர் அந்தத் திரும்பிரம்மங்கள். சண்டமாருதமென எழுந்த எதிர்ப்பைப் பொடியாக்கினர், தமது கவிதா ஆற்றலினால். இவருக்கு முன்பெல்லாம், மலையாளத்திலே பெரிய காவியம் எழுதினால்தான், கவிஞர் பெயர் எடுக்கமுடியும். மலையாள இலக்கிய வரலாற்றிலே, நடையிலே, முறையிலே, அமைப்பிலே மாறுதலை ஏற்படுத்திய பெருமை இவருக்கே சாரும்.

சிறு சிறு கவிதைகள் இயற்றி புதுமுறை புகுத்தினர். கவிதைக்குரிய பொருளும் இவருக்கு முன்பெல்லாம் மகாபாரதத்திலே, இராமாயணத்திலே தோண்டி எடுக்கப்பட்ட சம்பவங்கள். இவர்தான் சமுதாய நிகழ்ச்சிகளை கவிதையிலே ஏற்றினர். சமுதாய சம்பவங்களையே தமது கவிதைப் பொருளாகக்கொண்டார். மாத்யூ ஆர்னால்டின் "ஆசிய ஜோதியை" (Light of Asia) மலையாளத்திலே மொழி பெயர்த்தார்.

சமுதாயப் புரட்சியில் அவருக்கு இருந்த மட்டற்ற ஆர்வம், அவரது இலக்கியத்திலே எதிரொலிக்கிறது. ஜாதிக்கொடுமையை பின்வருமாறு கண்டிக்கிறார் அவரது பாடலிலே,

"குடும்பத்திலே பிளவு மூட்டும் ஜாதி
உற்றார் உறவினரை துண்டிக்கும் ஜாதி
உலகைப் பிரிக்கும் ஜாதி!"

என்று கூறிவிட்டு,

ஜாதிச்சனியனும் இந்து தர்மமே! உன்னால் எவ்வளவு அறிவு ஆற்றல், அன்பு, தூளாகிவிட்டது தெரியுமா! இந்தக் கொடுமை நிறைந்தஜாதியால் எத்தனை எத்தனை பெருமக்கள் எத்தனை எத்தனைகுஞ்சன்கள் எத்தனை எத்தனை தஞ்சன்கள் உனது கர்பத்திலேயே அழிந்து விட்டனர் தெரியுமா, அன்னை கேரளமே!" என்று வருந்தி கண்ணீர் விடுகிறார்.

இந்த சமுதாயக் கொடுமைகள் நெடுநாள் நீடிக்காது. அக்ரமம் அழிந்தே தீரும். அந்த நாள் விரைவில் வரும் என்பதை மனதில்கொண்டு கவிஞர் சனாதனிகளை கீழ்க்கண்டவாறு எச்சரிக்கிறார்.

"காலம் மாறுகிறது;
பழைமைப் பிடிக்கயிறு இற்றுவிட்டது.
இற்றுவிட்ட கயிற்றினால் மாந்தரை
நெடுநாள் கட்டிவைக்கமுடியாது
உங்கள் எண்ணங்களை மாற்றிக்கொள்ளுங்கள்,
இல்லாவிட்டால்,
புதியபாதை உங்களையே மாற்றியே தீரும்!
கேரளம் முழுதும் இந்த புதியசேதி
புயலென இடியென, எதிரொலிக்கிறது
காலமும் இதைத்தான் கணீர் கணீர் என ஒலிக்கிறது.
கக்கப்போகும் எரிமலையின் குமுறலின் ஒலி
உங்கள் காலடியிலே கேட்கவில்லையா?"

இப்படிப்பட்ட வெடிகுண்டுகள் அவரது பாடல்களிலே பரிணமித்தன. "உதிர்ந்த மலர்கள்" வீணபூவு (Veena Poovu) என்ற கவிதைதான், அவர் புகழேணிக்கு ஏற உதவிய இலக்கிய பெட்டகம் 'நளினி' என்ற இலக்கியம் மேலும் அவரது கீர்த்தியைப் பெருக்கியது. கிராம மரத்துக் குயில் (The Lark of the Village Tree) என்ற பாடலிலே அவரது எதிரிகளுக்குப் பதிலளிக்கிறார். 1924ம் ஆண்டிலே ஓர் படகுப் பயணத்தின் போது கவிழ்ந்த படகால் மாண்டார், குமரன் ஆசான். ஆங்கில நாட்டுப் புரட்சிக் கவிஞர் ஷெல்லிக்கும், கவிழ்ந்த படகாலேயே முடிவு ஏற்பட்டது. கேரளத்தில் ஷெல்லிக்கும் அச்சேதி ஆனால் குமரன் ஆசான் பெயர் முகிலைக்கிழித்த முழுமதிபோல மலையாளத்திலே சுடர் விட்டே தீரும். தமிழகத்திலே சமுதாயப் புரட்சி வேலையிலே அங்கம் வகிக்கப்போகும் கேரளத்தில், இப்படிப்பட்ட கருத்துக்கனியகிதம்நம்மையறியாமல், நம்தொடர்பில்லாமல் வளர்ந்திருக்கிறது என்று உணருகிற வேளையில், நமது இதயம் பூரிப்பால பொங்குகிறது. நாம் காண விரும்பும் புதிய சமுதாயம் கேரளத்திலும் உருவாகித் தீரும், அதற்கு வேண்டிய பண்பட்ட நிலம் இருக்கிறது. பணி—பகுத்தறிவுப் பாசறைக்கு வெற்றியைச் சேர்க்கும். அதில் சந்தேகமில்லை. 'கேரள கீதம்' அந்த ரகசியத்தைத்தான் நமது காதருகே வந்து சொல்கிறது.


# காஞ்சீபுரம் பண்ட்ஸ் லிமிடெட்,

( ஸ்தாபிதம் 1930 )

P. B. No. 1. காஞ்சி P. B. No 1759, சென்னை

---

**எமது நூதன சேமிப்பு திட்டம்.**

சிறுகச்சிறுக ரூ 773 கட்டி 40-வது மாதத்தில் ரூ. 1000 பெறவும்

தேவையானபோது கடன் பெற்று மாதாந்தர தவணையில் திருப்பிக்கட்டவும் வசதியுண்டு.

விவரங்களுக்கு எழுதவும்.

K. R. CHARY, B. A.,
Secretary.

(Ad)

# ★ வளரும் மனிதன் ★

[பூ. கணேசன், எம். ஏ.]

ஒவ்வொரு நாட்டு இலக்கியமும் அந்தந்த நாட்டு மனித சமுதாய வாழ்வின் சித்திரமாகவே திகழுமாதலின், ஆதி மனித சமுதாய வாழ்வு இன்றுவரைப் பெற்று வந்திருக்கும் ஏற்றத் தாழ்வுகளெல்லாம் இலக்கியத்தால் உணரலாகுமென்பது ஒரு தலை. எனவே, மக்கள் சமுதாய வாழ்வை, இலக்கியச் சான்றைத் தவிர்த்த இதர சான்றுகளால், அதாவது நிலநூல், உயிர் நூல், வரலாற்று நூல் முதலியவற்றின் துணைக்கொண்டு ஆராயப் புகுந்தால், அச்சான்றுகள் காட்டும் முடிவும் இலக்கியம் காட்டும் முடிவும் பெருமளவுக்கு ஒத்திருத்தல் கூடும். அப்படி ஒத்திருந்தால்தான் இலக்கியம், காலத்தின் கண்ணாடி எனத் தகும். சீர்த்த மதி படைத்த, செம்மைக் கல்வி பெற்ற, நெறி திறம்பா ஆராய்ச்சி மிக்க வல்லுநர் கையாளும் சான்றுகளும் கொள்ளும் முடிவுகளும் இவைகளைப் பொறுத்து முரணா என்பதை நாம் உறுதியாகக் கொள்ளலாம்.

ஆண்டவனொருவன் அந்தரத்திலமர்ந்து அண்ட சராசரங்களையும் படைத்து, ஆணைப் படைத்து பெண்ணைப் படைத்து ஆண்டுக்கொரு முறை அவர்களுக்குப் பிள்ளையையும் படைத்து வருகிறானென்ற துணிகரமான ஆராய்ச்சி முடிவை வெளியிட்டு வந்திருக்கும் வக்கிரபுத்தி வல்லுநர்களொழித்த, "எப்படி—ஏன்?" என்பதை அடிப்படையாகக் கொண்டே இவ்வுலகம் படிப்படியாக வளர்ந்து வந்திருக்கிறதென்ற (பரிணாம வாதக்) கோட்பாட்டைப் பேரறிஞர்களின் வாதங்களும் முடிவுகளுமே நமக்கு உண்மையில் துணை செய்யுமென்பதைக் கூறவேண்டியதில்லை. பயம் — பீதி — சந்தேகம்—நம்பிக்கை ஆகியவற்றுடன் அடிப்படையில் எழும் ஆராய்ச்சி முடிவுகள் அறிவு வாதத்துக்கு முன்னர் நீர்க்குமிழிகளாகவே பட்டொழியும். மூடநம்பிக்கையில் முளைக்கும் 'மகத்தான' முடிவு எதுவேயாயினும், அது வற்றாத அறிவு நீரோடையில் அடியுண்டு சிதறி மறைந்து படும். அண்டசராசரங்களைப் படைத்தவன் ஆண்டவனாயின் அவன் அவற்றை எங்கிருந்து—எப்பொருளால் — ஏன் படைத்தான், அவனைப் படைத்த 'ஆதி புருஷன்' யார் என்பன போன்ற மிகச் சாதாரணமான ஐயப்பாட்டு வினாக்களுக்கே 'ஆண்டவன் சாம்ராஜ்ய நிர்ணய சபை அங்கத்தினர்கள்' அல்லோலகல்லோலப்பட்டு ஆத்திரமுறுவராகையால் அவர்களது 'பொறுப்பில்லாக் கூற்று இலாக்காவை' தூர விலக்கி, நாம் நடுநிலைமை யெனும் இருக்கையிலமர்ந்து அறிவு—ஆராய்ச்சி யெனும் கண்களோடு பண்டை மக்கள் சமுதாய வாழ்வுத் தோற்றத்தையும் —அதன் வளர்ச்சியையும் ஆயவேண்டியவர்களாயுள்ளோம்.

மனிதன் ஒரு சமுதாயப் பிராணி (Man is a socialanimal) என்பது ஒப்பமுடிந்த உண்மையாகும். உள்ளத்தில் கிளர்ந்தெழும் ஒருவகை அடக்கமுடியா உணர்வால், அம்மனிதன் ஒருகூட்டமாக — ஒருசமூகமாக—வாழ ஆசைப்படுகிறான். படித்தவல்லார் பற்பலரும் போற்றி ஏற்றுக்கொள்ளும் பரிணாம வாதத்தின்படி (The theory of Evolution; theory of Descent of man) உயிர்பொருளின் மிக மிக உச்சநிலைவளர்ச்சிக் கட்டமே மனிதனாவான். ஆண்டவனின் 'விசேஷப் படைப்பு' மனிதன் என்பதும், அண்டபிண்டத்தைப் படைக்கும்போதே ஆண்டவன்மனிதனையும்படைத்து விட்டானென்பதும், மனிதன் இன்றுபோலவே அன்றுமிருந்தானென்பதும் விஞ்ஞான அறிவுபடைத்தாரெவரும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும். மனிதன் ஆண்டவன் படைப்பானால் அவன் ஒரு சமுகமாகச் சேர்ந்துவாழ ஆசைப்பட்டிருக்கமாட்டான், தனது "பரமபிதா"வின் தெய்வீக சக்தியில் திளைத்தவனாவது அவனது சடலத்தில் தோய்ந்திருக்குமாகையால் அவன் கூட்டுவாழ்வை விழைந்திருக்கமாட்டான்; தன் முனைப்பே பெரிதும் பெற்று நின்றிருப்பான். ஆண்டவனின் அம்சமாகிய அவன் காட்டுமிராண்டியாகத் தோன்றியிருக்கமாட்டான்; அறியாமையில் உழன்றிருக்கமாட்டான், தற்காப்புக்குக் கற்கருவிகளையும், இருக்கைக்கு மலைக்குகைகளையும்—முட்புதர்களையும், உடைக்கு தழைகளையும் மரப்பட்டைகளையும், உணவுக்கு பக்குவப் பெருகாய் வேர் கிழங்கு தசைகளையும் கொண்டிருக்கமாட்டான். ஆண்டவன் திருவுளசம்மத ஐக்கியத்தோடு அம்மூலகர்த்தாவையே தந்தையாகக் கொண்டு உற்பவித்த மனிதன் தனது சமுதாய வாழ்வுக்குகந்த இன்றியமையாத் தேவைகளையும் ஒழுகலாறுகளையும் மாசற்றமுறையில் அன்றே-தான் தோன்றிய அந்த நேரத்திலேயே நல்லமுறையில் ஏற்படுத்திக்கொண்டிருக்கலாம்; அல்லது ஆண்டவனாவது அவனுக்கு அன்றே அருள் பாலித்துதவியிருக்கலாம்! இது ஏன் நடைபெறவில்லை? பரலோகத்துக்கு "பாஸ் போர்ட்" வழங்கும்விஞ்ஞானிகளின்வாயடைத்துவிடும்!

மனிதன் சேர்ந்துவாழ விரும்புவது தனது தற்காப்புக்கேயன்றி ஆத்மீக சுத்திக்கும் வளர்ச்சிக்குமல்ல. அவன் ஆண்டவன் வழித்தோன்றலாயிராவிட்டாலும், ஆண்டவனைப்பற்றி சிறிதளவாவது நம்பிக்கையேனும் கொண்டிருப்பானேயாகில், அவன் சேர்ந்து வாழப் பிரியப்பட்டிருக்கமாட்டான். இக்காலத்தில் சிற்சில 'தபோதனர்களும் முனிபுங்கவர்களும்' காடுமலை வனாந்திரங்களில் திரிந்துகொண்டிருப்பதுபோலத் தனித்து வாழவே துடித்து நின்றிருப்பான்.

உலக வரலாற்று நூல் துணைகொண்டு மனித சமுதாய வாழ்வின் வளர்ச்சி வரலாற்றை அறியலாம். ஆனால், நமக்கு அண்மைக்காலம்வரை கிடைத்துவந்த வரலாற்று நூற்கள் எனப்படுபவை உறுதியாக ஏற்றுக்

கொள்ளமுடியாத 'ஒட்டைக் கொம்புகளாகவே' இருந்திருக்கின்றன. கட்டுக்கதை பாணியிலேயே அவை வரையப்பட்டு வந்திருக்கின்றன. சரித்திரம் அல்லது வரலாறு என்பது சென்றகால நிகழ்ச்சிகளின் கூட்டுத் தொகுப்பு நூலாகையால், அந்த நிகழ்ச்சிகளை நேருக்கு நேர் கண்டு எழுதியுதவிய உத்தமர் யார், அவரே உண்மை வரலாற்றாசான். நிகழ்ச்சிகள் நடந்து பன்னெடுங் காலம் பொறுத்து, 'வந்தேனே நானே வரலாறு புனைய' என்று வருவோர் பெருமளவுக்குப் புளுகு மூட்டைக்காரராயிருக்க முடியுமே தவிர, உண்மை வரலாற்றாசிரியராகத் திகழ்தல் இயலாது. மேலும், அப்புளுகுமூட்டைக்காரர் நடுநிலைமை யுணர்வு ஒரு சிறிதுமில்லாத 'காற்றடித்த பக்கம் சாயும்' சாணுமூர்த்தியாயிருந்தால்—வஞ்சகம் மனதில் தேக்கிய விஷமியாயிருந்தால் அவர் எழுதப் புகுந்தது வரலாறாயிராது, வற்றாத நச்சுப் பொய்கையாகவே காட்சியளிக்கும். விஞ்ஞான ரீதியில் வரலாற்றை ஆராய்ந்தறிய முற்பட்ட காலம், வரலாற்றையும் விஞ்ஞானமாகவே கொண்ட காலம், விஞ்ஞான உதவிகொண்டு மட்டுமே வரலாற்றைக் கணிக்க முனைந்த காலம் வெகு சமீப காலமேயாகும். அக்காலமே உண்மை நாடுவோரின் பொற்காலமாகுமென்பதைக் கூறவேண்டுமோ!

வரலாறு வழங்கமுடியாத, அல்லது வழங்கத் தவறும் உண்மைகளையும் நடப்புக்களையும் அவ்வக்கால இலக்கிய நூற்கள் வழங்கிவிடுமென்பது இறுகிய உண்மையேயாயினும் இலக்கியம் புனையும் வளமும் வாய்ப்பும், அறிவுந் திறனும் பெற்றிரா ஆதிமனித சமுதாயத்தைப் பற்றிய உண்மைகளையும் நிகழ்ச்சிகளையும் படிப்படியான வளர்ச்சி முறைகளையும் வேறு வேறு சான்றுகள் மூலமாகவே உய்த்துணர வேண்டியவர்களாயுள்ளோம்.

பக்தி மரியாதையோடு பல்லாண்டு காலமாகப் போற்றிப் பேணப்பட்டு வந்த பரமபிதாவும் அவரது 'தலைமைக் காரியாலயமாகிய' பரமண்டலமும் ஆட்டங்கொடுத்து சரியுமளவுக்கு விஞ்ஞான வளர்ச்சிப் பெருகிவந்து கொண்டிருக்கும் இற்றை நாளில், மனிதன் ஒவ்வொன்றையும் தீர உசாவி உய்ந்தறியும் உன்னத முயற்சியிலீடுபடலானான். இற்றை நாள் சமுதாய வாழ்வை விஞ்ஞான ரீதியில் அலசிப்பார்க்க முனைந்தவன், அம்மாபெரும் அசைக்கமுடியா விஞ்ஞானத் துணைகொண்டே படிப்படியாக பழங்காலத்தை நோக்கலானான். அவனது அவ்விஞ்ஞான நோக்கே நமக்கெல்லாம் பழங்காலம் பற்றி அறிவு விளக்கேற்றி வைத்தது.

தனக்கென வாழா பிறர்க்குரியாளராக விருந்து ஆய்ந்து ஆய்ந்து அரும் பெரும் உண்மைகளைக் கடைந்தெடுத்துக் கொடுத்துச் சென்ற அம்மங்காப்புகழ் தியாகிகளின், விஞ்ஞான விற்பன்னர்களின் அறிவாற்றலும் பீடுடைப் பெருமையுமெங்கே, ஆண்டவன் பிடித்துப் போட்ட பிண்டங்களே மனித வர்க்கமென்று கூறும் 'மண்டுகளின்' சூனிய அறிவும் சுயநலப் போக்குமெங்கே?

எனவே, மக்கள் சமுதாயமென்பது மனிதர் அல்லது மானிடரென்ற உயிர்ப் பொருள்களின் கூட்டம் அல்லது சமூகமேயாகும். இற்றை மனிதர் கூட்டம் விலங்குகளெனப் படுவற்றினின்றும் வேறுபட்டுக் காணப்படும் தோற்றத்தையனுசரித்து மக்கள் சமுதாய வளர்ச்சி (பரிணாமம்) (வளர்ச்சி) வேறு என்று மேலெழுந்த வாரியாகச் சிலர் கூறிவிடுவர். படைப்பு(!) காலத்திலேயே மனிதன் இன்றிருக்கும் தோற்றத்திலேயே படைக்கப்பட்டான்; அவன் அன்றும் இன்றும் அப்படியேத்தானிருக்கின்றான் என்ற சொத்தைக் கொள்கை உயிரின (விஞ்ஞான) நூல் அனுமதியாது. மனித வர்க்கம் இன்றிருக்கும் தோற்றத்தோடு பல்லாயிர மாண்டுகட்கு முன்னிருக்கவில்லை யென்பதையும், விலங்கினங்களிலிருந்து வளர்ந்து வந்தவனே மனிதனென்பதையும் உண்மையான ஆராய்ச்சிகள் திட்டவட்டமாகக் காட்டுகின்றன. இதில் ஐயுறவோ, மாறுபாடோ தினைத் துணையும் இருத்தல் வேண்டியதில்லை. நாம் மேலே கூறியபடி, விஞ்ஞான ரீதியில் அறிவுடம்பட்ட கல்வி பயின்ற யாரும் "மனிதன் ஆண்டவனால் திடீரென்று இப்பூவுலகத்துத் தள்ளிவிடப்பட்டான்" என்று சொல்லத் துணியார். உயிரின வளர்ச்சியின் உயர்ந்த கட்டமே மனிதன் என்பதையும், அவன் பரிணாமத்தால் (படிப்படி வளர்ச்சியால்) பிறந்தவனேயன்றி பரமபிதா'வால் படைக்கப்பட்டவனில்லை யென்பதையும் எடுத்துக்காட்டவே இவ்வளவும் கூறவேண்டியதாயிற்று.

தனது சொந்த உடல் முயற்சியோடு வெளியிற் சென்று இயற்கையினையும் பயன்படுத்திக் கொண்டால் மேலுஞ் சிறக்கலாமென்று அப்பணியி லிறங்கினான். கூட்டம் பெருக பெருக, வாழ்க்கைப் போட்டியை வெற்றிகரமாக சமாளிக்க கூட்டு முயற்சி தேவையென்பதை யுணர்ந்த அந்நேரத்திலேயே ஆதி மனித வர்க்கம் அற்புதமான ஒரு கட்டத்தை யடைந்தது. வாழ்க்கையின் இன்றியமையாத் தேவைகளைத் தேடும் முயற்சியில் மனிதவர்க்கம் படிப் படியாக வளர்ந்து வந்திருக்கிறது. அவ்வளர்ச்சியின் இறுதியான உயர்ந்த கட்டமே உழு தொழில். விழுமிய உழு தொழில்கை வருதற்கு முன்பு வரை மனித வர்க்கம் விலங்கினங்களின் பின் ஓடித் திரிந்து அவற்றை வேட்டையாடியேத் தின்று வந்தது. ஆண்டுதோறும் பொய்க்காது பயனளிக்கும் பண்ணைத் தொழிலே நிலையான மக்கள் சமூக வாழ்வுக்குத் துணை செய்தது.

மக்கள் சமுதாய வாழ்வு வளர்ச்சியின் அடுத்த கட்டமாக, மனித வர்க்கம் தனது வசதிக்கு விலங்குகளைப் பழக்கிப் பயன் படுத்திக் கொண்டதைக் கூறலாம். வாழ்க்கைப் போராட்ட முயற்சியில் விலங்குகள்-பழக்கிப் பக்குவப் படுத்தப்பெற்ற மிருகங்கள் மனித வர்க்கத்துக்குப் பேருதவியாயிருந்தன.

இப்படி மனிதவளர்ச்சி, வெகுதுரிதமாக நடந்து கொண்டிருந்தது.

மிருகங்களைப் பழக்கியும், வேறு பல கருவிகளைக் கண்டுபிடித்தும், மனித உழைப்பு குறைந்து, ஓய்வெடுக்கவும் முடிந்தது. பிறகே இலக்கியம், கலை, காவியம், சிற்பம், சித்திரம் போன்றவைகளில் எண்ணம் செல்லவும், ஆராயவும், ஆக்க வேலை செய்யவும் முடிந்தது.

மனிதன், இத்தகு முறையில் வளர்ந்தான்—வளர்ந்துகொண்டிருக்கிறான் — இன்னமும், நிமிடத்திற்கு நிமிடம் வளருவான்!

——

# அமைதி நிலவ.....

"வாணன்"

"ஒன்றுபட்ட உலக நாடுகளின் பிரதிநிதிகளாகிய நாங்கள் எல்லோரும் ஒரு மனதுடன் சேர்ந்து, உலகத்தில் சமாதானத்தை என்றும் நிரந்தரமாக நிலவச் செய்ய......"

என்று வெற்றிகண்ட நாட்டுப் பிரதிநிதி ஒவ்வொருவரும் வாய்விட்டு கூறி 'அமைதி சாசனத்தில்' கையொப்பமிட்ட பின்னரே ஐக்கிய நாட்டுச் சபை ஆரம்பிக்கப்பட்டது. ஆறு ஆண்டுகள் போரிட்டு சொல்லொணு துன்பங்களை அனுபவித்து, 'இரண்டு கோடிக்கு மேற்பட்ட' மக்களை பலி கொடுத்து பெற்ற வெற்றியை. அடைந்த 'சமாதானதேவி'யை என்றும் நிரந்தரமாக உலகத்தில் நிலைக்கச்செய்யவே ஐக்கியநாட்டு ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டது. அமெரிக்கத் தலைவன் உட்ரோவில்ஸன் முப்பது ஆண்டுகளுக்கு முன்னுல் ஆரம்பித்த சர்வ தேசிய சங்கத்திற்கு ஏற்பட்ட முடிவு, மற்றொரு அமெரிக்கத் தலைவன் ரூஸ்வெல்டின் முழுத்திறமையில் உண்டாக்கப்பட்ட இந்த ஐக்கிய நாட்டு சபைக்கும் ஏற்படக் கூடாதே என்ற பயம் ஒவ்வொருவர் மனதிலும் தோன்றி மறைந்த வண்ணமிருந்தது.

ஆரம்பத்தில் சான்பிரான்ஸிஸ்கோவில் ஐ. நா. சபை ஆரம்பிக்கபபட்டபொழுது ஒவ்வொரு தேசமும் அளவுக் கதிகமான உறுதி மொழிகளை அளித்தன. 'போர்', 'சண்டை' என்ற பதங்களெல்லாமே ஆராய்ச்சியாளர்களின் உபயோகத்திற்கு மாத்திரம் தரப்பட்டுவிடுமோ என்று நினைக்கவேண்டிய அளவுக்குப் பேசினர். அவர்கள் பேசிய பேச்சு நம்மை, உலகத்தை—சமாதானபுரிக்கு விரைவில் அழைத்துச் செல்லும் என்ற நம்பிக்கை தந்தது.

ஆனல் ஆண்டுகள் மறைய மறைய நிலைமை நேர்மாறாகி விட்டது அமைதியை நிலவச் செய்யும் முயற்சி பேச்சளவில இருந்ததே தவிர செயலில் ஆரம்பிக்கப்படவில்லை. போர்ப்படைகள் குறைப்பு, ஆயுதங்களின் உற்பத்தியை குறைத்தல், ஆபத்தான போர்க் கருவிகளை தடை செய்வது, குழந்தைகளுக்கு புத்துலகக் கல்வி அளிப்பது, தேசிய குறுகிய மனப்பான்மைகளை குறைப்பது போன்ற அமைதிக்கு தேவையான பல விஷயங்கள் பேச்சளவிலேயே நிறுத்தப்பட்டன.

வல்லரசுகளுக்குள் ஏற்பட்ட கொள்கை வேற்றுமைகள் நாளாக ஆக அதிகமாகிவிட்டன. முடிவில், மறக்க முடியாத துன்பங்களை அளித்துப்போன பெரும் போர் முடிந்து ஐந்தாண்டுகளுக்குப் பிறகு மறுபடியும் அதைவிட பயங்கரமான பெரும் போரின் வாயிற்படி அருகில் உலகம் கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருக்கிறது.

படைகளின் ஆள் குறைப்புக்குப் பதில் அதிகமாக்கப்படுகிறது. போர்க் கருவிகள் இதுவரைக்கும் கண்டுபிடிக்க முடியாத முறையில்—பயங்கரமான வகையில்—கண்டுபிடிக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படுகின்றன. உலகம் பூராவும் ஒவ்வொரு மனிதனும் வரலாற்றிலேயே இதுவரைக்கும் ஏற்படாத அளவுக்கு பீதியடைந்துள்ளான்.

ஆக அமைதி, சமாதானம், உலக ஒற்றுமை என்றெல்லாம் சான் பிரான்ஸிஸ்கோவிலும், பாரிசிலும், நியூயார்க்கிலும் ஐ. நா. பிரதிநிதிகள் பேசிக் கொண்டிருக்கும் பொழுது உலகம் இரண்டாகப் பிரிந்துவிட்டது.

இந்த பயங்கரமான சூழ்நிலைக்கு இவ்வளவு குறுகிய காலததிலேயே உலகம் இழுக்கப்பட்டதற்கு காரணங்கள் என்ன? காரணங்களைப் பற்றிய ஆராய்ச்சி செய்யலாமே தவிர யார் (?) காரணம் என்று ஆராய்ச்சி செய்வது சரியல்ல. ஏனென்ருல், உலகத்தின் 'இயற்கை' விளைவுதான் இந்த பயங்கரச் சூழ்நிலைக்குக் காரணம்.

"உலகத்தில் இதுவரைக்கும் நடந்துள்ள போராட்டங்கள் எல்லாம் பொருளாதார ஏற்றத் தாழ்வினுல் ஏற்பட்டவைகள்தான். பலர் உழைப்பில் சிலர் வாழ்வது என்பது நாகரிகத்தின் பிற்போக்கான நிலை. 'உழைப்பிற்கேற்ற ஊதியம் தேவைக்கேற்ற வசதி' என்பதுதான் மனித தர்மம். இந்த கொள்கை பூர்த்தியடைய உலகத்தில உள்ள எல்லா நாடுகளிலும் அந்த 'பலர்' (உழைப்பவர்) அரசாங்கத்தைக் கைப்பற்றி சொத்துக்களை சமுதாயத்திற்கு சொந்தமாக்கி தொழிலாளர் ராஜ்யம் ஏற்படுத்தினுல்தான் முடியும். அப்படி ஏற்படுத்திய நிலைதான் கம்யூனிச நிலை. இந்த நிலையடைய தொழிலாளர்கள் தேசிய எல்லையை மீறி உலகத் தொழிலாளர் ஒன்றுபட்டு போராட்டம் நடத்த வேண்டும்."

இதுதான் மார்க்ஸ் கூறி, லெனின் விரிவாக விளக்கி ஸ்டாலின் கடைப்பிடித்து வரும் சித்தாந்தம். இந்த தத்துவத்தை கம்யூனிஸ்டுகள் 'தேவ' வாக்காக கொண்டுள்ளனர் இதில ஒரு எழுத்தைக்கூட மாற்ற அவர்கள் சம்மதிக்கத் தயாராக இல்லை.

இப்படி ஒரு விதத்தில் சர்வ தேசிய ஒற்றுமையை நோக்கமாகக் கொண்டுள்ள ஒரு தத்துவத்தின் பின்னுல் இன்று கிழக்கு ஐரோப்பா, சைனு, தென்கிழக்கு ஆசியா, தூரக்கிழக்கு ஆசியா முதலிய உலகின் பல பாகங்களிலும் உள்ள பெருவாரியான மக்கள் நிற்கின்றனர். முதலில் அரசாங்கத்தை கைப்பற்றியதனுலும் மற்றும் பொருளாதாரம், படைபலம் இவைகளாலும் ரஷ்யா, நம் வாழ்நாளில் ஏற்பட்ட இந்த மகத்தான சக்திக்கு தலைமை பீடமாகிவிட்டது.

சர்வ தேசிய கம்யூனிஸ்ட் இயக்கங்களின் தலைமை பீடம் என்ற முறையில உலகத்தின் எந்தெந்த மூலையில் தொழிலாளர்கள் போராட்டங்கள் நடைபெறுகிறதோ அவைகளுக்கெல்லாம் உதவி செய்ய வேண்டியது ரஷ்யாவின் கடமை. அது, உண்மைத் தேவை என்று கருதும் கம்யூனிச வளர்ச்சிக்கு உதவி செய்தாக வேண்டியதுதானே?

இதிலே குழப்பம் ஏற்பட்ட காரணம் இயற்கையின் கோளாறுதான்.

கம்யூனிசத்தை ஒத்துக் கொள்ளாதவர்கள் நிலை என்ன? கம்யூனிச நாடுகளை தவிர மற்றைய நாடுகளில் உள்ள சட்டரீதியான அரசாங்கத்தை எதிர்த்து

அந்தந்த நாட்டுத் தொழிலாளர்கள் 'புரட்சி' செய்தால் அதை அந்த சட்டரீதியான அரசாங்கங்கள் அடக்கித் தானே தீரும். அப்படி அடக்க ஆரம்பிக்கும்பொழுது தான் ரஷ்யா குறுக்கிடுகிறது. நேரில் அல்ல, திரை மறைவில்! கம்யூனிச தொழிலாளர் முன்னணிக்குப் பின்னால்! இந்த நிலைமைகள் முற்றி மோசமாகப் போக ஆரம்பித்ததின் விளைவுதான் கம்யூனிச முன்னணிக்கு எதிர் முன்னணி—இந்த எதிர்க்கட்சியில் ஒருவிதமான கொள்கை கிடையாது. இதில நிற்கும் எல்லா நாடுகளும் கம்யூனிச பாதை பிடிக்காதவைகள்! கம்யூனிசத்திற்கு விரோதமான கொள்கையுடையவர்கள் மாத்திரமல்ல, இந்த எதிரணியில். கம்யூனிசத்தைப்போல் தொழிலாளர் ராஜ்யத்தை வேறு பாதைகளில் சென்று அடையலாம் என்ற நம்பிக்கையில் சென்று கொண்டிருக்கும் சோஷியலிஸ்ட்டுகள், லிபரலிஸ்ட்டுகள், ஜனநாயக வாதிகள்; இன்னும் பலரும். தங்களுடைய கொள்கையிலிருந்து ஒரு அடி நகர்ந்து கொடுக்க கம்யூனிஸ்ட்டுகள் இடம் கொடுக்காத ஒரே காரணத்தினால்தான் இந்த முற்போக்கு வாதிகள் அனைவரும் வேறு வழியிலும் செல்ல சூழ்நிலை சரியில்லாததாலும் இன்று கம்யூனிசஎதிர்ப்பு முன்னணியில் நிற்கின்றனர்.

சென்ற யுத்தம் முடிந்த பிறகு ஐரோப்பிய கண்டம் ஹிட்லருடைய கொடுஞ்செயல்களில் சிக்கி வலிவிழந்து ஏழ்மையாகி விட்டிருந்தது. இங்கிலாந்தும் காலனி நாடுகளிடம் கடன்பட்டு முறிந்து போயிருந்தது. வெற்றி கண்ட ரஷ்யா முழுக்க, முழுக்க கம்யூனிச அரசாங்கத்திற் சன்னியில் வேறெந்த ஐரோப்பிய நாடுகளுக்கும் உதவி செய்ய மறுத்தது. அது மாத்திரமில்லை. கம்யூனிச தத்துவப்படி ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸ்ட் இயக்கங்களை பலமாக வளர்க்க ஆரம்பித்தது. கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சிவப்பாக மாறின.

ஒரு பக்கத்திலே பொருளாதார நெருக்கடி, பெரும் பஞ்சம் வருமோ என்ற அளவுக்குப் பயங்கரமான நிலை. மற்றொரு பக்கத்திலே கொள்கைப் போராட்டம். எந்த நேரத்தில் நாடு சிவப்பாகுமோ என்ற கிலேசம். எந்த நேரத்தில் தனி மனிதனின் உரிமை பறிபோய் ரஷ்ய 'தேவதைகளுக்கு' பணிய நேரிடுமோ என்ற பயம் இந்த காரணங்களால் மேற்கு ஐரோப்பா அமெரிக்காவிடம் சரணாகதி யடைந்தது.

கம்யூனிசம் பிடிக்காத கொள்கை என்பது மாத்திரமல்ல; தன்னுடைய முதலாளித்துவ முறையில் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு மார்க்கெட் கண்டு பிடித்தாக வேண்டிய அவசியத்திலிருந்தது, அமெரிக்கா. ஆகவேதான் சரணடைந்த ஐரோப்பாவிற்கு கோடி கோடியாக டாலர்களைக் கொடுத்து ஐரோப்பாவை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்க ஆரம்பித்தது.

சரித்திர சூழ்நிலைகளால் தானாகவே முறிந்து விழும் 'முதலாளித்துவம்', என்று மார்க்ஸ் எழுதியதை படித்துவிட்டு காத்துக் கொண்டிருந்த ரஷ்யாவிற்கு அமெரிக்காவின் ஐரோப்பிய உதவி வேம்பாகவே இருந்துவந்தது.

அமெரிக்காவின் உதவி — மார்ஷல் திட்டம்— தொழிலாளர்கள் மேற்கு ஐரோப்பாவில் அரசாங்கத்தை கைப்பற்றுவதை நாள் கடத்தும் என்பதை ரஷ்யர்கள் உணர்ந்தனர். அமெரிக்காவின் முயற்சி பலித்து மேற்கு ஐரோப்பா பொருளாதார நெருக்கடியிலிருந்து தப்பினால் நிலைமை எப்படி மாறும் என்று கூறுவதற்கில்லை. அமெரிக்க முதலாளித்துவம் என்றைக்காவது ஒருநாள் கடைசி மூச்சுடன் ரஷ்யாவுடன்-கம்யூனிசத்துடன் சண்டை போடத்தான் செய்யும். அந்த போராட்டத்திற்கு மேற்கு ஐரோப்பாவும் உதவி செய்தாலும் செய்ய ஆரம்பிக்கும். அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பாவும் சேர்ந்து விரைவில் ஜெர்மனிக்கு ஏற்படுத்திய கதியை ரஷ்யாவுக்கு ஏற்படுத்த முயற்சிக்கலாம். இந்த எண்ணங்கள்தான் மாஸ்கோவில் கூடியிருக்கும் ரஷ்ய தலைவர்களுக்கு பயத்தை கொடுத்தது. ஆகவேதான் ஹிட்லரை தோற்கடித்தவுடன் படைகள் வீட்டுக்கனுப்பப் படவில்லை. அதற்குப் பதில் படைகள் விஸ்தரிக்கப்பட்டன. புதிய ஆயுதங்கள் கண்டுபிடிக்கப் பட்டன. எந்த நேரத்திலும் உலகத்தைக் கட்டியாளக் கூடிய பெரும் சேனையை ரஷ்யா தயாரித்து விட்டது

இன்று ரஷ்ய சேனையின் எண்ணிக்கை, தெரிந்த வரை 25-லட்சம் போர் வீரர்களுக்குமேல். ரஷ்யாவிற்குள்ள சப்மரின்கள் அமெரிக்கர்களுக்கு இருப்பதை விட மூன்னூறு மடங்குக்கும் அதிகம். ஏரோப்ளேன் படை 6-மடங்கு அதிகம். இப்படி அன்றாடம் தினசரி பத்திரிகைகள் செய்திகளை தருகின்றன. இத்தகைய


## ★ சிறந்த நூல்கள் ★

| | |
|---|---|
| அண்ணாத்துரை (தொகுப்பு) | 1—0 0 |
| மூவர்ண அட்டை. | |
| அண்ணாவின் வாழ்க்கைக் குறிப்புக்கள் | 0—4—0 |
| பேசும் புறாக்கள் (அரங்கண்ணல்) | 0—8—0 |
| கோவில் பெருச்சாளிகள் (தில்லை-வில்லாளன்) | 0—6—0 |
| சங்கிலிச்சாமி (மு. கருணாநிதி) | 0—8—0 |
| தலைமை உரை ,, | 0—2—0 |
| வாழ முடியாதவர்கள் ,, | 0-12—0 |
| குடும்ப விளக்கு I (பாரதிதாசன்) | 0—6—0 |
| கட்டழகி காஞ்சனா (சேரன்) | 1—4—0 |
| மூவர்ண அட்டை | |
| நாடறிந்த நட்சத்திரங்கள் (சேரன்) | 0—8—0 |
| கலைக் கோயிலா? விபசார விடுதியா? | 0—4—0 |
| மா-சே-துங் (சீனப்பிரதமர் சரித்திரம்) | 0—8—0 |
| ரஷ்யப் பிரச்சினை (ஸ்டாலின் பரிசு பெற்றது) | 1—4—0 |
| பெண் (இராதாமணாளன்) | 0—8—0 |
| லீலாராணி (தணலன்) | 0—8—0 |

விற்பனைக் கழிவு 20% அனுப்பும் செலவு இலவசம்

**பாரி நிலையம்**

59, பிராட்வே, : : சென்னை 1.

பிரமாண்டமான, இதுவரைக்கும் சரித்திரத்திலே ஏற்பட்டிராத சேனையின் பிரதம தளபதி ஸ்டாலின்.

ஆனால் எதிர் முன்னணியின் நிலை என்ன? இது நாள் வரை நேரடியான போரில் சிக்காத அமெரிக்கா வேண்டுமானால் போருக்கு வேண்டிய ஆயுதங்களை செய்யலாம். ஆனால் ஐரோப்பிய மக்கள்தானே போர் செய்யவேண்டும். அவர்கள் மறுபடியும் போர் செய்யத் தயாராயில்லை. இப்பொழுது தந்தையை இழந்த குடும்பமும், தனயனை இழந்த குடும்பமும், கையொடிந்த தங்கையும் காலிழந்த தாயையும் கொண்ட குடும்பமுமாக ஐரோப்பா கிடக்கிறது. இந்த நிலையில் வயது வந்தோர் யாரும் போராயுதங்களை தொடக் கூடத் தயாராயில்லை. இப்பொழுது ஐரோப்பிய அரசாங்கங்கள் மறுபடியும் போருக்கு ஆயுதங்கள் செய்வதென்றால் படைகளுக்கு சம்பளம் முதலிய பொருளாதார சௌகரியங்களை அதிகமாக்க வேண்டும். அதற்கு அதிகமான அளவு பணத்தை பட்ஜெட்டில் ஒதுக்கவேண்டும். அப்படி ஒதுக்கினால் மற்ற வாழ்க்கைத் தேவைகளை நாட்டு மக்களுக்கு குறைக்க வேண்டும். பழையபடி தொழிற்சாலைகளை — ஆயுத சாலைகளாக மாற்ற வேண்டும், அதன் பலன் மக்களுக்கு வேண்டிய சாமான்களின் விலை உயரும். அழிந்துபோன ஐரோப்பாவை திருத்தியமைக்கும் திட்டங்களை ஒத்திப் போடவேண்டும். அதோடு மாத்திரமில்லை. சம்பளம் அதிகம் கிடைக்கிறது என்று பல தொழிலாளர்கள் போர் வீரர்களாகமாறினால் இருக்கின்ற தொழிலாளர் அதிகக் கூலிகேட்பர் பலன் மார்க்கெட்டில் மக்களுக்கு சாமான்களில் எட்டிப்பிடிக்க முடியாத அளவுக்கு உயரும். எப்படிப் பார்த்தாலும் இப்பொழுது இருக்கிற நிலையில் ஐரோப்பா இன்னொரு போராட்டம் நடத்த முடியாது. ஆனால் கம்யூனிசத்தோடு அவர்களுக்கு ஏற்பட்டுள்ள கொள்கை விரோதமோ தீர்ந்துவிடக் கூடியதாகத் தோன்றவில்லை. இந்த நிலையில் அமெரிக்கா அதிகப் பணத்தைக் கொடுத்தாலன்றி போர் விஸ்தரிப்பு செய்ய முடியாதென்று கண்டிப்பாக தெரிவித்து விட்டன மேற்கு ஐரோப்பிய நாடுகள். அமெரிக்கா அட்லாண்டிக் உடன்படிக்கை, மார்ஷல் திட்டம் இப்படி பல லேபிள்களில் அந்த பணத்தேவையை பூர்த்திசெய்ய ஆரம்பித்துவிட்டது. அதற்கு மேல்தான் இன்று மேற்கு ஐரோப்பிய நாடுகள் போர்ப்படை விஸ்தரிப்பு ஆரம்பித்திருக்கின்றன.

சென்ற மூன்றாண்டுகளில் பிரிட்டன் செலவழித்திருக்கும் தற்காப்பு செலவு 3,500 கோடி ரூபாய்களாகிறது. சமீபத்தில் 55,500 கோடி ரூபாய்கள் கொண்ட தற்காப்பு திட்டமொன்றை அங்கீகரித்தது, பிரஞ்சு பாராளுமன்றம். இதைத்தவிர அட்லாண்டிக் உடன்படிக்கைப்படி மேற்கு ஐரோப்பிய சேனை ஸ்தாபிக்கப்பட்டு அதற்கு கோடிக்கணக்கான ரூபாய்களை அமெரிக்கா தருகிறது,

ஐஸன்ஹோவரை பிரதம தளபதியாக நியமித்திருக்கிறது. இவ்வளவு திட்டங்களும் முடிவடைந்து ரஷ்யாவுக்கு எதிராக ஓரளவு 15 இலட்சம் கொண்ட சேனையுடனாவது மேற்கு ஐரோப்பா தயாராவதற்கு இன்னும் மூன்று ஆண்டுகளாகும்! அந்த மூன்றாண்டுகளுக்குள் ரஷ்யா நினைத்தால் மறுநிமிடம் ஐரோப்பா பூராவும் அதன்வசம். அப்பொழுது அதை நிறுத்துவதற்கு உலகத்திலே எந்த சக்தியும் கிடையாது. இந்த ஆபத்தும், சஞ்சலமும் நிறைந்த எதிர்காலத்தை நினைத்துப்பார்த்துதான் மேற்கு ஐரோப்பா அரைகுறை மனதுடன் படை விஸ்தரிப்பை செய்கின்றது. பயத்தை போக்கி படையை விரைவில் அதிகப்படுத்தவே ஐஸன்ஹோவர் அங்கே அனுப்பப்படுகிறார்.

யார் என்ன 'பகீரத' முயற்சி செய்தாலும் போர் முனையில் வெற்றி காணமுடியாத சேனையைத் தயார் செய்துகொண்ட ரஷ்யா தற்காலிகமாக மேற்கு ஐரோப்பாவை அதன் விளைவுகளுக்கே விட்டு விட்டு ஐரோப்பிய வல்லரசுகளுக்கு கிடைக்கும் காலனி நாடுகளின் செல்வாக்கை, கைப்பற்றுவதில் தன் கவனத்தை செலுத்தியுள்ளது.

மூன்னூறு ஆண்டுகளுக்குமேலாக பிரிட்டிஷ், பிரஞ்சு மற்ற ஐரோப்பிய நாடுகளிடம் அடிமைப்பட்டு அவதியுற்றிருந்த தென்கிழக்கு ஆசியாவிற்கு ரஷ்யாவின் ஆதரவு மிகவும் திருப்தியளித்தது. சோற்றுக்கில்லாமல், வீடும் உடையுமின்றி இன்னும் அடிமை நிலையிலேயே வாழும் தென்கிழக்கு ஆசியமக்களுக்கு கம்யூனிசம் 'அமிர்தமாகி' விட்டது.

சோஷியலிசம், லிபரலிசம், ஜனநாயகம் என்றெல்லாம் பேசிய எந்த ஐரோப்பிய நாடும் ஆசியக்காரர்களுக்கு சமஉரிமையும், உண்ண உணவும், தங்க இடமும், உடுக்க உடையும் கொடுக்க முன்வரவில்லை. கம்யூனிசத்திற்கு பதில் அந்த அளவு முன்னேற்ற முள்ள இருதய சுத்தியான எந்த கொள்கையும் அவர்களுக்கு முன்னால் வைக்கப்படவில்லை.

ஆகவே அவர்களிடத்தில் எந்த ஒரு முன்னேற்றக் கொள்கையும் வைத்து மனமாற்றத்தை ஏற்படுத்தாமல் அதே நேரத்தில ஆசியா சிகப்பாகாமல் இருக்கவேண்டுமென்றுமாத்திரம் நினைத்தால் அடக்குமுறை சட்டமும், தடியடி தர்பாரும்தான் அரசாங்கங்களின் முதல் வேலையாக வேண்டும். இதனால்தான் ஆசியாவில் கம்யூனிசம் விரைவில் பரவியதும் அடக்குமுறை தர்பாரும் தடியடி நிகழ்ச்சிகளும் அதிகமாகின்றன. அமெரிக்காவின் பொறுப்பு வளர்ந்தது. ஐரோப்பாவிற்கு பொருளாதார உதவியுடன் ஆசியாவிலும் ஸ்டாலினிசத்தை எதிர்க்கவேண்டியிருந்தது—அதுவும் இவ்வளவு நாளும் திரைமறைவில், ஒவ்வொரு ஆசிய நாட்டிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் சேர்ந்துகொண்டு! ரஷ்யா ஒரு பக்கம்—அமெரிக்கா ஒரு பக்கம் என்று அரசியல் உலகில் இப்படி பெருமாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருந்த இந்த ஐந்து ஆண்டுகளும் ஐ.நா. சபை சாவதா, பிழைப்பதா என்று கிடந்தது! அவ்வப்போது, பலநாட்டுபிரதிநிதிகளும் கூடும்போது 'அமைதி' என்றபதம் அடிபடும் அவ்வளவுதான் பிறகு, பழையபடி போர் விஸ்தரிப்பு!

சமீபத்தில் அமெரிக்க போர்த்தலைவர் சர். ஓமார்ப் ராட்லி இந்த 'அமைதி' போரைப்பற்றி குறிப்பிடும்போது "ஆசியாவில் எங்காவது ஓரிடத்தில் கம்யூனிசத்தை எதிர்த்து ஒருமுடிவுசெய்வது என்ற பூகோளப் படத்தைப் பார்த்துக்கொண் டிருந்தோம். கடைசியாக கொரியா தானாகவே வந்து மாட்டிக்கொண்டது" என்றார்.

கம்யூனிச ஒழிப்பு முயற்சியில், அமெரிக்கா ரஷ்யாவை கொரியாவில் சந்தித்தது. அந்த சந்திப்பின்

முதல் பலி ஐ. நா. சபை. சர்வ தேசீய சங்கத்தை விட பரிதாபகரமான நிலையில் ஐ. நா, விடப்பட்டுவிட்டது. ஹிட்லர் சர்வ.தேசீய சங்கத்திற்கு வெளியில் இருந்து வசைமாரி பெய்தான். இன்று ஐ நா வின் உள்ளேயே இரு கட்சிக்கும் தகராறு—இடையே உலகத்தில் அமைதியை நிலவச் செய்யும் எண்ணத்துடன் ஆரம்பிக்கப்பட்ட முயற்சி பாழாகிவிட்டது.

கொரியாவில் போர் ஏற்பட்ட பிறகு, மூன்றாவது உலக யுத்தம் ஆரம்பித்துவிட்டது என்று கொள்வதில் தவறில்லை. கொரியா போர் இன்னும் ஓரிரு ஆண்டுகள் இழுத்துக்கொண்டு போகலாம் ஆனால், முடிவில் இதே வெறியில் இருசாராரும் இருந்து, காலம் அவர்கள் மனதில் அறிவைப் புகட்டினால் அன்றி,போர் நிற்காது. அபிசீனியப் போர் முடிந்து ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு தான் போனயுத்தம் ஆரம்பித்தது!

இந்தச் சூழ்நிலையில் நாம் என்ன செய்வது? ஒவ்வொரு நாடும் தனிப்பட்ட முறையில் என்ன செய்யலாம்?

கம்யூனிசம் தவறானது என்று கருதினால், அதற்காக போர் செய்வதில் பயனென்ன? கம்யூனிசம் ஒரு கொள்கை அது தவறு என்று நினைத்தால், அதை மக்களிடம் கூறி, மக்களிடம் மனமாற்றத்தை உண்டாக்க வேண்டியதுதானே முறை.

மக்கள் கேட்க மறுக்கிறார்கள் என்றால் போர்ப்படை விஸ்தரிப்பால் பலன் என்ன? தற்காப்புத் திட்டங்கள் பெரிதானால் நாட்டில் பஞ்சம் வரும்! பஞ்சமும் வறுமையும் கம்யூனிசத்திற்கு வளமான நிலங்களாயிற்றே! அதுமாத்திரமில்லை, போருக்குத் தயார் செய்ய ஆரம்பித்து ஒவ்வொரு நாடும் அடக்குமுறை சட்டங்களை பிரயோகித்து, மக்களைத் துப்பாக்கி முனையில் ஆளவேண்டிய நிலை ஏற்பட்ட பிறகு ஜனநாயகத்தின் பெயருக்குத்தான் என்ன மதிப்பு? இதைப்பற்றி ஐரோப்பாவின் எண்ணம் எப்படியிருக்கிறது என்பதை பிரிட்டிஷ் ஐ. நா. பிரதிநிதி கென்னத்யெங்கர், ஹார்வர்டு சர்வகலாசாலையில் பேசிய பேச்சிலிருந்து அறியலாம்.

"நோயாளியைக் குணப்படுத்தச் செய்யும் சிகிச்சைகள் நோயாளியையே கொன்றுவிடுவதுபோல, சண்டையும் எந்தக் காரணத்திற்காக ஆரம்பித்தோமோ அதை கொன்றுவிடும். ஒருசமயம் மூன்றாவது உலக யுத்தத்தில் கம்யூனிசம் தோற்கடிக்கப்பட்டது என்றே வைத்துக்கொண்டால்கூட அப்பொழுது முடிவில் ஜனநாயக சமுதாயம் உற்பத்தியாகுமா என்பது ஐயத்திற்கிடமானது. போருக்காக தயார் செய்ய தேவைப்படும் அடக்குமுறைச் சட்டங்கள், அவசரச் சட்டங்கள், சண்டை முடிந்த பிறகு அதனால் ஏற்படும் அவதிகள் அழிவுகள் எல்லாம் நம்மை ஒரு சர்வாதிகார ஆட்சிக்குள்தான் கொண்டுவந்துவிடும். ஒரு சர்வாதிகாரத்தைத் தோற்கடித்து மற்றொரு சர்வாதிகாரத்திற்குள் மாட்டிக்கொள்வோம்" உலகத்தில் அமைதி நிலவ போர் செய்யவேண்டும் என்று எண்ணுகிறவர்கள் இந்தக் கருத்துரையை கூர்ந்து கவனிக்கவேண்டும்.

ஆனால், என்ன செய்தாலும், இரு கட்சிக்காரர்களும் நாம் சொல்வதை கேட்கப்போவதில்லை. இரு கட்சிக்காரர்களும் தங்கள் தங்கள் கொள்கை சரியானதென்று நிச்சயமாக நம்புகின்றனர். 'வெறி' என்ற பதத்திற்கு முழு அர்த்தமும் அவர்கள் நடத்தைதக்குத் தான் தரும். தற்சமயம் இல்லாவிட்டாலும் காலம் கடந்தால், ஆண்டுகள் மறைந்தால் ஒருவேளை இருவரும் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள சந்தர்ப்பம் ஏற்படலாம். அதுவரை போர் ஏற்படாதவாறு தடுத்துவிட்டால், மனித பரம்பரை இன்னொரு போரிலிருந்து தப்பலாம்.

இதில் இந்தியாவின் நிலை என்ன?

'என்ன நடந்தாலும் சரி! நாங்கள் போரில் சேருவதில்லை' என்று நேரு சர்க்கார் உலகுக்கு அறிவிக்கவேண்டும். நம்முடைய நாடு அமெரிக்க தளமாகாது என்றால் நம்மீது ரஷ்யா கோபமடைய எந்தக் காரணமும் தோன்றவில்லை. அதேபோல் சிகப்பாகாத இந்தியாவைப்பற்றி அமெரிக்கா கவலைப்படாது. ஒழுங்காக உள்நாட்டைப் பொறுத்தவரை ஜனநாயக ஆட்சி செய்து வந்தால், உலகத்திலேயே மத்திய சக்தியாக இந்தியா வளரவழியிருக்கிறது. இந்தஒருவழியில் சென்றால்தான் இந்தப் பெரும் புயலிலிருந்து தப்பலாம். ஓரளவுக்கு அமைதி நிலவச் செய்யலாம். இம்மாதிரி பல நாடுகள் செய்தால் சண்டை காலங்கடந்து செல்லும். ஒருவேளை முன்பு கூறியவாறு, காலம், வல்லரசுகளின் கொள்கைத் தகராறை மாற்ற வழி ஏற்பட்டாலும் ஏற்படலாம்.

கடைசியாக, பேராசிரியர் ஐன்ஸ்டைன் மூன்றாவது உலகப்போரைப்பற்றி கூறியதை நினைவிற்குக் கொண்டுவருவோம்.

"மூன்றாவது உலகப் போர் ஏற்பட்டு நடந்தால் அதன் விளைவு பயங்கரமாக இருக்கும். நாகரீகமே அழிந்துவிடும். சுருக்கமாகக் கூறின், நாலாவது உலகப் போரை, மனிதன் கற்களையும், கொம்புகளையும்கொண்டு நடத்துவான்."

—X—


அனைவருக்கும் எமது

# பொங்கல் வாழ்த்துக்கள்

எமது புதிய வெளியீடு!

**கமலினி**

டி. கே. மூர்த்தி எழுதிய கதைப் புத்தகம்

விலை 4-அணா

முன்னர் வெளிவந்தவை:

**கன்னியா? விதவையா?** விலை 8-அணா

**வஞ்சகி** விலை 8-அணா

தேவைக்கு:

**சரோஜினி பதிப்பகம்**

(Ad) புதுச்சேரி.

# இருட்டறை

இடம்:- சட்டக் கல்லூரி வெளி மண்டபம்

இருப்போர்:- சங்கரன், கோபு, லலிதா—
கல்லூரி மாணவர்கள்.

ச:- இன்று கடைசியிலே நடந்த வகுப்பிலே, கவனமுடன் கேட்டாயா?

கோ:- இந்திய புதிய அரசியல் திட்டத்தைப் பற்றிக் கூறினாரே, அதுபற்றித் தானே கேட்கிறாய்? நன்று கேட்டேன்.

ச:- சட்டம் ஒரு இருட்டறை யென்பதிலே எவ்வளவு அர்த்தம் பொதிந்திருக்கிறது, தெரியுமா?

கோ:- ஏன் அப்படிச் சொல்கிறாய்?

ச:- கோபு—களங்கமில்லாத மனதோடு கேள். சொல்கிறேன். நாம் இருவரும் சட்டக் கல்லூரி மாணவர்கள்—ஆகவே சட்டங்களைப் பற்றி ஆராயவும், குறை கூறவும், பாராட்டவும் நமக்கு உரிமை உண்டு.

கோ:- பீடிகை பலமாக்ன்று போடுகிறாய்—விஷயத்தைச் சொல்லேன்.

ச:- சட்டத்தால், ஒரு பெரிய சமுதாயத்தின் நல்வாழ்வே பொடிப் பொடியான சம்பவத்தை மனதில் நிறுத்திக்கொண்டு பேசுகிறேன்.

கோ:- ஓகோ, இப்பொழுது புரிகிறது—கம்யூனல் ஜி. ஓ. வைப் பற்றிப் பேசுகிறாய். என்ன செய்வது? சட்டம் அப்படி—அதன்படி தீர்ப்பு கிடைத்தது. வேண்டுமானால் இந்திய சட்டத்தையே திருத்திக் கொள்ளட்டுமே!

ச:- உங்களுக்குச் சாதகமாக இருப்பதால், இப்படிப் பேசுகிறாய்—கோபு—இல்லாவிட்டால், நீ ஆத்திரத்தால் கூத்தாடுவாய்!

கோ:- சங்கர், கொஞ்சம் யோசிக்கணும், இதிலே, ஒரு குலத்தைக் குறை கூறுவதைவிட, சட்டத் தொகுப்பைச் சாடவேண்டும். இந்திய சட்டத்தின் 15 (1) ஷரத்துப்படித் தானே வழக்கிட்டார்கள். மதம், இனம், சாதி, பால், இடம் இவைகளின் காரணமாகவோ அல்லது இவைகளில் ஏதேனும் ஒன்றின் காரணமாகவோ ஒரு பிரஜையின் உரிமையை மறுக்கக்கூடாது. இதனைக் கொண்டுதானே போராடினர்.

ச:- எனக்கு சட்ட விளக்கம் தேவையில்லை. நான் அதனை அலசிப் பார்த்த பிறகு தான் கூறுகிறேன். அவர்கள், ஒரு இனத்தின் வாழ்விற்கு வழியமைத்த வகுப்புவாரி உரிமையைப் பறிக்க, 29 (2) ஷரத்தைப் பெரிதும் துணையாகக் கொண்டனர். சர்க்காரோ, சர்க்காரின் பொருளுதவியோடு கூடிய நிலையங்களினாலோ நடத்தப்படுகிற கல்விச்சாலைகளில், மதம், இனம், சாதி, மொழி இவைகளையோ, அல்லது இவைகளில் ஏதேனும் ஒன்றையோ காரணமாகக்கொண்டு ஒரு குடிமகனுக்கு அனுமதி மறுக்கப்படக் கூடாது. இதை வைத்துக் கொண்டுதான் வழக்கிலே வெற்றியும் பெற முடிந்தது.

கோ:- அவசரப்படாதே, சங்கர் — அதற்குள் நீ தீர்ப்பளிக்கும் பெரிய வேலைக்கு ஏன் போகிறாய்? பொறுத்திருந்து பார். சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வரட்டும்!

கோ:- கேலியும், கிண்டலும் பேசுகிறாய் —ஆனால், இந்நாடு இன்று கேலிக்குரிய பொருளாகத்தானே போய் விட்டது! நம்முடைய தெளிவிற்காகவே பேசுவோம். கல்லூரியில் அனுமதி மறுக்கப்படக் கூடாது என்றால் என்னவென்று கொஞ்சம் தெளிவாகவே புரிந்துகொள்ள வேண்டும். சூத்திரர் இவர்கள், ஆகவே ஆண்டவன் ஆலயத்திலே கர்ப்பகிருகத்திற்குள்ளே, வரக்கூடாது என்கிறார்கள். அப்படியா அனுமதி மறுக்கப்படுகிறது? சூத்திரன் இவன், தேவமொழி படித்தால் நாவை அறு, கேட்டால் ஈயத்தை ஊற்றுக் காதில் என்று பேசினார்களே, அப்படியா அனுமதி மறுக்கப்படுகிறது? இல்லையே! இவன் சாதியிலே தாழ்ந்தவன்—ஆகவே, இந்தக் குளத்திலே இறங்காதே, அந்த ஏரியிலே நீர் குடிக்காதே—இந்த வீதி வழி நடக்காதே—அந்த ஆலயத்திற்குள் நுழையாதே என்று மறுக்கப்பட்டதே- அப்படியா? இல்லை-இல்லை- ஒருக்காலும் இல்லை!

கோ:- கல்லூரியைப் பற்றிய சட்டம் இது.

ச.- இருந்தாலும் கேள்-கம்யூனல் ஜி ஓ யாரையும் அனுமதி மறுக்கவேண்டும் என்று சொல்லும் ஏற்பாடு அல்ல—எல்லோரையும் கல்லூரியில் குறிப்பிட்ட திட்டத்தின்படி சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று அழுத்தமாகக் கூறும் உடன்படிக்கை! ஆகவேதான் அந்தச் சட்டத்தைக்காட்டி, இதை மறுக்க என்மனம் இடந்தராது.

கோ:- சட்டம் முழுவதும் படித்து முடிக்கவில்லை-நாம் மாணவர்கள்!

ச:- மாணவர்களானாலும், மதிப்புள்ளவர்கள்! ஆகவே சிந்திக்கிறோம். சட்ட இருட்டறைக்குள்ளே, சிந்தனை விளக்கேந்திச் செல்லவேண்டும் என்கிறேன்.

[இப்பொழுது கல்லூரி மாணவி லலிதா
வந்து வருகிறாள்]

ல:- சங்கர், என்ன கோபுவிடம் தர்க்கம் செய்கிறீர்கள்?

ச:- லலிதா, இந்திய சட்டத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன்.

ல:- சட்டம் ஒரு சிக்கல் நிறைந்த சிலந்திக் கூடு. அது ஆண்களுக்கு வேண்டுமானால் தேன் கூடாக இருக்கலாம்-எங்களுக்குத் தேள் விஷந்தான்.

கோ:- ஏன் —எதற்காக அவ்வளவு சலிப்போடு சொல்கிறாய்?

ல:- கோபு-நீ 'கெட்டிரு' நிபுணனாயிற்றே- 15 (1) ஷரத்து என்ன சொல்கிறது?

கோ:- மதம், இனம், சாதி, பால், இடம் இவைகள் காரணமாகவோ அல்லது இவைகளில் ஒன்றின் காரணமாகவோ......

ல:- உரிமை மறுக்கப்படக் கூடாது அவ்வளவு தானே! பெண்பால் காரணமாக, எங்களுக்கு உரிமைகள் மறுக்கப்படுகின்றன தெரியுமா? எங்களை, அடக்குமுறைச் சட்டங்களால், இந்த ஆண்குலம் எவ்வளவு ஆட்டிப்படைக்கிறது தெரியுமா!

ச:- ஆம், ஆம்!

ல:- ஒரு உதாரணம் கேள் கோபு-13 (1) ஷரத்துப்படி, புதிய அரசியல் திட்டப்படி, இந்திய ஆட்சியில் இதுவரையில் நடந்துவருகிற சட்ட திட்டங்கள், புதிய அமைப்புக்கு எதிராக இருந்தால் செல்லாது என்று கூறப்பட்டுள்ளது. இதன்படிப் பார்த்தால் இந்து, முஸ்லீம் சட்ட திட்டங்கள் எல்லாம் எடுபட்டாக வேண்டும். ஏன், மதம் காரணமாக வெவ்வேறு நீதிகள் வழங்கக் கூடாதே!

ச:- ஆமாம், இந்துக் குடும்பத்திலே, மகன் மட்டும் தன் தந்தையின் சொத்திலே பாகம் பெறுகிறான், மகளுக்கு அந்த உரிமை மறுக்கப்படுகிறது. முகம்மதியக் குடும்பத்திலே பெண்ணும் தந்தையின் சொத்தில் பாகம் பெறுகிறாள்: ஆனால் சகோதரன் பெறுகிற அளவல்ல—குறைவு!

ல:- மதத்தின் பெயரால், பால் வேற்றுமை நடைபெறுகிறது—உரிமை பறி போகிறது எவ்வளவு சிக்கல்! எவ்வளவு சுழற்சிகள்!

கோ:- தீர்க்கமான அறிவு நமக்கு இன்னும் வரவில்லை. வந்த பிறகுதான் இதுபற்றி நாம யோசிக்க வேண்டும்.

[கோபு நழுவுகிறான்: லலிதா சிரிக்கிறாள். சங்கரன் மட்டும் வாட்டமாகவே நிற்கிறான்]

இடம்: —கோபுவின் வீடு
இருப்போர்: —அவன் தந்தை வரதராச அய்யங்கார், கோபு, சங்கரன்

கோ:- அப்பா, சட்டம் இருட்டறையாம்!

வ:- சட்டம் ஒரு கழுதை யென்று கூடத்தான் சொல்வார்கள்.

கோ:- ஏன்?

வ:- எதையும் தாங்கும்—எப்படி எப்படிப் பேசினாலும் பொருத்தங் காட்ட முடியும்.

கோ:- ஒரு சந்தேகம் அப்பா, இந்த அறை இருக்கிறது; இதிலே நான் போகணும்னு சொல்றேன். நீங்கள் போகக் கூடாதென்று சொல்லல்லே. அடிக்கடி போகாதே—அவசியமில்லாமல் போகாதே என்றுமட்டும் சொல்கிறீர்கள்; அதனை, நுழைய அனுமதி மறுக்கிறீர்கள் என்று கொள்ளலாமா?

வ:- எப்படி? நான்தான் உன்னைப் போகச் சொல்கிறேன். ஆனால், அடிக்கடி, அவசியமின்றி போகாதே என்கிறேன்.

கோ:- அப்படியானால், வகுப்புவாரி உரிமையும், நம்மவரைக் கல்லூரிக்குள்ளேயே நுழையக் கூடாது என்று கூறவில்லையே — அளவோடு சேர்க்கவேண்டும் என்று கூறுகிறது.

வ:- அதற்கு இப்பொழுது என்னடா?

கோ:- இன்று இந்திய அரசியலமைப்பு வகுப்பு நடந்தது. அதிலே ஒரு சந்தேகம்! 29 (2) ஷரத்துப்படி அனுமதி மறுக்கக்கூடாது என்றிருக்கிறதே ஒழிய அனுமதி அளவோடு அளிக்குப் முறைக்கு எதிர்ப்பாக இல்லையே!

வ:- போடா, போ, போக்கிரிப் பயலே—சட்டம் ஒரு கழுதை!

கோ:- அப்பா, கேளுங்கோ—இன்னொரு சந்தேகம்! 16 (1) ஷரத்துப்படி சர்க்கார் உத்தியோக நியமனங்களில் எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் தரப்பட உறுதியளிக்கப்படுகிறது.

வ:- ஆமாம், அப்படி யிருப்பதுதானே நல்லது. திறமை, தகுதியுள்ளவர் உத்தியோகம் பெறலாம்.

கோ:- ஆனால், இதன்படி, உத்தியோகமுறையில் கம்யூனல் ஜி. ஓ. கூடாதென்று எப்படி வாதிடமுடியும? எப்படிச் செல்லும்?

வ:- கம்யூனல் ஜி. ஓ. உயிரோடிருந்தால், எல்லோருக்கும் அப்படி சமசந்தர்ப்பம் தரமுடியும்?

கோ:- நீங்கள், வக்கீல் உத்தியோகம் பார்க்கிறீர்கள்—சட்டத்தின் முன்னும் பின்னும் நன்றாக பார்க்க வேண்டும். அதே சட்டத்தின் (4) ஷரத்துப்படிப் பார்த்தால், வகுப்புவாரி உரிமை தவறில்லையென்றல்லவா தெரிகிறது இந்த சட்டத்தின்கீழ், தாழ்த்தப்பட்டவகுப்புகளுக்குசில பல உத்தியோக நியமனங்களை ஒதுக்கிவைக்கும் உரிமை மறுக்கப்படவில்லையே!

வ:- கற்ற வித்தையை என்னிடமே காட்டுகிறாயா?

கோ:- வரும்பொழுது, சங்கரனோடு இதுபற்றி தர்க்கம் செய்தேன். ஆனால், அவனிடம் எதையும் விட்டுக்கொடுத்துப் பேசவில்லை. உங்களிடம் தெளிவிற்காகப் பேசினேன். தவறாக நினைக்கவேண்டாம் அப்பா.

வ:- தவறு செய்துதான், சட்டப் பிரயோகத்தின் உண்மையான வலிமையைத் தெரிந்துகொள்ளமுடியும் என்பார்கள். அப்படித் தெரிந்துகொள்ளும் சந்தர்ப்பமாக இது இருக்கட்டுமே!

கோ:- ஆனாலும், சட்டம் செய்பவர்கள் நாம், மறுப்பவர்களும் நாம் என்று கூறுகிறார்களே, அதன்படி சட்டத்தை உடைக்கவே முனைந்துவிட்டால், நிலைமை என்ன ஆவது?

[இப்பொழுது சங்கரன் வருகிறான். அவன் அவர்கள் உரையாடல் முழுவதையும் வெளியிலிருந்தபடி கேட்டுவிட்டுத்தான் உள் நுழைகிறான்]

ச:- சட்டம் இருட்டறை என்றார்கள்—சாளரங்களான வக்கீல்களோ, காற்றையும்விட மறுக்கிறார்கள், வெளிச்சத்திற்குத்தான் தடை போட்டாலும்!

வ:- என்னடா, சங்கரா, பிரசங்கம்பண்ண ஆரம்பித்துவிட்டாய்!

கோ:- அவன்தான் பெரிய பிரசங்கியாயிற்றே!

ச: ஆமாம், இருட்டறைக்குள்ளே நுழைய நல்ல ஒளி வேண்டும். அதற்கேற்ற திறம்வேண்டும்.

[வக்கீலும், அவர் மகனும் விழித்தனர். சங்கரன் பேசியபடி நடந்து சென்றான், வெளியே.]

# பகுத்தறிவுப் படையமைப்போம்

வில்

நந்தாளியில் மரப்பட்டை மூலிகை விநியோகத்தால் ஏற்பட்ட கோர விளைவுகள், பகுத்தறிவைப் பயன்படுத்தும் சூழ்நிலையில் குழந்தைகளை வளர்க்கவேண்டிய அவசியத்தை மக்கள் உணரும்படிச் செய்யும். சமூகத்தில் ஊறிப்போன குருட்டு நம்பிக்கை, படித்த மக்கள், பாமரர்கள் எல்லோரையும் பிடித்துக்கொண்டதென்பதை இந்த நந்தாளி சம்பவம் நிரூபித்து விட்டது.

ஓரிஸா கவர்னர் ஆசப்அலி இப்படிபேசினார்.

எங்கு பேசியிருக்கிறார் — விருந்திலே! விருந்து வைபவத்திலே, விருந்து முடிந்தபிறகு இந்த 'மாமருந்தை' தந்திருக்கிறார் ஆசப்அலி. ஆம், விருந்து, ஓரிஸா பிரதமரும், சுகாதார மந்திரியும் சேர்ந்து நடத்தியதுதான் — அங்கு கவர்னர் இந்த கருத்துரையை அளித்துள்ளார்.

மந்திரிகள் விருந்து நடத்தியுள்ளனர்—மாணவர்களுக்கு! மந்திரிகளை அழைத்து விருந்து நடத்தியதுபோய், மாணவர்களை அழைத்து நடத்தியிருக்கிறார்கள், பெருவிருந்து! நந்தாளியிலே நடந்தகொடுமையிலே சிக்கியவர்களுக்கு, சிகிச்சையளித்த வைத்தியக்கல்லூரி மாணவர்களுக்கு விருந்து! அதிலே கவர்னரின் அறிவுரை.

குருட்டு நம்பிக்கை
கோரவிளைவுகள்
பிடித்துக்கொண்டது
நிரூபித்துவிட்டது.

வார்த்தைகளைப் பாருங்கள் — வளைவு, நெளிவு, குழைவு, தழுதழுப்பு, தயக்கம் ஏதுமில்லை. அழுத்தமான வார்த்தைகள்—கொஞ்சம் கண்டிப்பும் உறுதியும் கலந்த கனமான வார்த்தைகள்.

மூடக்கொள்கைகளிலே, ஊறிக்கிடக்கிறதை எப்படிக்கண்டிக்கிறார்? குருட்டு நம்பிக்கை-கண்ணுள்ளோர் கருத்திலே இருக்கக்கூடாத நம்பிக்கை யென்கிறார். நம்பியதால் சாதாரண விளைவுகளல்ல - கோரவிளைவுகள் ஏற்பட்டுவிட்டன! என்று குருட்டுக் கொள்கைகளை வன்மையாகக் கண்டிக்கிறார்.

குருட்டு நம்பிக்கையை கொள்வதில்லையாம்- அந்த நம்பிக்கை பிடித்துக்கொள்ளுமாம் — அட்டையைப் போல, உடும்பைப்போல! ஆம், ஆசப்அலி தீர்மானமாகச்சொல்கிறார்--நேபாளபாபா, நிகழ்ச்சியொன்றே போதும், குருட்டு எண்ணங்களின் கொடுமைக்கு ஏற்ற சான்று! அதைக்கொண்டே நிரூபித்துவிடலாம் என்று!

படித்த மக்கள்
பாமரர்

ஆசப்அலி, இரண்டுகூறாக ஆக்குகிறார். எனினும் குருட்டுக்கொள்கை இருசாராரையும் விட்டுவிடுவதில்லை யென்கிறார்.

அவனுக்கு ஜுரம், ஆகவே பிதற்றுகிறான்! அவனுக்கு கண் தெரியாது. ஆகவே தடுமாறுகிறான்! அவன் செவிடு--எனவே நாம் கூறுவதைக் கேட்கவில்லை! அவன் நொண்டி—அதனால்தான் தத்தித்தத்தி நடக்கிறான்! என்று கூறலாம். அதுபோல பாமரன் குருட்டு எண்ணங்களிலே தன்கருத்தை அழுத்திக் கொள்கிறான். அதிலே விசித்திரமுமில்லை-விபரீதமாகத் தோன்றவில்லை

குயிலிடம், குரலினிமையை எதிர்பார்க்கிறோம், மயிலிடம், மனதை மயக்கும் ஆட்டம் இருக்கும் என்று நம்புகிறோம். கிளி நம்மிடம் கொஞ்சு மொழி பேசும் என ஆர்வத்தோடு இருக்கிறோம்.

அதுபோலத்தான், படித்தவர்களிடம் பகுத்தறிவை எதிர்பார்க்கிறோம். ஆனால் இந்த பூமியிலே படித்தவரும், பாமரரைப்போல அல்ல, பாமரனைவிடமோசமாக, விசித்திரமாக, மூடக் கருத்துகளை நம்பிக்கிடக்கிறார்கள்.

பாமரன், நம்புவான்-காரணம் சொல்லமாட்டான் சொல்லத் தெரியாததால்! படித்தவனோ, விசித்திர வாதம், பேசி, விபரீதமாக நடந்துகொள்கிறான்.

ஆசப்அலி, அதனால் இருசாராரையும் குருட்டு நம்பிக்கை பிடித்துக்கொண்டு உருக்குலைக்கிறது என்கிறார்.

* * *

பகுத்தறிவு வழிப்படி குழந்தைகளை வளர்க்க வேண்டும்என்கிறார் ஓரிஸாகவர்னர். ஆம்,வளர்க்கத்தான் வேண்டும். வழி? இங்கு படித்தவர்கள்தான், பாமரரே பரிகசிக்கிற மாதிரியில் விடாப்பிடியாய், பழமைக்கருத்துகளைப் பிடித்துக்கொண்டிருக்கிறார்களே!

படித்தவர்கள் இப்படி-பத்திரிகை உலகிலே பவனி வரும் 'நல்லறிவாளர்களோ' மூடமதிக் கொள்கைகளை பரப்பும் படையின் முன்னணி வீரர்களாக உள்ளனரே!

நேபாளபாபா நிகழ்ச்சியிலே இந்நாட்டுபத்திரிகையாளர்கள் நடந்துகொண்ட முறையைக்கண்டு நாட்டின் நல்வாழ்வில் அக்கரைகொண்டோரனைவரும் கண்ணீர் சிந்தினர்.

அறிவொளி பரப்பும் திருவிளக்குகளல்லவா, இந்நாட்டு தினசரிகள்-அதிலே அர்த்தமற்ற வெறியாட்டங்களுக்கெல்லாம், அவசியமில்லாமல் விளம்பரந்தந்து, பாமரரை, இன்னமும் படுகுழியில் தள்ளுகிறார்களே என்று நொந்த உள்ளத்துடன் சோகம்பிம்பமாக இருந்தோர் எண்ணிலடங்கார்.

உழவர்
கிராம பஞ்சாயத்து **மாநாடு**

**ஜன, 20, 21, நாட்களில்**

**திருச்சியில்** நடைபெறும்

முன்னாள் பிரதமர் ஓ. பி. இராமசாமி,
சி. என். அண்ணாதுரை மற்றும் பலர்
கலந்து கொள்கின்றனர்.

ஜில்லா போர்டு, நகர சபை, யூனியன் போர்டு
தலைவர்கள் பலரும் வருகின்றனர்.

டாக்டர். பால். மதுரம்,
ராஜா சிதம்பரனார்,
வரவேற்புக் கழகத் தலைவர்கள்.


நாமும், நெஞ்சு குமுறினோம், இந்த நெறிகெட்டோரின் நடத்தையைக் கண்டோம். கண்டித்தோம், வேதனையோடு—இந்தப் போக்கு கூடாது ஆகாது என்று கூறினோம்.

இதுபோன்ற மூடநம்பிக்கை செய்திகளைப் பரப்பும் பத்திரிகைகளை கூண்டிலேற்ற வேண்டும். இன்றேல் இந்தப் பித்தவிளையாட்டு ஒழியாது எதையாவது பரப்பி, வாழ நினைக்கும் செயலை சமுதாயத்தைக் கோரக் களத்துக்கே கொண்டு செல்லும், இது வளர்வது கூடாது. அனுமதிப்பதும் ஆகாது, தகாது!

இப்படி, நம்வேதனைக் குரலை வெளியிட்டோம். வீண்போகவில்லை. சில பத்திரிகையாளர்கள், நம்வழியிலே நடந்திடத் துணிந்துவிட்டனர். அவர்களைப் பாராட்டுகிறோம். அவர்களின் நேர்மையான போக்கு இன்னும் தொடர்ந்தும் நீடிக்கவேண்டும் என்றுவிரும்புகிறோம்

இதோ படியுங்கள்.

“அப்படிப் பார்த்தும் கூட, நேபாள பாபாவையோ அல்லது அவரை உபயோகப் படுத்திப் பணம் பறிக்கத் திட்டமிட்ட சதிகாரர்களையோ அரசாங்கம் கைது செய்யவில்லை. அதற்கு மாறாக மக்களை அங்கு போகவேண்டாம் என்று மட்டும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை யடுத்து வங்கத்தில் ஒரு மூலிகை கிடைப்பதாகக் கட்டிவிடப்பட்ட கதையின் மூலம் 30,000 பேர்களுக்குமேல் அங்கு புறப்பட்டுப் போனதாகவும், இதனால் 13, கிராமங்களில் வாந்திபேதி நோய் பரவியதாகவும் செய்தி வருகின்றது. தமிழ்நாட்டில், சில இடங்களில் வருணஜெபம் செய்தால் மழையைக் கொண்டுவந்து விட முடியும் என்று மக்களை ஏமாற்றி பலர் வருணஜெபம் செய்ததாகவும் செய்திகள் வருகின்றன. இவற்றையெல்லாம் குறித்து சம்பந்தப்பட்ட அரசுகள் தகுந்த கடும் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். ஏமாற்றுக்காரர்களை பிடித்துக் கடும் தண்டனை வழங்கவேண்டியதும் முக்கியமாகும். மூடத்தனமும், அறியாமையும் எந்த உருவத்தில் வந்தாலும் அதை ஒழித்துக்கட்ட அரசாங்கம் துணியவேண்டும். மக்கள் நலன்களை முன்கூட்டித் தெரிந்து நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளாத அரசு எதுவும், மக்களின் நன்மதிப்பைப்பெற முடியாது!’

“நேபாள பாபா-ஒரு பன்னிரண்டு வயது சிறுவன்; மாட்டுக்காரப் பையன். எனவே, இந்த அற்புத மூலிகை நிச்சயமாக ஒரு கூட்டுக் கம்பெனியால்தான் தயாரிக்கப் பட்டிருக்கவேண்டும். விளக்கமாகக் கூற வேண்டுமானால், சில சுயநலமிகளும் சூது மதியினரும் சேர்ந்து தயாரித்துள்ள சதித் திட்டத்தின் நடவடிக்கை, இது என்றுதான் கூறவேண்டும். இத்தகைய சமுதாயசிக்கண்ணர்கள் ஒரிசாவில் மட்டுமல்ல, நம் சென்னை ராஜ்யத்திலும் கூடத் திரிகிறார்கள், நிலைமை முற்றுமானால் சென்னையிலும் சில இடங்கள் ‘நங்காளி’யாக மாறக்கூடும் எனவே, அரசாங்கங்கள் உடனடியாக விசாரணை தொடங்கி, ஆயிரக்கணக்கான மக்களைப் பலி வாங்கிய ‘பாபா’க்களையும், அவர்களுக்குப் பக்கபலமாக இருந்த பித்தலாட்டக்காரர்களையும், இன்னும் ஏராளமான மக்களின் உயிருக்கு உலைவைத்துத் தம் வாழ்க்கையை வளமுள்ளதாக அமைத்துக் கொள்ளத் திட்டமிட்டு நாட்டில் உலவும் சதிகாரர்களையும் கொடுந் தண்டனைக்குள்ளாக்கவேண்டும். அப்போதுதான் நாடு சகாராவாகாமலிருக்க முடியும்.”

“அறியாமை ஆட்சி புரிகிற நாடு-மூடத் தனத்தின் மூலஸ்தானம் — இந்தியாவைப் போல வேறொன்று இருக்க முடியாது.

படித்தவர்கள் பதினெட்டு சதவிகிதம் பேர்தான் என்ற நிலை நீடிக்கிற இந்த நாட்டிலே, மக்களின் அறியாமையை மூலதனமாக்கிப் புகழும் பணமும் பெறத் திட்டமிட்டு வேலை செய்கிறவர்கள் நிறையவே இருக்கிறார்கள். சகல துறைகளிலும் இவர்கள் வெற்றிகரமாகச் செயலாற்றி வாழமுடிகிறது. மூட நம்பிக்கையும் மடத்தன சம்பிரதாயங்களும் படித்தவர்களைக் கூட அறிவில்லாதவர்கள் போல் நடந்து கொள்ளத் தூண்டுகிற நாட்டில் மடையர்கள் சுலபமாகப் பிறர் கவனத்தைக் கவர்ந்து வெற்றிகரமாக வாழ முடிவது வியப்பே அல்ல.

இத்தகையவர்களின் செய்கைகள் மக்களை மிருக நிலைக்கு மாற்றி விடுவதுடன்

நாட்டில் சிறுமைகளையும் சீரழிவுகளையும் வளர்த்து வருகின்றன. இவை மேலும்வளர்வதற்கு இந்நாட்டுப் பத்திரிகைகள் பலதுணை புரிகின்றன. பரபரப்பான செய்திகளைப் பிரசுரித்து, மக்களின் ஆசையைத் தூண்டிவிட்டு, விற்பனையைப் பெருக்கிக் கொள்ள விரும்புகிற பத்திரிகைகள் சுயநலமிகளின் மோச வேலைகளை ஆரம்பத்திலேயே அம்பலப் படுத்திக் கண்டிக்க முன்வருவதில்லை.

இவற்றுக்கு சரியான உதாரணம், அண்மையில் ஒரிஸா அருகிலே உள்ள ஊரில் நடைபெற்ற மாயமருந்து மோசடியாகும்.

இவை யெல்லாம் மனிதரை மூடராக் மாற்றும் வேலைகள் தான். இத்தகைய புரளிகளைக் கேட்டு மக்கள் ஏமாற்றம் அடையாமல் இருக்க வேண்டும். இவ்வித முட்டாள் தனமான புரளிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நாட்டைக் கெடுக்கும் சேவையில் பெரும் பங்கு கொள்வதைப் பத்திரிகைகள் தங்கள் நோக்கமாகக் கொண்டிருப்பது நல்லதல்ல."

பிரசண்ட விகடன், வாரச் செய்தி, ஹனுமான், போன்ற ஏடுகள், நம்மைப்போலவே கண்டித்துள்ளன. அவர்களின் கண்ணியத்தைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

ஆனால்: எழுதியதோடு, தங்கள் பணி முடிந்துவிட்டது என்றிருந்திடவும்கூடாது என்று கூறத்தான் வேண்டியுள்ளது. மூடமதிக் கொள்கைகள், இன்று மக்களின் இரத்தத்திலே, நரம்புகளிலே, எலும்புகளிலே ஊறிப்போய்க் கிடக்கின்றன. அவைகளை விரட்டுவது அவ்வளவு எளிதான காரியமல்ல—ஏட்டிலே எழுதிடுவதால், கண்டனத் தலையங்கங்களால் மாறிவிடக்கூடியதுமல்ல! ஆகவே, அவர்கள், மூடநம்பிக்கைகளை முறியடிக்கும் முயற்சியிலே, எந்த வேற்றுமையையும் மனதிலே மேயவிடாமல் முழுமூச்சாக இறங்கி வேலைசெய்யவேண்டும். பகுத்தறிவுப் படையிலே பங்குகொள்ள வேண்டும்.

நேபாள பாபா, நேற்றுத் தோன்றிய நச்சுமரம்—இதற்குமுன் தோன்றியவர்கள் ஏராளம்—இன்று நம் நாட்டில் ஆயிரமாயிரம் 'பாபா'க்கள் ஆபத்து ஏதுமின்றி, ஆட்சியாளரின் அரவணைப்பிலே சொக்கிக் கிடக்கின்றனர். அவர்களை அம்பலத்திற்கிழுத்துவரும் அறப்பணியிலே அவர்கள் இறங்கவேண்டும்.

நேபாள பாபாவை, சர்க்காரே கண்டித்தது—நாட்டு மக்களுக்கு நல்லறிவு கொளுத்திவிட்டது. சர்க்காரையும் நாம் போற்றுகிறோம். கண்டன உரை வழங்கிய பத்திரிகையாளர்களையும் நாம் பாராட்டுகிறோம்.

எனினும், இன்னமும், பெரிய பத்திரிகைகள் என்று பேசப்படுகின்ற ஏடுகள் வாய்மூடிக் கிடக்கின்றன. மூடக்கொள்கைகள், தினந்தினம் குவிக்கின்றன, நாட்டினரின் வெள்ளை நெஞ்சங்களிலே! அவைகள், தங்களைப்பற்றி, தங்கள் வருவாயைப்பற்றி, பெரிதாகக் கருதுகின்றனவே ஒழிய, நாட்டை, நாட்டோரை, துளியும் மதிக்கவில்லை. இந்நிலை மாறத்தான் வேண்டும்—மாற்றத்தான் வேண்டும். அதுவும் அத்துறையிலே உள்ளவர்கள், இப்போக்கை எத்தனை நாட்கள் தாங்கிக் கொண்டிருக்கமுடியும்!

நேபாள பாபா, நேற்று வீசிய விஷப் புயல்!—நெடுநாள் இத்தகைய புயல்களை வீசவிட்டுக்கொண்டிருக்கும் இந்த விஷக் களஞ்சியங்களை, நாம், இனியும் விட்டுக் கொண்டிருக்கமுடியாது!

* * *

ரந்தாளியில் மாடு மேய்க்கும் சிறுவன் மரப்பட்டை மூலிகையொன்றை வழங்கி வந்ததையொட்டி, இந்த சங்கர் கட்டநதிலும், 'சர்வ ரோக நிவாரணி ஸ்தலம்' திடீரென்று தோன்றியிருக்கிறது. துவாரகை, பிரஹ்மனு என்ற இரு நதிகள் சங்கமமாகும் இந்த இடத்தில் செவ்வாய்க்கிழமையன்று தீர்த்தமாடினால் சகல வியாதிகளும் குணமடைந்துவிடுவதாக பொய் வதந்திகள் பரவ ஆரம்பித்துவிட்டன. குஷ்டரோகிகள், க்ஷயரோகிகள், உட்பட ஏராளமான நோயாளிகள் அங்கு வந்து குவிய ஆரம்பித்தனர். கூட்டம் கூடுவது தடைசெயயப்பட்டதுடன், இந்த இடத்திற்கு பஸ் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டிருக்கிறது. அனுமதியின்றி பஸ் சர்வீஸ் நடத்துவோர்மீது வழக்கும் தொடரப்பட்டிருக்கிறது.

நேபாள பாபா புரளியால், பிணங்களை அடுக்கி அடுக்கிப் பார்க்கும் 'அரிய அனுபவம்' கிடைத்தது சர்க்காருக்கு! ஆகவே, இப்பொழுது விழித்துக்கொண்டனர். ரந்தாளியிலே பெற்ற பாடத்தால், கல்கத்தாவிலே கவனமாகக் காரியமாற்றத் தொடங்கிவிட்டனர்.

நேபாள பாபா—ஒரு தொடர் கதை! சங்கர் கட்டம்—அதிலே முளைத்த கிளைக் கதை.

மரப்பட்டையாலே, சர்வ ரோகங்களும் தீர்ந்துவிடும் என்று நம்பினர். ஏமாந்தனர். ஏமாந்தமட்டு


**நீங்கள் படிக்க வேண்டிய எழிலேடு**

பாவம் புண்ணியம் என்கிறீர்கள், அதைப் பற்றிய தேள் விக்குறியாக அமைந்துள்ள அரிய சிந்தனைக் காவியம் இந் நூல்.

# மனப்போர்

விலை ரூபாய் ஒன்று.

இதில் நச்சு நினைப்பினரின் நாசகால கருத்துக்களை, பயங்கர ஏற்பாடுகளை படம் பிடித்துக் காட்டுகிறார் தில்லை—வில்லாளன்.

விற்பனைக் கழிவு 20% அனுப்புச் செலவு இலவசம். (Ad)

'பாரி நிலையம்' 59, ரோட்வே, சென்னை.

மல்ல. தங்கள் இருள் மதியால் எத்தனையோ உயிர்களை பலியிட்டனர்.

இப்பொழுது நீரிலே மூழ்கினால், தீராத நோயெல்லாம் தீர்ந்துவிடும் என்று கட்டிவிட்டுவிட்டனர். இதனையும் நம்பி யோடுகின்றனர் மக்கள். சர்க்கார் தடையுத்தரவு போடுகிறது.

சர்க்காரின் 144 தடையுத்தரவு, உண்மையில் இப்பொழுதுதான் தன் கடமையைச் செய்திருக்கிறது! இதுவரை காங்கிரசாட்சியில், இந்த 144 தடையுத்தரவு, தானே வெட்கித் தலைகுனியுமாறு நடந்துகொண்டுள்ளது! நல்லறிவுப் பிரசாரம் செய்தால் அங்கே தடை—நாட்டின் நிலையைப் பற்றிப் பேச—சமூகத்தின் துயர் துடைக்கும் திட்டங்களை ஆராய—மக்களின் கண்ணீரைத் துடைக்க கூட்டம் கூடினால்—இலட்சியக் கொடிகள் ஏற்றினால்—ஆட்சியாளரின் 'கண்களுக்கும்', 'காதுகளுக்கும்', வாடித் தவிக்கும் மக்களின் தேவைகளை — அவை பூர்த்தியாகததால் உள்ள அவல நிலையை எட்டச்செய்ய ஊர்வலம் வந்தால் தடையுத்தரவு போட்டு, தடையுத்தரவே, தகாத காரியம் செய்கிறோமே என்று எண்ணித் தவித்திடச் செய்தனர். இப்பொழுதுதான் அதன் ஆயுளிலேயே ஆற்றவேண்டிய அரும்பணியை செய்துள்ளது.

மாட்டுக்கார சிறுவன் பெயரைச் சொல்லி, மௌடீகம் ஆடிய நாடகம், 'டிராஜடி'யிலே முடிந்தது. அதையொட்டியே, வேறொரு புது நாடகம் போட மூட நம்பிக்கை தயங்கவில்லை.

ஆட்சியாளர் அக்கரையோடு, தடைபோட்டு, அதற்கானவன செய்துள்ளனர்.

மேற்கு வங்க சர்க்கார், தெய்வீக சக்தியால் சர்வ ரோகங்களும், நிவாரணமாகி விடுவதாக சுயநலமிகளால் பரப்பப்படும் வதந்திகளை நம்பி ஏமாறவேண்டாமென்று, பொது மக்களை எச்சரித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

சங்கர் கட்டத்திலே மக்கள் கூடிடக் கூடாது என்று 144 தடையுத்தரவு போட்டுள்ளனர்.

இந்த இடத்திற்கு பஸ் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டிருக்கிறது.

அனுமதியின்றி பஸ் சர்வீஸ் நடத்துவோர் மீது வழக்கும் தொடரப்படுகிறது.

ஆளவந்தார் செய்யும் இக்காரியங்கள், ஒரு மௌடீகத்தைப் போக்க உதவும். அத்துடன் நிறுத்தக்கூடாது மேலும் இம்மாதிரி தெய்வீகப் போர்வையிலே உலவும் தெகிடுதத்தக்காரர்களை, மக்கள் மனதிலே மண்டிக் கிடக்கும் மௌடீக எண்ணற்ற குப்பைகளால், தங்கள் வாழ்க்கை மாளிகைகளை அமைத்துக் கொண்டு அட்டகாசம் செய்யும் அயோக்கியர்களை சட்டம் இயற்றி, அத்தகையோர், உலவினால் உடனுக்குடன் பிடித்து தண்டனை யளிக்கவேண்டும்.

விளைவு விபரீதமான பிறகு, வெகு வேகமாக ஓடிப் பணியாற்றுவதில் அர்த்தமில்லை.

நேபாளபாபா நிகழ்ச்சியில், பல பிணங்களைக் காட்டித்தான் சர்க்காரின் கவனத்தைத் திருப்ப முடிந்தது.

சங்கர் கட்டத்திலே, வேகமாக பரவிய காலராவினால் தான் கண் திறந்தனர்.

அதுபோல வந்த பின், வைத்தியம்! செய்வதைவிட வருமுன் காப்பதே மேல்! மூட நம்பிக்கைகளை கைவிடும்படியான அறிவுப் பிரசாரம் அதிகம் நடக்கவேண்டும். அதற்கு ஆளவந்தார் பக்கதுணையாக இருக்கவேண்டும்.

மௌடீகம் ஒரு புறம் வளரவும், அதனால் மக்கள் மாளும் போதுமட்டும, ஆளவந்தார் ஆடுவதும், ஓடுவதும் சரியலல என்பது மட்டுமல்ல—ஆளும் திறமையுள்ளோர் செய்யும் காரியமல்ல என்று நாடு சொல்லும்!

மரப்பட்டை மருத்துவமும், குளத்துநீர் வைத்தியமும் நமக்குப் புதிதல்ல — நாம் கேட்காத புதுமையில்லை. நாம் காணாத விசித்திரமில்லை.

நாம் கண்டு கண்டு கண்ணீர் சிந்தியிருக்கிறோம். இத்தகைய கோரக் காட்சிகளை! மக்கள் 'மந்தை மனப்பான்மை' கொண்டு இப்படி மதிகெட்டுத் திரிகின்றார்களே என்று. ஆண்டு பலவாய் அதற்காக, எத்தனையோ எதிர்ப்புகளுக்கிடையே பகுத்தறிவுப் பிரசாரம் செய்து வருகிறோம்.

இப்பொழுதாவது, ஆளவந்தார் மூடக் கொள்கைகளைக் கண்டிக்கிற அளவு துணிவு கொண்டு விட்டார்கள் —அப்பொழுது அவர்கள் துணை நமக்கில்லை—அதற்கு மாறாக, ஆளவந்தாரை தூண்டிவிட்டு, நமக்கு 'திடீர் விபத்துகளை' தருவதிலே கைதேர்ந்த 'பெரும் புள்ளிகள்' பலர் எதிர்த்தனர்.

மதவாதிகள், தாக்கினர்—விட்டோம் இல்லை நம் தொண்டை! வைதீகர்கள் வைதனர், தொடர்ந்து நடந்தோம் நம் பாதையிலே! பழமை விரும்பிகள், திட்டித் தீர்த்தனர், நாவில் ஈரமிருக்கும்வரை, அகராதியில் வார்த்தைகள் உலவும் வரை, அப்பொழுதும் பகுத்தறிவுப் பிரசாரம் நடந்தபடித்தானிருந்தது! 'குருமார்' குலமே, நம்மை அழித்துவிட 'தசாவதாரம்' எடுத்த போதும் நாம் தளர்ந்துவிடவில்லை.

அதன்விளைவாக தமிழகத்தில் பகுத்தறிவு விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. ஆனால் அதன் பிரசாரத்தால் மண்டிக்கிடக்கிற இருள் ஓடிவிடவில்லை, முழுவதும்!

நம் ஆளவந்தார்களோ, நாம் பேசினால் பயப்படுகிறார்கள்—ஏடு எழுதினால் வழக்கு போடுகிறார்கள்—நாடகம் நடித்தால் தடை போடுகிறார்கள்! நம் பிரசாரம் நடைபெற துணைசெய்ய வேண்டியவர்கள் அவர்கள். ஏனெனில் 'நேபாள பாபாக்களை' 'சங்கர் கட்டங்களை' தமிழகத்தில் பலமுறை விளக்கியதால், ஓரளவு அறிவுத் தெளிவடைந்துள்ளார்கள் மக்கள். அதற்கு நமக்கு நன்றி செலுத்தவேண்டியவர்கள் வசைமாரி பொழிகிறார்கள்! செய்யட்டும், கவலையில்லை—நாம் நம் கடமையைச் செய்துகொண்டிருக்கிறோம் என்ற திருப்தியே நமக்குப் போதும்.

*   *   *

திருப்பதி நகரசபையின் சாதாரணக் கூட்டம் நடைபெற்றபொழுது அதில் ஒருவன் தான் மழை வரவழைத்துத் தருவதாக

வும், தமக்கு ஏற்படும் செலவை நகரசபை கொடுத்தால் மழையை வரவழைத்துத் தர சித்தமாயிருப்பதாகவும் கூறினும்.

இந்தியா முழுதுமே மழையில்லாமல் கஷ்டப்படுவதால் டில்லி சர்க்காரைக் கேட்டு மழையை வரவழைத்தால் நாடு முழுமைக்கும் நன்மை உண்டெனக்கூறப்பட்டுள்ளது.

இது பத்திரிகை செய்தி--இதனைப் படிக்கவும் நமக்கு நெஞ்சு நடுங்குகிறது. இத்தகைய மௌடீக மனிதர்களை விட்டு வைத்திருக்கிறோம் -- அவன் நகரசபையிலே கேட்கிறான் நகரசபையோ, டெல்லியைக் காட்டுகிறது! திருப்பதி நகரசபை, மழையை வரவழைப்பதாக ஒரு 'பித்தன்' சொல்லக் கேட்டு என்ன செய்திருக்க வேண்டும்? உடனே அவனைக் கைது செய்திருக்க வேண்டும். தந்திரம் பேசி, பணமோசடி செய்கிறான் என்று குற்றஞ் சாட்டியிருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை -- செய்யாதது மட்டுமல்ல! அதனை நம்பியிருக்கிறது. நம்பியதோடு நிறுத்தாமல், மேலும் ஒரு படி மேலேபோய், நல்ல இடங் காட்டியிருக்கிறது. வெட்கம்!

திருப்பதி மலை மீதிருக்கும், திருவேங்கடத்தானை வேண்டி மழை வரவழைக்க முடியாத திருப்பதி நகரசபை, எவனோ ஒரு உளறுவாயன்பேச்சைக்கேட்டு, இந்தியா முழுவதற்கும் நன்மை வேண்டி, டெல்லிக்குப் போ என்று கூறியனுப்பியிருக்கிறது, மழை வரவழைக்கும் மகானுபாவர் --- 'ரிஸ்யச்ருங்கர்' பரம்பரையிலே வந்தவர் என்று நம்பி!

படித்தவரும், பாமரரும், குருட்டு எண்ணங்களைக் கொண்டிருப்பதிலே ஒரு படிக்கட்டில்தான் நிற்கிறார்கள் என்று, ஒரிஸா கவர்னர் ஆசப்அலி கூறுகிறார். படித்தவர், பாமரர் மட்டுமல்ல, பாராளுவோரில சிலரும் அப்படித்தான்! என்று கூறிடச் சொல்கிறது திருப்பதி நகரசபை நடவடிக்கை!

நமது தாயகத்திலே இம்மாதிரி சம்பவங்கள் சர்வ சாதாரணமாகி விட்டன! ஆம், நெடுநாள் வழிவழி வரும் பரம்பரை தொத்து நோய் போலப் பரவி விட்டது.

இந்த குளத்தில் குளித்தால் புண்ணியம், இந்த மாத்தைச் சுற்றினால் நல்லது, அந்தக் கோயில் சாமிக்கு நெய்விளக்கு போட்டால் தோஷம் கழியும், இப்படிப் பேசாத நா இங்கில்லை.

பில்லி சூன்யம் எடுப்பேன், பித்தளையைத் தங்கமாக்குவேன் என்று கூறிடும் மந்திரவாதி.

வேப்பிலையை ஆட்டி விபூதி போடும் பூசாரி.

சாதகத்தைப் புரட்டி, நாள் பார்த்து, 'நல்லது, கெட்டது' சொல்லும் சோதிடக்காரன்.

கண்டதை உளறி, தானுதிகள் பெற்று, மணவீட்டை விட்டு நடக்கும் புரோகிதன்.

ஆற்றங்கரையில் அரைக் கட்டுப் புல்லொடு வந்து, எட்டாத மேலோகத்திற்கு பொருள் அனுப்புவதாகப் பாசாங்கு செய்யும் பூசுரன்.

ஆண்டவன்சிலையை,காலாலும்கையாலும் மிதித்து ஆடைபுடுத்தி, அலங்காரம் செய்துவிட்டு, அதற்கு சக்தி உண்டு என்று பேசிடும் கோயில் பூசை செய்வோன்.

தீபாராதனை தட்டைக் காட்டியபடி, எதிரில் நிற்பவர் மடியைக் கண்வைத்து கைநீட்டும் குருக்கள்.

இவர்களைக்காணாத 'கண்கள்' இல்லை, இந்நாட்டில்.

கண்ட கண்ட கற்சிலைகளைக் கண்டு உபர்த்தாத

பல்லியொலி கேட்டு, 'டொக்' 'டொக்' என்று ஒலி எழுப்பாத-பருந்தைக் கண்டு கன்னங்களில் தட்டிக்கொள்ளாத—புராண ஏடுகளை, பொய்மைக் கருத்துக்களை அள்ளி வீசும் இதிகாசங்களை தினமும் புரட்டாத-நெற்றியிலே திருநீற்றை, திருநாமத்தை தீட்டாத-'கரங்கள்' முதலில் இல்லவே இல்லை. இப்பொழுது, அவர்கள் தொகை குறையத் தொடங்குகின்றது.

பூனை குறுக்கிட்டால், சகுனத்தடங்கல் ஏற்பட்டால், இராகுகாலம் என்று தெரிந்துவிட்டால் போன வேலையை விடுத்து திரும்பாத 'கால்கள்' மிகக்குறைவுதான் எண்ணிக்கையில்!

ஏன் இங்கிலை நாட்டில் பகுத்தறிவுப் பிரசாரம் நம்நாட்டில் நடத்தப்பட்டும்! இங்கில்லை, இன்னும் அதிக தீவிரமாக நடத்தப்படவேண்டும் என்று நமக்குமட்டுமல்ல, பாடந்தருவது— நாட்டோருக்கும், நாடாளும் 'நல்லதம்பிகளுக்கும்!'

மூடஎண்ணங்கள், இன்னமும், நம்சிந்தனையை செல்லாக இருந்து அரித்தபடி உள்ளன— கரப்பானாக இருந்து கரைத்தபடி உள்ளன—தேளாக, பாம்பாக மாறி விஷத்தை வாலாலும், பல்லாலும் ஊற்றியபடி இருக்கின்றன இதனை உணர்ந்துதான் அறிவுபிரசாரம் அதிகம் நடைபெறவேண்டும் என்று நாம் கூறுகிறோம்—செய்கிறோம்.

X X X

மூடக்கொள்கைகளை அழிக்க நாம் மும்முரமாக வேலை செய்யவேண்டும் என்கிறோம்.

பாமரரை பகுத்தறிவு பெறச்செய்யவேண்டும் என்கிறோம். படித்தவர்கள், தங்கள் சிந்தனையைசெலவிட்டு தெளிவு பெற்றுத் திருந்தவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

இத்தனைக் காரியங்களையும் செய்ய ஒருசேர வாய்ப்பும், வசதியும், கொண்டவர்கள் பத்திரிகையாளர்கள்—அவர்கள்தான் மக்கள் மனமென்ற நிலத்திலே எழுத்துக் கலப்பைகளால்-உழுது, பகுத்தறிவு விதைகளைத்தூவி, வளர்த்து, நல்வாழ்வு எனும் நெல்மணிகளை அறுவடை செய்யவேண்டியவர்கள். ஆகவே, அவர்களை மீண்டும் வேண்டுகிறோம்.

பகுத்தறிவு ஒளி ஏற்றி, மூடக்கொள்கைகளெனும் இருள், இந்நாட்டைவிட்டே ஓட விரட்டுங்கள் என்று அவர்களை அழைக்கிறோம்.

ஆனால், இங்கு, அகில உலகத்திலும் மதிப்பு வாய்ந்தது, இலண்டனிலேகிளைநிலையம் உள்ளதுஎன்ன செய்கிறது? எதைச் செய்யவேண்டுமோ அதைச்செய்யவில்லை. எது வேண்டாமோ, அதற்கு அதிக விளம்பரம

தந்து, மினுக் மினுக் கென்றெரிந்துகொண்டிருக்கும் பகுத்தறிவு தீபத்தையும் அணைத்துவிடப் பார்க்கிறது!

நாட்டிலே பகுத்தறிவுப் பிரசாரம் நடைபெற இடமில்லை. ஆட்சியாளரோ, அதற்கு அடக்குமுறை போடுகிறார்கள். ஆனால் இதோ பாருங்கள்

| | |
|---|---|
| உத்தியோகபருவம் | இராம பட்டாபிஷேகம் |
| கைவல்யநவநீதம் | ரிக்வேதம் |
| கதோபநிஷத் | ஸ்ரீமத்பாகவதம் |
| பாகவதம் | வாணாஸ்ரமதர்மம் |
| ஸ்ரீராமாயணம் | கீதாவதாரணகாலம் |
| விவேக சூடாமணி | கைவல்யநவநீதம் |
| பக்திப்பாதை | திருஞானசம்பந்தர் புராணம் |
| பகவத்கீதை | ஸ்ரீருக்மணி கல்யாணம் |
| தாஹதாண்ய உபநிஷத் | தாயுமானசுவாமிகள் |
| கந்தசஷ்டி கவசம் | அங்குலியபிரதானம் |
| மகாபாரதம் | |
| திருப்புகழ் | |

இவைகள் எல்லாம், ஒருநாளில் சென்னையின் பலபகுதிகளிலே பேசப்படுகிற பொருள்கள்—பிரசங்கத்தலைப்புகள் — 'இந்து' பத்திரிகையின் இன்றைய நிகழ்ச்சிகள் என்ற பகுதியிலே வந்துள்ளவை!

பேச்சு மேடையை, இவை அலங்கரித்தால், மூட நம்பிக்கை எப்படி ஓடும்? மூடநம்பிக்கையைப் பொறுத்தவரையில், படித்தவர், பாமரர் என்ற பேதமில்லையென்று ஆசப் அலி கூறியதில் வியப்பில்லையல்லவா? படித்தவர்கள் இப்படி, பழங்கால ஏடுகளிலே மனதைப் பதித்து, அவை சொல்லும் கருத்துக்களை நம்பிடுவதால்தான் 'நேபாள பாபா' முளைக்க முடிகிறது—'சங்கர் கட்டம்' ஏற்பட வழி ஏற்படுகிறது—'மழை தரும் மகான்' எனப் பிதற்ற முடிகிறது!

இந்தப் பிரசங்கங்கள் நடைபெறும் சங்கங்களின் பெயர்களையும் பாருங்கள் — பிறகு சொல்லுங்கள், நாட்டில் இன்னமும் ஏன் இருட்டுக் கொள்கைகள் முரட்டுத்தனமாக மக்கள் மனதிலே படிந்து கிடக்கின்றன என்பதற்குரிய காரணங்களை!

சாது சங்கம், வேதாந்த சங்கம், ஆரிய சமாஜம், சுகானந்த மண்டலி, பக்தஜன சபா, வைதீக சபா, பாண்டுரங்க மந்திரம், ரமண பக்த சபா, அருணாசல வேதாந்த சங்கம், சன்மார்க்க சபா, விசிஷ்டாத்வைத பிரசார சபா, ஆஸ்திக சபா,...என்று இப்படி விதவிதப் பெயர்களில், மூடமதிக்கொள்கைகளை வியாபாரம் செய்யும் நாவணிகர்கள் 'மண்டிகள்' இருக்கின்றன!

இவைகளுக்கும் நாட்டிலே இடந் தந்துவிட்டு, மூட நம்பிக்கையால் மக்கள் அவதிப்படுகிற நேரத்தில் பட்டும் கண்டனம் எழுப்பிப்பயனில்லை! இத்தகைய வேண்டாத பிரசாரங்கள் நடைபெறக் கூடாது. அதற்கு 'இந்து'போன்ற ஏடுகள் ஆதரவளிக்கக் கூடாது என்கிறோம்.

ரிக்வேதம், பாகவதம், பகவத் கீதையைப் பற்றி பேசவேண்டிய நேரம் இதுவல்ல—கொரிய போர், உலக யுத்த நெருக்கடி இவைகளைப் பேசவேண்டும். தாயுமானவரைப் பற்றிய ஆராய்ச்சி வேண்டியதில்லை. தாமஸ் ஆல்வா எடிசன் பரம்பரையினரைப் பற்றி யறிந்து கொள்ளவேண்டும். இராமாயணம், மகா பாரத பிரசங்கங்களை இன்று நாம் விரும்பிக் கேட்டு, நாட்டிற்கோ, நமக்கோ நன்மை ஏதுமில்லை. நாட்டிலே உணவில்லை—நெசவாளிக்கு நூலில்லை — இவைகளுக்கான திட்டங்களைப் பேசவேண்டும்.

நமக்கு மின்சாரத்தை தந்தவனை, இரயிலைக் கொடுத்தவனை, கப்பலைக் கண்டுபிடித்தவனை, ஏரோப்ளேன் செய்தவனைப்பற்றிய விவரங்கள்தான் தேவை—விஞ்ஞானப் பாதைதான் வேண்டும் — பக்திப் பாதையல்ல!

பாமரரைத் திருத்துவது கூட எளிது—இந்தப் படித்தவரை, பகுத்தறிவுப் பாதைக்கு அழைத்துச் செல்வது கடினமாக இருக்கிறது!

ஆசப் அலி கூறினார்-படித்தவர்,பாமரர்-எல்லோரும் மூட நம்பிக்கை கொண்டுள்ளனர் என்று—ஆனால் கொஞ்சம் வித்தியாசம்! பாமரர் தெரியாமல் நம்பிக் கிடக்கின்றனர்—படித்தவர்களிலே இரு ரகம்—ஒன்று வெள்ளையுள்ளத்தால் இப்படி யிருக்கின்றவர் பிரிவு, மற்றொன்று வேண்டுமென்றே, தெரிந்தும், அவைகளை தாங்கள் நம்புவது மட்டுமல்ல, பிறரையும் நம்பும்படிச் செய்துகொண்டிருக்கிற பிரிவு! இரண்டாம் பிரிவைச் சேர்ந்தவர்களிலே பலர், பத்திரிகை யுலகிலே அழுந்தக் குந்திக் கிடக்கிறார்கள், ஆகவேதான், 'நேபாள பாபா' தோன்றினால் நீண்ட விளக்கங்கள் தருகிறார்கள். 'குட்டு' வெளிப்படுத்தப்பட்டாலும், செய்தியைமட்டும் போட்டுவிட்டு, வாய்மூடிக் கிடக்கிறார்கள் இந்த போக்கை அவர்களாக மாற்றிக் கொள்ளாவிட்டால், 'வலுவில்' மாற்றவேண்டிய பொறுப்பு மக்களுக்கு வந்துவிடும். இந்த அக்கிரம போக்கை தமிழகம் தாங்காது!—தாங்க முடியாது!

நாட்டின் நல்வாழ்விலே நம்பிக்கை கொண்டோர் அனைவரும், பகுத்தறிவொளி ஏந்தி இருட்டுக் கொள்கைகளை விரட்டிடும் அறப்பணியிலே ஈடுபட வேண்டும்.

—x—

## ஊருக்கு உபதேசம்!




உபதேசங்களுக்குக் குறைவில்லை; ஆனால் ஊரார் வோர் மாளிகையிலும், அவர்தம் உறவினர்களின் வீடுகளிலும் உல்லாச விருந்துகள் இல்லாத நாட்களில்லை!

# புதிய பாதை

## சி.என்.ஏ.

'ரஞ்சன் கோட்டையை' நானும் என் நண்பர்கள் சிலரும் இரண்டு திங்களுக்கு முன்பு கண்டு களித்தோம்—போர்முறை நுட்பம் உணர்ந்து கட்டப்பட்டுள்ள அந்தக் கோட்டையிலே பல பகுதிகளைப் பார்த்துக்கொண்டிருந்தபோது, கோட்டைக்குக் காவல் பார்க்கும் தோழர் ஒரு குறுகலான இடத்திற்கு உட்புறம் எங்களை அழைத்துச் சென்று, "இதுதான் சுரங்கப் பாதை, இந்த வழியாகச் சென்றால், வேலூர்க் கோட்டைக்குள்ளே செல்லலாம்—ஆனால் பாதை அடைபட்டுப் போய்விட்டது" என்று கூறினார்—நம்பிக்கையுடன்.

'ரஞ்சன் கோட்டை' திருச்சிக்கும் சென்னைக்கும் இடையே உள்ள பாதையிலிருந்து இடது பக்கம் இரண்டொரு மைல்களில் உள்ள சிற்றூர்க் கோட்டை—காவலாளி காட்டிய பாதை, வடாற்காடு மாவட்டத்து வேலூர்வரை செல்வதாம்! நாங்கள் மறுக்கவில்லை. அவன் என்ன நீங்கள் அந்தப் பாதை வழியாகச் செல்லுங்கள் என்றா கூறினான்! பாதைதான் அடைபட்டுப் போனதாகக் கூறிவிட்டானே! எனவே, அப்படி ஒரு பாதை—சுரங்க வழி இருந்ததா இல்லையா என்பது பற்றி சிந்தித்துச் சிரமப்படவில்லை — கோட்டையின் அமைப்பு முறையைக் கண்டு களித்துவிட்டுத் திரும்பினோம்.

'ரஞ்சன் கோட்டை'யில் மட்டுமல்ல, நமது நாட்டிலே கலனாகி உள்ள எந்தக் கோட்டைக்குச் சென்றாலும், இப்படி ஒரு சுரங்க வழியைக் காட்டுவார்கள் — ஆனால், எல்லாம் அடைபட்டுப் போனவை! எனவேதான் ஆபத்தான வேலையில் யாரும் ஈடுபடவில்லை!!

'ரஞ்சன் கோட்டை'யிலிருந்து வேலூர்க் கோட்டைக்குச் செல்ல சுரங்க வழி அமைத்த காரணம், போரிலே, சிக்கலும் நெருக்கடியும் ஏற்பட்டால் எதிரியிடம் பிடிபடாமல் தப்பிச் செல்ல ஒரு இரகசிய வழி வேண்டும் என்பதாகும். எதிர்க் கப்பலை ஏய்க்க நீர்மூழ்கி இல்லையா, அதுபோல, எதிரிப்படையிடமிருந்து தப்பித்துக்கொள்ள சுரங்கப் பாதைகளை முன்னாள் மன்னர்கள் கோட்டைகளிலே அமைத்துவைத்தனர். ஆனால், எல்லாக் கோட்டைகளிலும் இந்தப் பழைய பாதை மூடப்பட்டுக் கிடக்கிறது. ஏதோ வேறு வேலை நிரம்ப இருக்கும் காரணத்தால் என்று எண்ணுகிறேன் ராமராஜ்ய சர்க்கார், அடைபட்டுக் கிடக்கும் அற்புதமான சுரங்க வழிகளை மீண்டும் புதுப்பிக்கும் 'புண்ய' காரியத்திலே ஈடுபடாமலிருக்கிறார்கள்!

பழைய பாதைகள் பல அடைபட்டுப் போயுள்ளன—சுரங்க வழிகள்மட்டுமல்ல, பழைய 'இராஜபாட்டை'கள் பலவும் கூடத்தான்!

பழைய பாதைகளைப்பற்றிய 'கதைகளை' வேண்டுமானால், ரஞ்சன் கோட்டைக் காவல் தோழர் கூறியது போலப் பல இடங்களில் கூறுவார்கள்—ஆனால் யாரும், அந்தப் பழைய பாதைகளில் சென்று தீரவேண்டும் என்று எண்ணுவதில்லை. பழங்கதை பேசிவிட்டு, புதுப் பாதையிலேதான் செல்கிறார்கள்—அடைபட்டுப்போன பழைய பாதைகளைப் புதுப்பிப்பதைவிடப் புதுப்பாதை காணும் ஆர்வம் மேலோங்கி இருக்கிறது—இந்த ஆர்வம் பட்டுப் போனால் நாடு, நாடாக நெடுங்காலமாகாது.

புதிய பாதை அமைத்துக்கொண்டிருக்கிறார்கள்—இந்த ஊருக்கும் அந்த ஊருக்கும் இடையே என்ற முறையிலேமட்டுமல்ல, பல்வேறு துறைகளிலும், புதிய பாதைகளை அமைத்துக்கொண்டுள்ளனர்.

சிற்சில இடங்களிலும் சமயங்களிலும், பழைய பாதையிலே புகும் பேதமை தலைகாட்டுகிறது எனினும் அதனால் உண்டாகும் சீரழிவு, மக்களைத் தானே புதுப் பாதையை நாடச் செய்கிறது.

பாதை—பழைய பாதை—புதுப்பிக்கப்பட்ட பாதை—புதுப் பாதை! — இந்தச் சொற்றொடர்களுக்குள்ளே ஒளிந்துகொண்டிருக்கும் சம்பவங்கள், ஆயிரமாயிரம்! புதிய பாதை போடப்பட்டுவிட்டது—என்று எளிதாகக் கூறிவிடுகிறோம். ஆனால், அதை அமைக்க, அறிவும் துணிவும், ஆற்றலும் எவ்வளவு தேவைப்பட்டது—உழைப்பு எத்தனை செலவிடப்பட்டது—என்பனவற்றை எண்ணிப் பார்ப்பதில்லை, பலரும்!

மோட்டாரைச் சற்று மெதுவாகவும் ஓரமாகவும் செலுத்தும்படி பாதை போடுபவர்கள் கூறும்போது கூட, 'மோட்டாராருக்கு'க் கோபம் கிடைக்கிறதே தவிர, இந்தப் பாதையின் பயனைப் பெறத்தானே போகிறோம் நாம்-என்ற எண்ணம் ஏற்படுவதில்லை சுலபத்தில்.

உள்ள பாதை உருக்குலைந்து போனால் திருத்தி அமைக்கவே அரும்பாடுபடுகிறார்கள் பாட்டாளி மக்கள்—பார்க்கிறோம் பல்வேறு எண்ணங்கள் மனதிலே கூத்தாடக் கூத்தாட, அந்தக் காட்சியை! பாதையே இல்லாதிருந்த நிலையை மாற்றி, பாதை அமைக்க எவ்வளவு பாடுபட்டிருக்கவேண்டும்—அறிவாற்றல் எவ்வளவு செலவிட்டிருக்கவேண்டும் என்பதை எண்ணிடும்போதே, உள்ளம் உணர்ச்சி வயப்படும்.

பயனைப் பெற்றுக் களித்திடும் பலரும் பாதை அமைக்கப் பாடுபட்டவர்களைப்பற்றி ஒரு கணமும் எண்ணுவதில்லை—ஏதோ அவர்கள் கடன் பாதை அமைப்பது, நமது கடன் அதிலே பயன் காண்பது என்ற அநீதிநெறி பாடிக்கொண்டிருந்துவிடுகிறார்கள்.

பாதை அமைக்கும் பணி—தொடர் கதை—ஓய்வில்லாதது—முடிவு இல்லாதது.

பாதை வகுப்பது—வகுத்த பாதை பழையதாகி, பயன் குறைகிறது என்றால் அதனைப் புதுப்பித்துப் பயனை அதிகரிக்கச் செய்யலாமா என்று முயற்சிப்பது, அதுவும் போதவில்லை என்றால் புதிய பாதையையே அமைத்துக்கொள்வது—என்று இவ்வண்ணம் பணி பலவாகிக்கொண்டே இருப்பதால், பாதை அமைக்கும் பணி ஒரு முடிவில்லாத தொடர்கதையாகிறது—ஒவ்வொரு தலைமுறையிலும் புதிய புதிய அத்யாயம் சேர்த்துக்கொண்டே இருக்கிறார்கள் மனித குலத்திலே மாண்புடையோர். மற்றவர்களோ, அடைபட்டுப் போன சுரங்க வழிகளை—பழைய பாதைகளைப்பற்றிய பழங்கதை பேசிக்கொண்டு இருந்துவிடுகின்றனர்—இவர்கள் சூதறியாதவர்கள் — ஆனால் சூது மதியினர் சிலரோ, புதிய பாதையின் பயனைப் பெற்றுக்கொண்டே, அடைபட்டுப்போன, பயன் தராத, பழைய, சுரங்க வழிகளைப் பற்றிப் போற்றிக்கொண்டும் புதிய பாதையைப்பற்றி அலட்சியமாகவும், கேவலமாகவும் பேசிக்கொண்டும், புதிய பாதைகளை அமைப்போர்களை இழித்தும் பழித்தும் பேசிக்கொண்டும் உள்ளனர்.

இது ஒரு பிரமாதமா!—என்ற எண்ணம், இவர்களின் கண்களிலே ஒன்று,

அதுபோலாகுமா! என்ற அடிமூச்சுக் குரல் இவர்கள் கண்களிலே இன்னொன்று.

இத்தகையவர்களின் தொகை, குறைந்துகொண்டிருக்கிறது—எனவேதான் வளம் வளருகிறது! இந்தச் சிறு தொகையினரின் குறுமதி பேரார்வத்துடன் பாடுபட்டுப் புதிய பாதைகளைப் பல்வேறு துறைகளிலும் அமைத்துக்கொண்டிருக்கும் ஊழியர்களின் உள்ளத்தை உடைத்துவிடவில்லை, எனினும், வாட்டி வதைக்கத்தான் செய்கிறது.

புதிய பாதை அமைப்பது என்றாலே, செலவும் சிரமமும் அதிகம் ஆகையால், கூடுமானவரையில் பழைய பாதையையே பயன்படுத்திக் கொள்ளும் எண்ணம் பொதுவாக மக்களுக்கு ஏற்பட்டு விடுகிறது.

உள்ளதைக் கொண்டு திருப்திகொள்ளவேண்டும்.

நம்மாலே ஆகுமா இவ்வளவு பெரிய காரியமாற்ற?

என்ற எண்ணம், எளிதாக ஏற்பட்டுவிடுகிறது—எனவே புதிய பாதைகள் அமைக்கும் ஆர்வம், திறம், இரண்டும் மங்கிவிடுகிறது. நமது நாட்டிலே பொதுமக்களில் மிகப் பெரும்பாலானவர்களுக்கு, இந்த 'மங்கிய தன்மை' பலகாலமாக இருந்துவருகிறது. அறிவாற்றல் படைத்தவர்களோ, நெடுங்காலம் வரையில் மார்க்கத் துறையிலே பாதைகள் அமைத்திடுவது மட்டுமே மகத்தான காரியம் என்று எண்ணி அங்ஙனமே பணியாற்றி வந்தனர். இகத்துக்கும் பரத்துக்கும் பாதை அமைப்பதிலேயே பெருமுயற்சி செய்தனர். இதிலே பலப் பல பாதைகள் வகுத்தவண்ணம் இருந்தனர்! அமைத்த பாதை பயன் தந்ததா என்று ஆராயவும் நேரமின்றிப் பாதைகளை வகுத்துக்கொண்டிருந்தனர்.

பாதை அமைக்க, இரு இடங்களின் இயல்பும் இடையே உள்ள இடத்தின் இயல்பும் தெரிந்திருக்க வேண்டும் என்று கூறினேனல்லவா; இந்த மார்க்கப் பாதை அமைப்புக்கு, இது தேவையில்லை என்றுகூட எண்ணினர். எனவேதான், தெரிந்த இகத்துக்கும் இன்னபடி இருக்கும் என்று திட்டவட்டமாகத்தெரிந்து கொள்ள முடியாத பரத்துக்கும் இடையே, பாதை அமைக்கும் காரியம், தக்க பலனை, எதிர்பார்த்த பலனைத் தரவில்லை.

வேடிக்கை இது மட்டுமல்ல—இருக்கும் இகத்தை இல்லை என்று கூறிக்கொண்டு, இன்னது என்று திட்டவட்டமாகத் தெரிந்துகொள்ள முடியாத பரத்துக்கு விளக்கம் பல கூறி, இகத்திலிருந்து பரத்துக்குச் செல்லும் பாதையை அமைத்தபடி இருந்தனர். பல் வேறு மார்க்கங்கள் — வேதாந்தம் — சித்தாந்தம்—புராண இதிகாசம்—இவ்வளவும், இத்தகைய பாதைகள் என்றுதான் அறிமுகப்படுத்தப்பட்டன.

போகுமிடத்தின் இயல்பு தெரியாது — உள்ள இடமோ, மன மயக்கம்—இதற்கு இடையே ஒரு பாதையல்ல, பலப் பல! பயணம், விசித்திரமானதாக மட்டுமல்ல, விபரீதம் நிரம்பியதாகவும் தானே இருக்கும்.

எனவேதான் இந்தப் பயணத்தைப் பற்றிய விளக்கம் கூறுவதிலே சிக்கலும் குழப்பமும் ஏற்பட்டு, புத்தியுள்ளவர்கள், கேள்வி கிளப்பாமலிருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன்,

கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்

—என்று கூறி முடித்துவிட்டார்கள்.

கண்டதில்லை — எனினும் அந்த இடத்துக்குச் சேர்வதற்கான பாதைகளை அமைக்க, எவ்வளவு அறிவாற்றல் செலவிடப்பட்டிருக்கிறது!

கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்—என்ற அளவுடனாவது, நின்றுவிட்டார்களா! இல்லை!

நான் திருக்குற்றாலம் சென்றது கிடையாது—ஆமாம், பல நண்பர்கள் ஆச்சரியப்படுவார்கள் இது கேட்டு. குற்றாலம் போகாத என்னை, குற்றாலம் கூடவா போயிருக்கமாட்டான் என்ற எண்ணத்திலே, பலர் கேட்பதுண்டு, குற்றாலத்திலே எத்தனை நாட்கள் தங்கியிருக்கப் போகிறீர்கள்? குற்றாலத்திலே இவரைப் பார்த்தீர்களா—அவருடன் பேசிக்கொண்டிருந்தீர்களா—என்று அடுக்கடுக்காக. என்ன செய்வது! ஒருவர் இருவரிடம், ஒரு முறை இரு முறை, குற்றாலம் போனதில்லை என்று கூறிப் பார்த்தேன்—உண்மையை உதறித் தள்ளத் தொடங்கினர்கள்—புருவத்தை மேலுக்குத் தூக்கியும் புன்னகை செய்தும், "விளையாடாதீர்—குற்றாலம் போகவில்லை என்றால்—யார் நம்புவார்கள்" என்று பேசலாயினர். வேறு வழி! குற்றாலக் காட்சிகளை நானும் பேசத் தொடங்கினேன்! நண்பர் அருவியின் வேகத்தையும் அதிலே சென்று நீராடுவதால் வரும் பயனையும் கூறுவார் — நான் 'ஆமாம்' போட்டுவிட்டு, வேறு சில காட்சிகளைப் பற்றிக் கூறுவதுண்டு. இதன் விளைவு என்ன தெரியுமா! நான் குற்றாலம் ஆண்டு தோறும் போய் வருபவன் என்று பலர் நம்புவதுதான்!

குற்றாலக் காட்சியை நான் கூறத் தொடங்கியது போலத்தான் என்று எண்ணுகிறேன், பரலோகத்தைப் பற்றி முன்னாளில் சிலர் விளக்கம் ஆரம்பித்ததும்.

"நமக்குத் தெரியாது—இவர் அறிவாளி, இவருக்குத் தெரிந்திருக்கும்" என்ற எண்ணத்திலே, பாமரர், அறிவாளர் சிலரைக் கேட்டிருக்கக்கூடும். அவர்களும், என்னைப்போலவே, முதலில், "நான் சென்றதுமில்லை—சென்றவர் அதுபற்றிக் கூறிடக் கேட்டதுமில்லை—நானறியேன்" என்று கூறி இருப்பர். பாமரர் விடுவார்

களா! "உங்களுக்கா தெரியாமலிருக்கும் — நிச்சயம் தெரிந்திருக்கும்" என்று அன்புத் தாக்குதல் நடை பெற்றிருக்கும். பிறகு இகலோக விளக்கம்-கற்பனை யாக—அறிவாளர்கள் தந்து தீரவேண்டிய தொல்லை ஏற்பட்டிருக்கும் என்று எண்ணுகிறேன்.

குற்றாலம்—உள்ள இடம்—பலர் சென்று வந்த இடம்—எனவே எனக்குத் 'தகவல்கள்' கிடைக்க முடிந்தது—நான் குற்றாலக் காட்சிகளைக் கூறும்போது, உண்மையாக அங்கு என்னென்ன உள்ளனவோ அவை களைக் கூற முடிந்தது! மனதுக்குத் தோன்றியதை எல்லாம் கூறினால் சிக்கிக்கொள்ள வேண்டிவருமே! "குற்றாலத்திலே குழந்தை அழுதால், காட்டிலே உள்ள பெண் கரடி வந்து பாலூட்டும்"—என்று கூறமுடியுமா—அல்லது "குற்றாலத்துக் குயில்கள் மயில்கள்போல ஆடும், மயில்களோ குயிலெனப் பாடும்" என்று கூற முடியுமா! ஆசாமி அளக்கிறானப்பா, என்று ஒருவர் இல்லாவிட்டால மற்றொருவர் கூறிவிடுவாரல்லவா. அந்த அச்சம், எனக்கு. எனவே குற்றாலக் காட்சிகளைக் கூறும்போது, 'இல்லாததை'க் கூறவில்லை.

பரலோகம், குற்றாலம்போல அல்லவே! எனவே தான், என்ன வேண்டுமானாலும் கூற முடிந்தது. முடிவு இன்றுவரை ஏற்படவில்லை, இகலோக வர்ணனைக்கு! மனம்போன போக்கு கற்பனைக் காட்சிகள், அவரவர் திறத்துக்குத் தக்கபடி! மறுப்பவர் கிடையாது —ஏனெனில் கண்டவர் கிடையாது!

இம்முறையிலே கற்பனைத் திறம் வளர வளர, பரலோகத்தின் அமைப்பு, இயல்பு, காட்சிகள், வளரலாயின! வளர்ந்தவண்ணம் இருக்கிறது!

இல்லாதது மட்டுமல்ல—கற்பனையாகக் கூறப்பட்டது—பரம்!

கற்பனையும் ஒரு அளவோடு நிற்கவேண்டிய அவசிய மில்லாததால், கற்பனை வளர்ந்தவண்ணம் இருக்கிறது.

கையை மூடிக்கொண்டு, உள்ளங்கையில் அழகான முத்து இருக்கிறது, விலை ஆயிரம் வராகன்!—என்று கூறி—மற்றொருவரிடம் அதே கரத்தை மூடியபடி நீட்டி, உள்ளே பார்த்தால் பரவசப்படுத்தும் பச்சை இருக்கிறது, விலை இரண்டாயிரம் வராகன்!-என்று கூறினால், அந்த விசித்திர வியாபாரத்தில்யாரும் ஈடுபட மாட்டார்கள்! ஆனால் பரலோக விளக்கமோ, செழிப்பான, இலாபம் தரும் "வியாபாரமாகி" விட்டது-எனினும்-எனவேதான், விளக்கம் வளருகிறது-மக்கள் திணறும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது.

இந்த, வளரும் கற்பனை உலகுக்குப் பாதை அமைப்பது என்றால், ஒன்று இரண்டு போதுமா— ஓய்வும் திறமும் உள்ளவர்கள் அனைவரும், புதிது புதிதாகப் பாதைகள் அமைக்கலாயினர்.

வேதமார்க்கம்—ஞான மார்க்கம்-கர்ம மார்க்கம்- தவமார்க்கம்-ஒழுக்க மார்க்கம்-பூஜா மார்க்கம்—இப்படிப் பாதைகள், பலப் பல அமைக்கப்பட்டன!

பாதைகள் பலவாகி, மக்கள், எது தக்கது என்று திகைத்தபோது, ஒரு பாதையினர் மற்றப் பாதையை, இருள் நிறைந்தது இடர் மிகுந்தது, என்று குறைகூற வேண்டி நேரிட்டது. பேச்சளவிலே நின்றுவிடவில்லை- இந்தப் பாதை சிறந்ததா அந்தப் பாதை சிறந்ததா— என்ற பிரச்னை பெரும்போருக்குக் காரணமாகிவிட்டது.

இந்த ஆண்டு கேள்விப் படுகிறோம், திருப்பாவை மாநாடு, அதிலே தேவார, திருவாசகத்தின் அருமை பெருமைகளைப் பற்றிய உரையும் குழைத்துத் தரப் பட்டது என்ற செய்தியை! ஆனால்...!

இருமுறைகளில் எது தக்கது என்பதைத் தீர் மானிக்க, பக்தர்கள் கொட்டிய இரத்தம் கொஞ்சமா! இப்போது இரண்டையும் குழைத்துத் தருகிறார்கள்— தனித்தனியே தந்து பலன் காணாததால் போலும்! ஏதோ இந்த அளவுக்குக் 'கூட்டுறவு' உணர்ச்சி ஏற் பட்டதே, அது மகிழ்ச்சிக்குரியதுதான். ஆனால், இந்த இரு பாதையினரும் தமது பாதைதான் பரலோகத் துக்குக் கொண்டு சேர்க்கும் என்று கூறினர் சீறினர்—கடும் போரிட்டனர்!

அரசன் முதற்கொண்டு யானை வரையிலே, இந்தப் போரிலே சிக்கிச் சீரழிந்ததுண்டு!

பாதை, பலப்பலவாக இருக்க நேரிட்டதால், பகை உடன் பிறந்தது. பயணத்திலே வெற்றி கிட்டுமா கிட்டாதா என்ற கவலை போய், இவ்வளவு பாதைகளிலே எந்தப் பாதை ஏற்ற பாதை, என்ற மனக் குழப்பம் மிகுந்துவிட்டது, மனித குலத்துக்கு. பாதைகளின் வர்ணனை மக்களைத் திணறச் செய்தது.

இல்லறம் தக்க பாதையா துறவறம் தக்க பாதையா, என்ற முதல் பிரச்னையிலிருந்து, தேவன் இருக்குமிடம் சென்று தொழுவதா தேவன் பவனி வருகிறபோது தொழுவதா என்கிற வரையிலே பிரச்சினைகள் வளர்ந்துகொண்டு போகின்றன.

"பக்தி செய்து கொண்டிருந்தால் முக்தி பெறலாமே!"—என்ற பஜனையிலிருந்து "நடமாடும் கோயிலுக்குப் பூஜை செய், படமாடும் கோயிலுக்கு அல்ல" என்ற புத்தறிவு வரையிலே, பிரச்சினைகளின் தாம் இருக்கிறது.

ஸ்தல யாத்திரை தீர்த்த யாத்திரை—என்ற முறையிலிருந்து, 'காலண்டர்' சுத்தையை வெட்டி எடுத்துவிட்டு, அட்டையின் மற்றப் பகுதியிலே உள்ள லட்சுமீ படத்துக்கு அழகான கண்ணாடிச் சிறையிட்டு வீட்டிலே மாட்டிப் பூஜை செய்யும் முறைவரையிலே, வளர்ச்சி ஏற்பட்ட வண்ணம் இருக்கிறது.

நரபலி கொடுத்து நாதன் அருளைப் பெறச் செய்த முயற்சியில் தொடங்கி காட்டிய மூலம் நல்லுணர்ச்சி பெற்று நாதனின் அருளை நாடும் 'ரசமான' முயற்சி வரையிலே வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது!

இவ்வளவும் எதனால்! இகத்துக்கும் பரத்துக்கும் அமைக்கப்பட்ட பாதையின் இணைப்பினால்தான்.

மனிதனின் ஆவி ஒரு பெரிய ஆற்றைக் கடக்க வேண்டும் — அங்கு ஒரு ஓடக்காரன் தயாராக இருப்பான், ஏற்றிச்செல்ல. அக்கரை சென்றால் அற்புதமான பரலோகம் இருக்கும்!

இது பாதை விளக்கத்திலே ஒரு வகை.

ஆவி, பரலோகம் போகும் போது, வழியிலே நெருப்பாறு இருக்கும்—அதைக் கடக்கவேண்டும்— ஒரு ரோமப் பாலம் இருக்கிறது. அதிலேறிச் செல்ல வேண்டும் ஆவி! அந்தப் பாலத்திலே ஆபத்து இல்லாதிருக்க இங்கே, இகலோகத்திலே 'கோதானம்' செய்துவிடவேண்டும், பூஜாரிக்கு!

இப்படி ஒரு விளக்கம், பாதைக்கு!

தருமர் நடந்தே சென்றார், பரலோகம். சாவித்திரி, யமன் மிரட்ட மிரட்டப் பயப்படாமல் நடந்து சென்றாள், பரலோகத்து முன் வாயல் வரையில்!

இப்படி உள்ள கதைகள் மூலம், பாதைக்கு வேறு விளக்கம் கிடைக்கிறது.

இகலோகத்தில் இருந்தபடியே, துதிக்கையால் தூக்கிப் பரலோகத்திலே சேர்த்தார் விநாயகர் ஔவையாரை—இப்படி ஒரு கதை!

இது ஒரு வகை விளக்கமளிக்க முயற்சிக்கிறது, பாதைக்கு!

மனம் குழம்பாமலிருக்குமா, பாதை தேடி அலைவோருக்கு!

ஆயினும், பரம் மேலே இருப்பது என்று பாமரரில் பெரும்பாலோர், விண்ணையே பார்த்தனர்—பார்த்துக் கொண்டுள்ளனர் — விஞ்ஞானியோ, விண்ணில் உள்ளது மேகம்—அது ஒரு வெளி—என்று கூறிவிட்டார்! அவனை அஞ்ஞானி என்று தூற்றித் தூற்றிச் சலித்துப் போனதால் "மெஞ்ஞானிகள்" அந்த விஞ்ஞான விளக்கத்தை இப்போது கேட்டு, "அதுவுஞ்சரி" என்று கூறிவிடுகின்றனர்.

கீழே இகலோகம்—மேலே பரலோகம் — இந்தக் கற்பனையை மேலும் சித்திரப்படுத்த மற்றோர் கதை கட்டினர், விசுவாமித்ரர், திரிசங்குக்கு, இகம்-பரம் இரண்டுக்கும் இடையே ஒரு தனியான, புதிய, பரம் அமைத்துத் தந்தார் என்று.

இவ்வண்ணம் இல்லாத இடத்துக்குப் பாதைகளைப் புதிது புதிதாக அமைத்த வண்ணம் இருந்துவிட்டதால், புனிதப் பயணத்திலே பெரும் வெற்றி ஏற்பட்டுவிட்டது என்று பூரிப்படைய முடியாது போனதுடன், இங்கே, ஊருக்கு ஊர் சரியான பாதை இல்லாமற் போய்விட்டது, உழைப்புக்கும் வாழ்வுக்கும் பாதை இல்லை-சொல்லுக்கும் செயலுக்கும் பாதை செப்பனிடப்படவில்லை—இதனால் இடரும் இருளும நிரம்பியதாக இருக்கிறது மக்கள் வாழ்வு.

பெருமழை, மலை அருவி, காட்டாறு, இவ்வளவும் சேர்ந்து பெருவெள்ளமாகி வருகிறபோது, கடலிலே கலக்க வழி ஏற்பட்டால் தானே, வெள்ளம் நாட்டை அழிக்காமலிருக்கும்— அதற்கான பாதைதானே, ஆறு! அந்தப் பாதை செப்பனிடப்பட்ட முறைதானே கரை, அணை, முதலியன. எங்கும் பரந்த வெளி—வரம்பு இல்லை. என்றால், வயல் எனும் நிலையும், இன்ன இடம் வரையில் இன்னவர் உழைப்பது என்ற முறையும் எப்படி ஏற்பட முடியும். பாதை சரியாக அமைக்கப் படாத இடம், நாடு அல்ல-காடு. காட்டிலும் ஒற்றையடிப் பாதை இருக்கும், புலி போக, யானை செல்ல, நரி ஓட, பாம்பு புரள—இப்படிப் பலதிறப்பட்ட பாதைகள், மிருகங்களின் உருவம், குணம், வாழ்க்கை முறை இவைகளுக்கு ஏற்ற வண்ணம், காடுகளிலேயும் அமைகின்றன. சிற்றெறும்பு அமைத்துக் கொள்ளும் பாதை போலக் கூட மனிதன் இன்னமும் தன் வாழ்க்கைப் பாதையை அமைத்துக்கொள்ளவில்லை. இகத்துக்கும் பரத்துக்கும், இடையே போடப்படும் பாதைகள் கிடக்கட்டும்—வாழ்வுக்கான பாதை, வறியோர் செல்ல முடியாதபடியாகவு மிராமல், செல்வர்கள், எமது தகுதிக்கு ஏற்றதல்ல என்று கூற முடியாமலும் இருக்கும் விதமான பக்குவமான பாதையைக்கூட அமைக்க முன்வரக் கூடாதா என்றுதான் கேட்கிறார்கள் புத்துலகத்தினர்-ஆமாம் என்று அனேகர் கூறுகின்றனர்-பணி புரிபவரின் தொகையோ, மிக மிகக் குறைவாக இருக்கிறது. எனவேதான் புதிய வாழ்க்கைப் பாதை அமைக்கப்படவில்லை-தக்க விதத்தில்.

தனிமனிதனின் வாழ்க்கைப் பாதை, படாதபாடு பட்டு, இரையைக் கண்டுபிடித்து, அதைப் பறித்துக் கொள்ள வரும் ஜந்துவிடம் போரிட்டு இரத்தம் கொட்டி, இறவாமல் இருந்தால் நின்று, வாழும், மிருக நிலையிலா இன்னமும் இருக்க வேண்டும். வேறு பாதை அமைக்கவே முடியாதா!

முட்டுச் சந்துகள், சருக்கல் வழிகள், சதுப்பு நிலம், வளைவுகள், வரண்ட இடங்கள், மேடு பள்ளம், முள்ளும் கல்லும் நிரம்பிய சிறு சந்துகள்—இப்படி இருக்கிறது பலருடைய வாழ்க்கைப் பாதை. அனுமதித்துக் கொண்டு இருக்கிறது அரசுகள்!

முட்டுச் சந்திலே நுழைந்து, அதையே தன் வாழ்க்கைப் பாதையாகக் கொண்டவன், பயணத்திலே, சிறைக்குள் நுழைய நேரிடுகிறது சருக்குப் பாதையிலே செல்பவன் கீழே வீழ்கிறான்—பலர் பணத்திலே ஏற்படும் களைப்பால், பாதை ஓரத்திலேயே சாகிறார்கள். கபடன், வஞ்சகன், பொய்யன், சூதாடி, திருடன், விபசாரி, கொலைகாரன் — இவர்களெல்லாம், யார் என்று கருதுகிறீர்கள்? வாழ்க்கைப் பாதையிலே வழுக்கி வீழ்ந்தவர்கள்! பாதை ஒழுங்கானதாகச் செப்பனிடப் பட்டிருந்தால், புதிய பாதையை அமைத்துத் தந்திருந்தால், அந்தப் 'பட்டியல்' ஏற்பட்டிருக்குமா! அவர்கள் வழி தவறியவர்கள்—வழி அவர்களின் வாழ்க்கைக்குத் தக்கதாக அமைத்துத் தரப்படவில்லை—அந்தப் பாதை அமைப்பு, யாருடைய பொறுப்பு என்பதே இன்னமும் சரியாகத் தீர்மானிக்கப்படவில்லை!!

வேதகால ரிஷிகள் முதற்கொண்டு கதர்க்கால ஓமந்தூரார் வரையிலே, அவனவன் தனது வாழ்க்கைப் பாதையைத் தானே அமைத்துக் கொள்ள வேண்டும், என்று கூறி, பொறுப்பை தட்டிக் கழித்துவிடுகிறார்கள்.

பொய் பேசாதே—சூதுமதி கொள்ளாதே—ஒழுக்கத்தை ஓம்பு—அன்புடன் நடந்து கொள்—அறநெறியில் ஈடுபடு—என்று கூறுகிறார்கள். இவை கூடாது என்று கூறவில்லை—ஆனால் நான் கேட்பது, ஆஸ்ரமங்களிலிருந்து துவங்கி ஆளவந்தார்களின் மன்றம் வரையிலே வளர்ந்து, வழங்கப்படும் இந்த 'புத்திமதி' ஏன் கோரிய பலனைத் தரவில்லை, என்பதுதான்! கூறுபவர்களின் குரலிலே சக்தி குறைவா—கேட்பவர்களின் செவியின் திறம்தான் மட்டமா? இவ்வளவு உபதேசங்களுக்குப் பிறகும், வழிதவறியவர்கள், முறையற்று நடந்து கொள்பவர்கள், குறை மிகுந்தவர்கள் ஆகிய மக்களின் தொகை; குறையாமல் இருக்க என்ன காரணம்? வளர்ந்து வருகிறதே அந்தத் தொகை! எவ்வளவு வேதனை இது! இந்த நிலைமையைக் கண்ட பிறகாவது, சிந்திக்க வேண்டாமா? அவனவனை ஒழுக்கப்பாதை அமைத்துக் கொண்டு அதிலே நடந்து செல்லும்படி உபதேசம் செய்து விட்டால், பலன் ஏற்படவில்லை, எனவே வேறு முறையைக் கண்டறிய வேண்டும் என்று முன்வர வேண்டாமா!

அரசு சிறந்ததாக இருக்க வேண்டுமானால், மக்கள் ஒழுக்க சீலர்களாக இருக்க வேண்டும்—மாலை மண

முள்ளதாக இருக்க வேண்டுமானல் மலர்கள் தரமாக இருக்க வேண்டுமல்லவா!—என்று பேசுகிறார்கள், ஆள வந்தார்கள்.

மலர்கள் தரமாக இருந்தால்தான், மனோகரமான மாலை தயாரிக்க முடியும் — அதோடுகூட கொஞ்சம், கைத்திறனும் கருத்துத் திறனும் தேவை.

ஆனல் தோட்டம் பாழ்பட்டு கிணறு வரண்டு போய் இருக்கிறதே, மணமுள்ள மலர்கள் எப்படிக் கிடைக்கும்! சமுதாயம் கலகலத்துப்போய், வாழ்க்கைப் பாதை படுகுழிமயமாக இருக்கிறதே—இதிலே நடந்து செல்பவன், வழுக்கி விழாமலிருக்க முடியுமா—முடிகிறதா! அவனிடம் ஒழுக்க போதனை புரிவது, காய்ந்து போன தோட்டத்திலே உலாவும் தேய்ந்துபோன உருவத்தைப் பார்த்து, நறு மணமுள்ள மலர் கொண்டுவா, நான் அழகழகான மாலைகள் கட்டித்தருவேன், என்று கூறுவது போலத்தான்! பேசுபவர் பெரியவர் ஆகிறார்—கேட்கிறவருக்குக் காதுக்குக் கொஞ்சம் இனிப்பு —வாழ்க்கைக் கசப்பே மாறவில்லை—மாறாது!!

மாலைக்கு மலர் தேவை—மலருக்குத் தோட்ட வளம் தேவை!

அரசுக்கு அழகுதர மக்களின் ஒழுக்கம் தேவை—மக்கள் ஒழுக்கமுள்ளவர்களாக வாழ அவர்களின் வாழ்க்கைப் பாதையைத் தக்க விதமாக அமைத்துத் தரத்தான் வேண்டும்.

நமது நாட்டிலே கடந்த மூன்றாண்டுகளாக, சயயற் கட்டு, கள்ளர் குகையாகத்தானே இருந்து வருகிறது!—எதைக்கொண்டு எதை மறைப்பது, எதைச் சொல்லி எதை பெறுவது—இவ்வளவு சூதும், சர்வசாதாரணமாகிவிட்டதே, திடீரென்று மக்கள், முன்பு எப்போதும் பேசாத அளவு பொய் பேசவும், செய்யாத அளவு சூது புரியவும் ஏன் துணிந்து விட்டார்கள்! அரசு தன் கடமையில் தவறிவிட்டது. வாழ்க்கைப் பாதையைச் செப்பனிடும் பெரும் பொறுப்பு தன்னிடம் தரப்பட்டிருக்கிறது என்ற உண்மையை உணர மறந்தது—அதனுல் ஊர் இன்று ஒழுக்கக் காடாகிவிட்டது. உபதேசம் பயன் தர மறுக்கிறது.

X X X

',இப்படி ஏனப்பா திருடிஞய்?,'

"வாழ வழி இல்லிங்க"

"பிச்சை எடுப்பது ஒரு பிழைப்பா, செச்சே"

"வேறு மார்க்கமே இல்லிங்களே!"

"தடிப்பயலே! இதைவிட வேறு எங்காவது போய்த் திருடுவதுதானே—காலை முறிக்கொண்டு காலடி தூக்கியபடி இருக்கிறாயே. உயிரை வாங்கியே, சனியனே"

"நீங்கதாங்க ஒரு நல்ல வழி காட்டவேணும்."

* * *

எங்கும் கேட்கலாம் இந்தப் பேச்சுகளை.

வழி இல்லை—பாதை இல்லை

நல்லவழியில் நட—நாதன் அருள் பெற—என்று உபதேசி கூறுகிறார்.

வழியே தெரியவில்லையே—வாட்டத்துடன் கூறுகிறார் வழுக்குபயன்! வாழ்க்கைப் பாதை நல்லவிதமாக அமைக்கவில்லை — இதை உள்ள உரத்துடன் ஒப்புக் கொண்டால்தான், ஏற்பணியாற்ற முடியும் நாடாள்வோரால்.

நமது காலத்திலே இந்தப்புதிய பாதையைஅமைப்போர், அஞ்சிக்காமல் அனைவரும் வாழ ஓர்புதியபாதை —அடிமை கொள்ளாமல் அடிமைப்படாமல் அனைவரும் சமமாக வாழ ஓர் பாதை-வாழ்வுக்கான பாதை அமைக்கும் அரும்பணியை மேற்கொள்ளவேண்டும். அந்தப் பாதை அமைப்பது அலெக்சாண்டர் ஜீலம் நதிக்கரை வரை அமைத்த வெற்றிப்பாதையைவிட, ஜூலியஸ்சீசர் பிரிட்டன் முதல் எகிப்து வரையிலே அமைத்த வீரப் பாதையைவிட, செங்குட்டுவன் சேரநாட்டிலிருந்து கங்கைக்கரைவரையிலே அமைத்த ஆற்றல் பாதையைவிட, பயன் அதிகம் தருவதாகும்.

புதிய பாதை அமைப்பது சுலபம் என்று எண்ணுவது கூடாது. அமைத்துக்கொண்டிருக்கும்போதே, கொடிவழி தோன்றக்கூடும், அதுவே தேடிடும் பாதை என்று எண்ணினால். வழி தவறிவிடும், நாம், தத்துவார்த்தக் காட்டுக்குள்ளே சிக்கிக்கொள்வோம்.

இதுவரையில், பலகாரியங்களுக்கு, பிறர் காட்டிய வழியிலேயே நடந்து நடந்து பழக்கப்பட்டுவிட்டோம்—பல காரணங்களால். பெரும்பாலும் செக்கு மாடுகள் போலச் சுற்றிச் சுற்றிவந்துகொண்டிருந்துவிட்டோம். தேய்ந்தவழியிலே நடப்பதுதான் எளிது என்று எண்ணிக்கொண்டிருந்துவிட்டோம். யாரோ சிலர், தாத்த தைரியம் துவண்டுபோனதால், திறமையை இழந்ததால் தன்னம்பிக்கையற்றதால் தேய்ந்த பாதையிலேயே சென்றுகொண்டிருந்துவிட்டோம். ஒரு பாதை இடர்மிகுந்தது, நீண்டபயணமும் செய்யவேண்டி இருக்கிறது என்பதற்காக வேறு தகுந்த புதியபாதை அமைக்க முன்வந்திருக்கிறோமா! இல்லை! நமது மூதாதையர்கள், காஞ்சிக்கும் காசிக்கும் இடையிலேயே கூடத்தான் தகுந்த பாதை அமைக்கவில்லை.

சமீப வரலாற்றுக்காலம் வரையிலே, நமதுராஜாதிராஜாக்களே, ஒரு தேசத்திலிருந்து இன்னொரு தேசம் போக வேண்டுமானல் இடையிலே காடுமலை வனம்வனாந்திரங்களைக் கடந்துதானே போயிருக்கிறார்கள்—சும்மா கூட அல்ல—பத்திரகாளியின் வரத்தைத் முன்கூட்டிப் பெற்றுக்கொண்டு மந்திரித்த விபூதியும் மாந்தரீக வாளும் பெற்றுக்கொண்டுதான்! இங்கிலேயிலே, இங்கே கோலம்பஸ், வாஸ்கோடிகாமா, லிவிங்ஸ்டன், ஏது? எல்லாப்பாதையையும் எளிதில் கடந்துவர, ககன மார்க்கம் இருந்தது, அதிலே நாரதர் வருவார் அடிக்கடி! வேறு பாதை அமைத்தோர் வரலாறு இல்லையே. ராமராஜ்பத்தின்போதே, அயோத்தியிலிருந்து மிதிலைக்குப் போகும்போது, தண்டகாரண்ய வர்ணனைக்குக் கவி இடமளித்தாரே தவிர, இடையே இருந்த ஊர்விஷயமே இல்லையே. பஞ்சவடி, தண்டகாரண்யம் — சித்திரகூட பர்வதம்—இப்படித்தானே வர்ணனைகள்—பாதைஏது, பயம் இல்லாப்பாதை இல்லையே, பாதை சரியாக இல்லாத காரணத்தால்தான்போலும் நமது சாமிகளுக்குக் கூட, வேல், வில், சூலம், சக்கரம் முதலிய ஆயுதங்களோடு புறப்படவேண்டிய அவசியம் — மாடு, மயில், அன்னம், காக்கைபோன்ற வாகனங்களில் ஊர்ந்துபோக வேண்டிய தொந்திரவு இருந்ததாகக் கதைகளைதீட்டிவிட்டனர் பாதை இல்லை!

அருள் நெறியிலே அஞ்ஞானப் படுகுழி குறுக்கிட்டது, அது தெரிய ஒட்டாதபடி பற்பல தத்துவங்கள் என்ற தழைபோட்டு மூடப்பட்டிருந்தது.

அன்பு நெறிக்குக் குறுக்குச் சுவர்கள்போல், ஜாதி சமய, குலச்சண்டை சச்சரவுகள் இருந்தன — இதன் பயன் என்ன? ஒரு காலத்திலே 8000 கழு மரங்கள் தேவைப்பட்டன — அன்புப்பாதை இன்னமும் அடைபட்டுத்தான் கிடக்கிறது.

அரசியல் பாதையோ, அரண்மனைக்கும் கோபுர வாசற்படிக்கும் இடையே அமைக்கப்பட்ட சுழல் படிக்கட்டுகளிலே நடக்கும் சூதுமதியினருக்கே பயன்பட்டு, கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டினும் கடும் புலி வாழும் காடு நன்றே என்று கூறவேண்டிய நிலைக்குக் கொண்டுவந்து சேர்த்தது.

காதல்பாதையோ.........உத்தமி சிதைக்கே, காடு, இருமுறை; பிறகு பூமிக்கு அடியில், கொண்டுபோய்ப் பெண்ணைச்சேர்த்து விடுவதாகவும், சிதையின் மாமனுருக்கு, அறுபதினாயிரம் தேவிமார் கொண்ட அந்தப்புரத்துக்கும் அழைத்துச் செல்வதாகவும் இருந்தது — புராணப்பாதை.

பொருளாதாரப் பாதையோவெனில், கொடுத்து வைத்தது அவ்வளவுதான்! புண்யவானுக்கு இலட்சுமி கடாட்சம், என்ற பேச்சாகிய சதுப்பு நிலத்திலே நம்மை நடக்கவைத்து வேடிக்கை பார்த்தது.

சிற்றின்பம் பேரின்பம், காதல், கடவுள், எதற்கும் நமக்கு நல்லபாதை அமையவில்லை. ஏன்! நாம் அமைத்துக் கொள்ளவில்லை.

உரத்த குரலோன் காட்டிய வழி நடந்தோம், அரசியலில்.

கபடன் காட்டிய வழி சென்றோம், சமுகத் துறையில்.

பூஜாரி காட்டிய வழி நடந்தோம், அருள் பெறும் நெறியில்.

எத்தன் காட்டிய வழி நடந்தோம், பொருளாதாரத்துறையில்.

எனவே எவ்வழியும் சரியாக இல்லாதது, வழியற்று வகையற்றுப் போனோம் — அதைக் காணும் விழியற்ற நிலையிலும் நம்மில் பலர் இருக்கிறோம், மற்றும் சிலர், நிலைமையைக்கூற மொழியற்று முயலானோம்.

பாதை வேண்டும், புதுப்பாதை! காலராவா? பிளேக்கா? அதோ பாருங்கள் பழைய பாதை செல்பவன்—நேரே எங்கே ஓடுகிறான், மாரிகோயிலுக்கு பூஜாரி மன்னார்சாமியைக்கூப்பிட.

புதுவழியிலே காணுங்கள் வைத்தியசாலைக்கு — டாக்டர் சேகரைக் கூப்பிட.

திருமணமா? அதோ பழைய பாதை! புரோகிதன் வீட்டுக்குப் பிள்ளையின் தகப்பனார் போகிறார், நல்ல சகுனம் பார்த்துக்கொண்டு, நாராயணன் நாமத்தைப் பஜித்தபடி.

புதுப்பாதை பாருங்கள், 'பாஸ்கரன்' செல்கிறான், திருமயிலைக் கடற்கரைக்கு, 'திலகா'வின் திவ்யதெரிசனத்துக்கு, சகுனம் பார்த்து விட்டல்ல, சங்கடம் தரக்கூடிய நண்பனை நிறுத்திவிட்டு, சலவைச் சட்டை அணிந்துகொண்டு, "வதனமே சந்திர பிம்பமோ" பாட்டை, குழலோசை போல், பயின்றுகொண்டு, நடக்கிறான்.

ஆண்டவனைக் காண,பழைய பாதையிலே நடக்கும் நந்தனையும் பாருங்கள், வருக! வருக! என்று முனிசாமிப் பிள்ளையை அழைத்திடும் புது நெறியையும் பாருங்கள். பாதை அமைக்கவேண்டும் உரிமைக்காக— அது பகத்சிங் அமைத்ததுபோல, தூக்குமேடைக்கே கொண்டு செல்லட்டும் கவலையில்லை — சுபாஷ் பாபு அமைத்ததுபோல், பர்மாப் பாதையாக இருக்கட்டும் பயம் வேண்டாம்—இலட்சியம் எந்தத் திக்கில் இருக்கிறதோ அதைத் தேடிக் கண்டுபிடித்தாக வேண்டும் என்ற நோக்கத்துடன் பாதை அமைக்கவேண்டும்.

சாக்ரடீஸ்—லூதர்—விப்பர் போர்ஸ் – லெனின் சன்யாட்சென்—கமால்—ஆகியோர் அமைத்தனர் புதுப் புதுப் பாதைகள்.

வெளவாலும் வல்லூறும் வட்டமிடாதபாதை— வஞ்சகரின் வாழ்வுக்காக ஆக்கப்படாத பாதை—பாமரன் பாராளும் பண்பு தரும் பாதை—ஏழை என்றும் அடிமை என்றும் எவனும் இல்லை என்ற இடத்திற்கு நாம் போவதற்கான பாதை—இல்லாமை, போதாமை, தீண்டாமை, பாராமை இல்லாப்பாதை—எல்லார்க்கும் எல்லாம் உள்ளது என்ற எழில் தரும் பாதை—உழைப்போம் வாழ்வோம் என்ற உறுதி பிறக்கச் செய்யும் பாதை—இருண்ட வாழ்வுக்கு ஓர் மணிவிளக்கு கிடைக்கும் பாதை—தீரர்களின் இருப்பிடத்தை நமக்குக் காட்டும் பாதை,

"புனலிடை மூழ்கி பொழிலிடை உலவி
பொன்னார் இழையும் துகிலும் பூண்டு
கனிமொழி பேசி இல்லறம் நாடும்
காதல் மாதர் மகிழுறும் நாடு"

செல்ல—ஓர் பாதை தேவை. இதற்கு அஞ்சா நெஞ்சம் எனும் அருங்கற்கள் வேண்டும் அன்பு அறிவுடைமை எனும் கலவைச் சுண்ணம் வேண்டும், நம்பிக்கை எனும் கருவி வேண்டும், வீரர்கள் வேண்டும், அமைக்கும் போது, பழைமையின் வெப்பத்தால் ஆர்வம் பட்டுப் போகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும், தன்னலக்காரரின் தாக்குதலால, குருதி கொட்ட நேரிட்டாலும் கலங்காதிருக்கவேண்டும் — கலங்காதிருப்பது மட்டுமல்ல, புதியபாதை நமது குருதிபட்டு, செந்நிறமாகட்டும், ஆனால் பாதைஅமைக்கும் பணியில் வெற்றிகிடைக்கட்டும என்ற ஆர்வம் வேணடும்.

ஆன்றோர் அமைத்த வழியைவிட்டு, புதுவழி போகாதே, அருளுடையோர், ஞானப்பால் உண்டோர், அவதார புருஷர்கள், மெய்ஞானிகள் உரையை மீறாதே என்று இதமாகப் பேசி நம்மை இருட்டறையில் தள்ளிடுவோர் குறுக்கிட்டால், 'கட்டுக் கதைகளை விட்டுத் தள்ளடா குட்டு வெளிப்படுமே' என்று பண் பாடுவோம், புதுபபாதை அமைப்போம், இன்பபுரி புகுவோம், சக்திக்கேற்ற அளவு பெறுவோம்,

எல்லோரும் இன்புற்று இருக்க எண்ணுவதே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே

என்று ஏக்கத்துடன் பாடிய தாயுமானாரின் நனவாகாத கனவை, நிலையாக்குவோம்—நீங்களும் நானும் அதைச் செய்ய முடியும் — ஆம்! முடியும், முயன்றால்!

---